REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 13 | வைகாசி (மே) 2006 | பக்கம்12 | விலை 15/- | சுழற்சி 91

# படுகொலைகள் எவற்றைச் சாதிக்கப்போகின்றன!



வடக்கு கிழக்கில் நாளாந்தப் படுகொலைகள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. காலை விடிந்ததும் எத்தனை கொலைகள் எந்தெந்த ஊர்களில் யார் யார் கொலையுண்டனர் என்றவாறான செய்திகளையே பீதியுடன் மக்கள் பார்க்கவும் கேட்கவும் முடிகிறது. சுட்டும் வெட்டியும் குண்டெறிந்தும் கொடூரமாகக் கொல்லப்படும் நிகழ்வுகள் நீண்டு கொண்டே போகின்றன. இவ்வாறு தொடரும் கொலைகளின் நடுவே மிகவும் மிலேச்சத்தமான முறையில் தலைகளை வெட்டி எடுத்து முண்டங்களையும் முண்டங்களைக் காணாது தலைகள் மட்டும் விட்டுச் செல்லப்பட்டுள்ளதையும் காண முடிகிறது.

இவ்வாறான பயங்கரப் படுகொலைகளை ஆயுததாரிகளான பலதரப்பினருமே செய்து வருகின்றனர் என்பதே உண்மை நிலையாகும். ஆயுததாரிகள் தமக்கிடையில் ஒருவரை ஒருவர் கொல்கிறார்கள் என்பது ஒருபுறம் நடக்க நிராயுதபாணியான ஒன்றுமறியாத மக்கள் பலர் காரணமின்றியே படுகொலை செய்யப்படுவது தான் மிகப்பெரும் அவலமாகும். இவ்வாறான கொடூரப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி இல்லையா என்ற ஏக்கப் பெருமூச்சையே வடக்கு கிழக்கின் மக்கள் உட்பட வாழ்வின் மீது

தொடர்ச்சி 12ம் பக்கம் →

# நிழல் யுத்தத்தை எதிர்த்து சம்பள உயர்வை வற்புறுத்தி வெகுஜனப் போராட்டங்கள் அவசியம்

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு ஏற்ப தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய சம்பளத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். தோட்டக்கம்பெனிகள் கூறுகின்ற சமாதானங்களையோ அவற்றுக்கு துணைபோகும் தோட்டத்தொழிற்சங்கங்களின் சமாதானங்களையோ ஏற்றுக் கொள்ள முடியாது. தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயம் தோட்டக் கம்பெனிகளுக்கும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் சில தொழிற்சங்கங்களுக்கு மட்டும் உரிய விடயமல்ல. அதனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை பெற்றுக் கொள்வதற்காக தொழிற்சங்கங்கள். அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்துபட்ட வெகுஜன அமைப்பொன்றை ஏற்படுத்தி வெகுஜனப்போராட்டத்தில் இறங்க வேண்டும் என புதிய- ஜனநாயக கட்சி அறைகூவல் விடுக்கிறது.

இவ்வாறு இராகலை நகரில் நடைபெற்ற புதிய- ஜனநாயக கட்சியின் புரட்சிகர மேதினத்தில் உரையாற்றிய கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ. தம்பையா அழைப்பு விடுத்துள்ளார்.

பு.ஜ.கட்சியின் மலையகப் பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேச சபையின் உறுப்பினருமான தோழர் ச.பன்னீச்செல்வம் தலைமையில் மேதினக் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் பு.ஜ.கட்சியின் அரசியல் குழு உறுப்

## இராகலை மே தினக் கூட்டத்தில் உரை

பினர் சட்டத்தரணி சோ. தேவராஜா, கல்வியலாளர்கள் சி. இராஜேந்திரன், ஜெ. சற்குருநாதன் மற்றும் சிவராஜ், தொழிற்சங்கவாதி சண்முகராஜா, குயில்தோப்பு கலை இலக்கிய வட்டத்தின் மகேந்திரன், புதிய மலையகம் மகேந்திரன் உட்பட பலர் உரையாற்றினார்கள். கூட்டத்திற்கு முன் இடம்பெற்ற மேதின ஊர்வலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தியும், யுத்தநிறுத்தத்தை நிலைநிறுத்தி பேச்சுவார்த்தையை தொடங்கும்படி வற்புறுத்தியும் புரட்சிகர அரசியல் தலைமைத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஊர்வலத்தில் கார்ல் மாக்ஸ் ஏங்கல்ஸ் லெனின், ஸ்டாலின், மாஓ சேகுவேரா ஆகியோரின் படங்களுடன் மலையத் தியாகிகள் நடேசஐயர், சி. வி.வேலுப்பிள்ளை முல்லோயா கோவிந்தன் ஆபிரகாம் சிங்ஹோ சிவனு லட்சுமணன் ஆகியோரின் படங்களும் எடுத்துக் செல்லப்பட்டன.

புரட்சிகர மேதினக் கூட்டத்தில் தொடர்ந்து பேசும் போது தோழர் தம்பையா மேலும் குறிப்பிட்டதாவது.

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றும் அடுத்தகட்ட ஜெனீவா பேச்சுவார்த்தைக்குரிய ஏற்பாடுகள் பற்றிப் பேசிவரும் சூழலில் வடக்கு கிழக்கில் நிழல் யுத்தமே நடக்கிறது. அதற்கு வெளியில் ஆட்கடத்தல்கள், கொலைகள், கைதுகள் நடக்கின்றன. அரச மட்டத்திலும் அதற்குவெளியிலும் பாசிச நடவடிக்கைகள் பல்வேறு விதத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. இது நாட்டை ஒரு அபாயக்கட்டத்திற்கே இட்டுச் செல்கின்றது. இத்தகைய இக்கட்டான சந்தர்ப்பத்தில் யுத்த எதிர்ப்பு இயக்கம் பலமானதாக இல்லை. இடது சாரி ஜனநாயக சக்திகளை பிரதானமாகக் கொண்ட பலமான யுத்த எதிர்ப்பு

தொடர்ச்சி 12ம் பக்கம் →



இராகலை நகரில் இடம் பெற்ற புதிய - ஜனாநயக கட்சியின் மே தினக் கூட்டத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா, அரசியல் குழு உறுப்பினர் சோ.தேவராஜா ஆசிரியப் பிரதிநிதி வெ.மகேந்திரன் தொழிற்சங்கப் பிரதிநிதி சண்முகராசா ஆகியோர் உரையாற்றுவதை படத்தில் கானலாம்

# திருகோணமலையில் பேரினவாத வெறியாட்டம்
# பழிக்குப் பழி என மக்கள் படுகொலைகள்
# தொடர்கின்றன!

கடந்த சித்திரைப் புத்தாண்டு பிறப்பதற்கு இரண்டு நாள் முன்னதாக 12ம் திகதி பி.ப. 3.45 மணியளவில் திருகோணமலை மரக்கறிச் சந்தைப் பகுதியில் பாரிய குண்டு ஒன்று வெடித்தது. அதனால் அந்த இடத்தில் பதினான்கு பேர்வரை உயிரிழந்ததுடன் முப்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் தமிழர்கள், சிங்களவர், படைவீரர் உள்ளடங்குவர். யார் இந்தக் குண்டை வெடிக்க வைத்தனர், அதன் பின்னணி என்ன, இறந்தோர் தொகை யாது என்பவற்றின் உண்மையான விபரங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் குண்டு வெடித்த அரைமணி நேரத்தில் சிங்கள காடையர்களை உள்ளடக்கிய குண்டர் கூட்டம் வாள்கள், கம்பிகள், பொல்லுகளுடன் மத்திய வீதியில் இறங்கி தமது வெறியாட்டத்தை நடாத்தியிருக்கிறது. குறிவைத்து தாக்கப்பட்டு கொள்ளையடிப்பும் இடம் பெற்றது. சில கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. இங்கே குறிப்பிடக் கூடியது யாதெனில் வழமை போன்று பேரினவாத வெறியாட்டத்தை பொலிசார் உட்பட எந்த வொரு சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் ஆயுதப் படையினரும் தடுத்து நிறுத்தவில்லை என்பதாகும்.

ஏற்கனவே ஜனவரி 2ம் திகதி திருமலைக் கடற்கரையில் பரீட்சை மகிழ்ச்சியைப் பரிமாற நின்ற ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் அதிரடிப் படையினர் ஐவர் விளக்கமறியலில் இருந்து வருகிறார்கள். அதற்கு முன்பே திருகோணமலை பஸ் நிலையத்தில் திடீரெனப் புத்தர் சிலை வைக்கப்பட்டு ஆயுதப்படையினரின் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. அதற்குக் காட்டப்பட்ட எதிர்ப்பை அரசாங்கம் கண்டு கொள்ளவே இல்லை. பின்பு திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத்தலைவர் விக்கினேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார். அத்துடன் ஆங்காங்கே தாக்குதல்கள் எதிர்த் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இவற்றின் தொடர்ச்சியே 12ம் திகதி தாக்குதல்களும் தொடரும் வன்முறைகளுமாகும். புறநகர்ப் பகுதிகளிலும் தமிழர்கள் திட்டமிட்டே வெட்டியும் சுட்டும் எரித்தும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் மிக அநாகரிக முறையில் வெட்டப்பட்டிருக்கிறார்கள். இது வரை ஏற்பட்ட உயிர் உடைமை இழப்புகள் பற்றிய விபரங்கள் அறியப்படவில்லை.

பேரினவாத வெறியாட்டம் இடம் பெற்ற அன்றைய தினம் அரசாங்கம் கண்டும் காணாதது போன்றே நடந்து கொண்டது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தொலைபேசியில் தெரிவித்த கடுமையான வார்த்தைகளுக்குப் பின்பே அமைச்சர் ஒருவர், பொலீஸ்மா அதிபர் ஆகியோர் திருமலைக்கு விரைந்தனர். பொலீஸ் ஊரடங்கு பிறப்பித்து ஒரு நாடகமே அரங்கேறியது. இவை யாவும் பேரினவாத அரசாங்கங்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றி வந்த ஒன்றேயாகும். இப்போது இறந்தவர்களுக்கு நஷ்டஈடு என வாய்கரிசிப் பணம் தருவதாகக் கூறப்படுகிறது. வர்த்தகர்களுக்கும் இழப்பீடு என்று கூறப்படுகிறது. அதேவேளை தொடர்ந்தும் திருகோணமலையை அண்டியுள்ள பிரதேசங்களில் ஆங்காங்கே மக்கள் தாக்கப்படுகிறார்கள். தமிழ் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியே பாடசாலைகள் பொது இடங்களில் அகதிகளாக இருந்தும் வருகின்றனர்.

திருகோணமலையை முற்றுமுழுதான பௌத்த சிங்கள மேலாண்மைப் பிடிக்குள் கொண்டுவருவதே பேரினவாதிகளினதும் அரசாங்கங்களினதும் அடிப்படை திட்டமாகும். அதனை விரைவுபடுத்தும் அடிப்படையிலேயே ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற சக்திகள் செயலாற்றி வருகின்றன. புலிகள் இயக்கத்தின் தாக்குதல்களை முறியடிக்கும் செயற்பாடெனக் கூறி பேரினவாத வெறிச்சக்திகள் ஒன்றுமறியாத சாதாரண திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் மீது மிலேச்சத்தன மான தாக்குதல்களை நடாத்தி வருகின்றன. அதேவேளை சாதாரண சிங்கள மக்கள் பழிக்குப் பழி எனக் கூறிக் கொல்லப்படுகிறார்கள்.

இயற்கைத் துறைமுகத்தின் இருப்பினாலும் அதன் அடிப்படையிலான வளர்ச்சி மூலமும் முக்கியத்துவம் பெற்று வரும் திருகோணமலையில் தமிழர்களின் பாரம்பரிய இருப்பை குலைத்து எண்ணிக்கையை சிதறடித்து தமது பிடியை நிலை நாட்டவே அரசாங்கம் முதல் பேரினவாதக் கட்சிகள் வரை முயன்று வருகின்றன. கிழக்கை வடக்கிலிருந்து பிரித்தெடுக்கவும் திருகோணமலையை சிங்களமயமாக்கவும் தொடர்ந்து எடுக்கப்பட்டு வரும் பேரினவாத முயற்சியின் ஒரு பகுதியாகவே அண்மைய வெறியாட்டம் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்டுள்ளது என்பதே உண்மையானதாகும். இது இத்துடன் முடியப்போவதில்லை என்பதையே திருகோணமலையில் தொடரும் தாக்குதல்களும் பழிவாங்கும் எதிர்த்தாக்குதல்களும் எடுத்துக்காட்டுகின்றன. இஸ்ரேலிய சியோனிஸத்தால் பாலஸ்தீனப் போராளிகளும் பலஸ்தீன மக்களும் நாளாந்தம் எதிர் நோக்கும் அவலங்கள் போன்ற நிலைமையையே கிழக்கில் காணமுடிகிறது. நியாயமான அரசியல் தீர்வு காணப்படாதவரை இந்நிலை நீடிக்கவே செய்யும்.

குமரன்- திருமலை

# நாலும் நடக்கும் உலகிலே
நற்குணன்

## அஞ்ஞானமா அயோக்கியத்தனமா?

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு கூட்டத்தில் இடதுசாரி எதிர்ப்பு எழுத்தாளர் ஞானசேகரன் குழுமனப்பான்மையுடன் செயற்பட்ட இடதுசாரி விமர்சகர்கள் பற்றிப் புலம்பி முடித்த பின்பு, அவர்களுடைய மாணவர்கள் குரு சொன்னதையே தமது மாணவர்கட்குச் சொல்லிக் கொடுக்கிறதாகவும் முறைப்பட்டார்.

எனக்குத் தெரிய ஞானசேகரனின் மனதில் கைலாசபதியும் சிவத்தம்பியுமே இருந்திருக்க முடியும். அவர்களுடைய மாணவர்களில் பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் சித்திரலேகாவும் மௌனகுருவும் தான் நினைவுக்கு வருகின்றனர். பேராசிரியர் நுஃமான் அந்தக் கூட்டத்தில் இருந்ததாக அறிகிறேன். அவர் கைலாசபதியினதோ சிவதம்பியினதோ மாணவரல்ல. இந்த ஞானசூனியக் கருத்துக்கள் பற்றி அவர் கொஞ்சம் தெளிவுபடுத்தினால் நன்றாயிருக்கும்.தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் இந்தப் புளுகு மூட்டைகள் சொல்வதுதான் உண்மையாகிவிடும். வைத்ததுதான் சட்டமாகிவிடும்.

## என்ன சொன்னார்?

திருகோணமலைச் சம்பவங்கள் பற்றி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சனாதிபதி ராஜபக்ஷவைத் தொலைபேசியில் அழைத்துக் கடிந்து பேசியதாகச் சில தமிழ் ஏடுகள் புல்லரித்துப் போயுள்ளன. என்ன பேசினார் என்று எவருக்கும் தெரியாது. இப்போதைக்கு அவர் நமது சனாதிபதியை மெச்சிப் பேசமாட்டார் என நம்பலாம். தமிழ்நாடு சட்ட சபைத்தேர்தல் முடிந்த பின்பு நிச்சயமாக எல்லாப் பிழைகட்கும் விடுதலைப் புலிகளையே கண்டித்துப் பேசுவார் என நம்பலாம். அப்போது அவர் சொன்னவற்றின் முழு விவரங்களும் நமக்குத் தெரியப்படுத்தப்படும்.

## இவர்கள் எந்த இந்தியாவின் விசுவாசிகள்?

இந்தியாவும் அமெரிக்காவும் நேபாளத்தில் சனநாயக ஆட்சியை ஏற்படுத்த மன்னரை வற்புறுத்துகிற போது சீனா மன்னரது சர்வாதிகார ஆட்சியை ஆதரித்துத் தனது பிராந்திய மேலாதிக்கத்துக்கு வழி தேடுகிறதாக ஞாயிறு வீரகேசரியின் முன்பக்கத்தில் ஒருவர் கதை விட்டுள்ளார். மன்னராட்சிச் சர்வதிகாரம் சனநாயக ஆட்சிக்கு முடிவு கட்டி ஒரு வருடமாக இந்தியாவும் அமெரிக்காவும் மன்னருக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருந்தது. இப்போது முடியாட்சியை மக்கள் குடிமுழுக ஆயத்தமாகிவிட்ட நிலையில் சனநாயகத்தின் மூலம் அவரைக் காப்பாற்ற முயலுகிறார்கள் என்ற உண்மையை ஏன் இவர் போன்றவர்கள் மறைக்க வேண்டும்? பத்து வருடங்கட்கு முன்பு மாஓ வாதிகளின் கிளர்ச்சியால் நடுங்கத் தொடங்கிய வேளை சீனாதான் மாஓ வாதிகட்கு ஆதரவு தருவதாகக் கண்டித்து எழுதிய பத்திரிகையாளர்கள் இப்போது சீனா மன்னராட்சியை ஆதரிப்பதாக அழுது வடிக்கிறார்கள்.

இந்திய ஆட்சியாளர்கள் இப்போது அமெரிக்காவின் கைப்பாவையாகி வருகிற உண்மை இவர்கட்குத் தெரியாமலிராது. இந்தியாவில் மாஓ வாதிகளின் விடுதலைப் போராட்டம் வலுப்பெற்று வருவதும் இவர்கட்குத் தெரியாமலிராது. இவர்கள் எந்த இந்தியாவை நேசிக்கிறார்கள்? அமெரிக்க அடிமையான ஒரு இந்தியாவையா. அல்லது சுதந்திர இந்தியாவையா?

# மலையக மாணவி ஆசிரியர்களால் கெடுக்கப்பட்டார்
# வேலியே பயிரை மேய்ந்து கொண்டது
# பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டும்!

கடந்த மாதம் 27 ஆம் திகதி 600இற்கும் மேற்பட்டவர்கள் அட்டன் பன்ன மூரில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினர். பன்மூர் தோட்டத்தை சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவி யொருவரை இரண்டு ஆசிரியர்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்தும். சம்மந்தப்பட்ட ஆசிரியர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியும் அவ்வார்ப்பாட்டம் நடத்தப்பட்டது. குற்றஞ் செய்ததாகக் கூறப்படும் ஆசிரியர்களுள் ஒருவர் மலையக ஆசியர் சங்கமொன்றில் முக்கிய பதவி வகிப்பவர் என்றும் மற்றவர் இசைக்குழு வொன்றின் பாடகர் என்றும் தெரியவருகிறது. இவர்கள் மீது ஏற்கனவே பல குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவ் வாசிரியர்கள் இருவரும் பாதிக்கப்பட்ட மாணவியையும், அவரின் குடும்பத்தினரையும் அச்சுறுத்தி தமக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தால் மாணவியையும், அவரின் குடும்பத்தினரையும் விட்டு வைக்கப் போவதில்லை என்றும் எச்சரித்துள்ளனர். அட்டன் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போதும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அட்டன் பொலிஸில் சிறுவர், பெண்கள் மீதான குற்றச் செயல்களுக்கு ஏதிரான பிரிவொன்று இயங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் ஏனைய ஆசிரியர்களை பகிஷ்கரிப்பில் ஈடுபடுத்தப்போவதாக அந்த ஆசிரியர்கள் அங்கம் வகிக்கும் ஆசிரியர் சங்கத்தினர் எச்சரித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

ஆசிரியர் சங்கங்கள் இருப்பது ஆசிரியர் உரிமைகளுக்காகவே அன்றி ஆசிரியர்களின் கேடுகெட்டதனங்களைப் பாதுகாப்பதற்கல்ல. மலையகத்தின் படித்தவர்களில் அதிகமானோர் ஆசிரியர்களாவர். இனம் சமூகத்தினருக்கு வழிகாட்ட வேண்டியர்கள். ஆசிரியர் சமூகத்தில் மேற்படி வக்கிரப்புத்தி கொண்டவர்கள் இருப்பது முழு சமூகத்திற்கும் அவமானமாகும். அத்தகைய சமூகத் துரோகிகள் தண்டிக்கப்பட வேண்டும். மாணவிகளிடம் பாலியல் வக்கிரத்தை தீர்த்துக் கொள்பவர்கள் ஆசிரிய தொழிலிலே இருக்கக்கூடாது. அவர்களுக்கு சப்பைகட்டுவோரும் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவர்கள். குற்றஞ் செய்தவர்கள் செல்வாக்குடையவர்களாக இருப்பதால் நீதி மறுக்கப்பட முடியாது. பாதிக்கப்பட்ட ஏழை மாணவிக்கு நீதி வேண்டும். குற்றஞ் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

## இலக்கியச் சந்திப்பா இலக்கியப் புறக்கணிப்பா?

ஐரோப்பா வாழ் தமிழரின் அடுத்த இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சி ஜுலை மாதத்தில் லண்டனில் நடக்கவுள்ளது. அதன் ஏகபோக உரிமையைத் தன்வசம் எடுக்கக் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒரு முன்னாள் நாடகக் கலைஞர் தனக்குப் பிடிக்காத பலரையும் ஒதுக்கிவிட்டு நிகழ்ச்சியைத் திட்டமிட்டு வருகிறார். இவரது திட்டமிட்ட புறக்கணிப்பிற்கு முக்கியமான இரு ஈழத்து நாடகத் துறை கலைஞர்களான பாலேந்திராவும் தாசீசியஸும் உட்படப் பலரும் ஆளாகி உள்ளனர். இவர் போன்றவர்கள்தான் சனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் உலகிற்குப் போதிக்கிறார்கள்.

## சிறைச்சாலை என்ன செய்யும்?

'பைத்தியகாரன்' திரைப்படத்தில் "ஜெயிலுக்குப் போய் வந்த" என்ற என்.எஸ். கிருஷ்ணன் பாட்டைக் கொஞ்சப் பேராவது கேட்டிருப்போம். அதில் முதலாம் வகுப்பு சிறைக்கைதிகள் அனுபவிக்கும் வசதிகள் பற்றி நகைச்சுவையாகச் சொல்லியிருந்தார். நமது வெலிக்கடைச் சிறைக் கூடத்தின் நடுவே ஒரு நவீன சொகுசு பங்களா உள்ளதாம். அங்கே தூள் வியாபாரிகள் உட்பட்ட முக்கிய பிரமுகர்கள் எந்த விதமான கட்டு ப்பாடு மில்லாமல் சகல வசதிகளுடனும் வாழுகிறார்கள் என்று ஒரு செய்தி வெளிவந்துள்ளது. அது பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்று சிறைகளின் பிரதம மேலதிகாரி சொல்லியிருக்கிறார். 1983 ஜுலையில் வெலிக்கடையில் ஒன்றுக்கு இரு முறை நடந்த படுகொலைகள் பற்றியே தெரியாதவர்களல்லவா நமது சிறைக் கூடங்கட்குப் பொறுப்பாயிருக்கிறார்கள். பணக்காரக் குற்றவாளிகளுக்கு ஏது மனக்குறை!

# கந்தப்பொளை துப்பாக்கிச் சூட்டிற்கு எதிராக சிவில் வழக்குகள்

2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் 28 ஆம் திகதி கந்தப்பொளையில் நடைபெற்ற இனமோதலை அடுத்து பொலிஸாரும் இராணுத்தினரும் துப்பாக்கியால் சுட்டதால் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கும் காயப்பட்டவர்களுக்கும் அரசாங்கம் நட்ட ஈடு வழங்க வேண்டும் என்று நுவரேலியா மாவட்ட நீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. சுட்டுக் கொல்லப்பட்ட வீராசாமி ஜெயராமின் மனைவி வசந்தி 10 லட்ச ரூபா நட்டஈடு வழங்கும்படியும் விமலானந்தனின் மனைவி ஜெயேஸ்வரி 10 லட்ச ரூபா நட்டஈடு வழங்கும்படியும் கேட்டு வழக்கு தொடுத்துள்ளனர். இதைவிட படுகாயமடைந்த ஐந்துபேர் தலா மூன்றுலட்சம் ரூபாய் நட்ட ஈடு வழங்க வேண்டு மென்று கேட்டு வழக்கு தொடுத்துள்ளனர். பொலிஸாரும், இராணுவத்தினரும் பதற்றத்தை தணிக்க உயிரைப் பறிக்கும் விதத்தில் கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை தவிர்த்திருக்க வேண்டுமென்றும் மக்கள் மீது கூடிய கவனம் செலுத்தத் தவறிவிட்டனர் என்றும் அவர்கள் வன்மமாக நடந்துகொண்டதால் அவர்களது கடமையின் வரையறைகளுக் குட்பட்டு நடந்து கொள்ளவில்லை என்றும் அவ்வழக்குகளில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துமீறி நடந்து கொள்ளும் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் எதிராக நட்ட ஈடு கேட்டு வழக்கு தொடுத்து பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக வழக்கிடப்பட்டிருப்பது ஒரு புதிய முயற்சியாகும்.

இவ்வழக்கு முயற்சியானது இன மேலாண்மையால் அச்சுறுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்குச் செல்லாது ஒதுங்கி இருந்து வந்த மலையக மக்களுக்கு ஒரு வகை நம்பிக்கை தரும் செயற்பாடுமாகும். அன்று கந்தப்பொளையில் நடந்த துயரச் சம்பவங்கள் பற்றி ஆதிக்க அரசியல் தலைமைகளுக்கு அக்கறையே இல்லை. ஆனால் தமது குடும்பத்தவரை இழந்தவர்களும் படுகாயங்கள் பட்டவர்களும் துன்பநிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர் என்பதே உண்மை நிலையாகும்

# சர்வதேச சுதந்திர ஊடக மாநாடும் வறுமை ஒழிப்புக் கோரிக்கையும்

இம் மாதம் 1ம் 2ம் திகதிகளில் சர்வ தேச சுதந்திர ஊடக மாநாடு கொழும்பில் நடைபெற்றது. யுனஸ்கோ என்ற ஐ.நா. நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இம் மாநாட்டிற்கு இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்கியது. இதில் எண்பது நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். இலங்கையின் ஊடகவியலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஊடகவியலாளர்கள் தத்தம் நாடுகளிலும் உலக அளவிலும் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து கலந்துரையாடினர். ஊடகவியலாளர்கள் சிறைகளில் அடைக்கப்படுவது, கொல்லப்படுவது, சித்திரவதைகளுக்கு உள்ளாவது, கடத்தப்படுவது போன்றவை பற்றியும் பேசப்பட்டது.

இம் மாநாட்டின் மையத்தொனிப் பொருளாக உலகின் வறுமையை ஒழிப்பதற்கு ஊடகத்துறை ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் பேசப்பட்டது. ஆனால் இத் தொனிப் பொருளானது எந்தளவிற்கு அதன் உண்மையான அர்த்தத்தில் ஆராயப்பட்டது என்பது கேள்விக்குரியதாகும். இம் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஊடகவியலாளர்களே தவிர ஊடகங்களைத் தமது வருவாச்குரிய சொத்துடைமையாகக் கொண்ட ஊடகங்களின் சொந்தக்காரர்கள் அல்ல. இவ் ஊடகச் சொந்தக்காரர்கள்தான் "ஊடக சுதந்திரத்தைத்" தீர்மானிப்பவர்கள் என்பதை மறந்துவிட முடியாது. இத்தகைய ஊடக முதலாளிகளின் விருப்பங்களுக்கு அமையவே பெரும்பாலான ஊடகவியலாளர்கள் பணிபுரிய வேண்டி உள்ளது என்பதே உண்மைநிலை. இதற்கும் புறம்பான விதிவிலக்கான சில சுதந்திர ஊடகவியலாளர்கள் இருந்து வருகிறார்கள். அவர்கள் தமது உயிர்களைப் பணயம் வைத்து மனித நேயம் மிக்க பணிகளை ஆற்றி வரு கிறார்கள். சொத்துடமை மிக்க பெரும் ஊடக நிறுவனங்களின் இலாப நோக்கிற்காக பொய்ப்புனைவுகளையும் பிற்போக்கான கருத்துக்களையும் பல ஊடகவியலாளர்கள் சம்பளத்திற்கும் மேலதிக வருமானத்திற்காகவும் எழுதி வருகிறார்கள். அதேவேளை இன்றைய சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கும் சமூக அநீதிகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் எதிராகவும் எழுதியும் போராடியும் வருகின்ற ஊடகவியலளர்கள் ஒவ்வொரு நாடுகளிலும் இருந்து வருகிறார்கள். அவர்கள் எப்பொழுதும் சமூக அடிநிலையில் பல்வேறு ஒடுக்குமுறைகளின் மத்தியில் வாழ்ந்து வரும் மக்கள் சார்பாகவே தம் பணியினை ஆற்றி வருகின்றனர்.

ஆனால் இன்றைய உலகச் சூழல் மக்கள் சார்பானதாக இல்லை. ஏகாதிபத்திய உலகமயமாதல் பிரமாண்டமானதாகவும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு தரக்கூடிய சிரஞ்சீவி மருந்தாகவுமே காட்டப்படுகின்றது. உலகின் மிகப் பெரும் ஊடக நிறுவனங்களான சி.என்.என், பி.பி.சி. ஏ.எவ்.சி, ராய்ட்டர் போன்ற ஏகாதிபத்திய செய்தி நிறுவனங்களே உலகின் செய்திகளை துரிதகதியில் உலகிற்கு வழங்கி வருகின்றன. ஆனால் அச் செய்திகளின் ஊடாக உண்மைகள் எந்தளவிற்கு வருகின்றன என்பது நம்புவதற்கில்லை. அவர்கள் வெளியிடும் செய்திகள் கருத்துக்களில் முதலாளித்துவத்தின் விருப்பு வெறுப்புகள் உள்ளடங்கி இருப்பதே அடிப்படையானதாகும். அவ்வாறு வெளிவரும் செய்திகளையே ஏனைய நாடுகளின் ஊடகங்கள் மறு பரப்புரை செய்கின்றன. ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பு செய்வதற்கு முடிவு செய்து அதற்குரிய முன் தயாரிப்புகள் செய்தவேளை உலகளாவிய பரப்புரைகளைத் திட்டமிட்டே சி.என்.என், பி.பி.சி போன்ற ராட்சத ஊடகங்கள் தமது "சுதந்திர ஊடகப் பணியை" ஆரம்பித்துவிட்டன. அதற்குரிய ஊடகவியலாளர்களும் களத்தில் இறக்கப்பட்டனர். இன்றும் கூட ஈரான் அணு உற்பத்தி விவகாரத்திலும் இதே ஊடகங்கள் செயலாற்றத் தொடங்கிவிட்டன.

இவ்வாறான முதலாளித்துவ ஏகாதிபத்திய ஊடக ஆதிக்கத்திற்கும் அதற்காகப் பணிபுரியும் ஊடகவியலாளர்களுக்கும் மாறான நிலைப்பாட்டில் உண்மை நேர்மை மனிதநேயம் என்பனவற்றின் பக்கம் நின்று சகலவகை ஆதிக்கங்களையும் எதிர்த்து அம்பலமாக்கி வந்த ஊடகவியலாளர்களின் பெயர்கள் வரலாற்றில் ஆழப் பதிந்தவையாக இருந்தும் வருகின்றன.

உண்மையாகவே சுதந்திர ஊடகத்துறையினர் வறுமை ஒழிப்பிற்கு பங்காற்ற வேண்டுமாயின் இன்றைய உலகமயமாதலை எதிர்த்து அம்பலப்படுத்த வேண்டும். வளர்ச்சியடைந்த ஜீ 8 நாடுகளில் உள்ள பதினைந்து வீதத்தினர்தான் உலகின் எண்பத்தைந்து வீத செல்வாதாரங்களையும் வளங்களையும் அபகரித்துக் கொள்கின்றனர் என்ற உண்மை உலகமயமாதலின் பாரிய ஏற்றத்தாழ்வையே எடுத்துக் காட்டுகின்றது. இது வறுமையின் ஊற்றுக்கண்கள் எங்கிருக்கின்றன என்பதை இலகுவில் எடுத்தியம்புகிறது.

உலகின் வறுமை ஒழிப்பு என்பது ஏழ்மைப்பட்டவர்களுக்கு இரங்கி ஏதாவது அவ்வப்போது வழங்கிவருவதல்ல. அரசு சார்ப்பற்ற நிறுவனங்கள் வீசி வரும் எலும்புத் துண்டுகள் மூலமாக அல்ல. அடிப்படையில் ஏற்றத்தாழ்வு மிக்க இன்றைய சமூக அமைப்பை மாற்றி அமைத்து வளங்களையும் செல்வாதாரங்களையும் உரிய உழைப்பின் மூலம் தேடி அவற்றைச் சமமாகப் பங்கீடு செய்து சமூக நீதியை நிலை நாட்டுவதிலேயே வறுமை ஒழிப்பு தங்கியுள்ளது. இதனை எத்தனை சுதந்திர ஊடகவியலாளர்கள் புரிந்து கொள்கிறார்கள் என்பதே கேள்வியாகும்.

# அதிகரித்து வரும் தற்கொலைகள்

இலங்கையில் தற்கொலைபுரிவோரின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையின் குற்றவியல் சட்டத்தின்படி ஒருவர் தற்கொலைக்கு முயற்சிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ஒருவருக்கு தனது உயிரை மாய்த்துக் கொள்ள உரிமை இல்லை என்பதாகும். ஆனால் ஒருவர் உயிர்வாழ்வதற்குரிய அடிப்படைகளும் சூழலும் வாய்ப்புகளும் இல்லாத போதே ஒருவர் தனது உயிரை இழக்க வேண்டும் என்ற நிலைக்கு வருகின்றார். இத்தகைய தற்கொலைகளுக்கு அதனைச் செய்வோரை செய்ய முற்படுவோரை குறைகூறிப் பயன் இல்லை. அதற்குரிய சமூக அமைப்புச் சூழல் பற்றிச் சிந்திப்பதே சரியானதாகும்.

அண்மையில் ஒரு கருத்தரங்கில் உரையாற்றிய ஒரு பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர், 1990ம் ஆண்டு முதல் 2003ம் ஆண்டுவரையான 13 ஆண்டுகளில் இலங்கையில் 63 ஆயிரம் பேர் தற்கொலை புரிந்து கொண்டனர் என்ற தகவலைக் கூறினார். இதனால் உலகில் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கையில் இலங்கை முதலாம் இடத்தில் இருந்து வருகின்றது என்பதும் ஏற்கனவே வெளிவந்த புள்ளி விபரச் செய்தியாகும். இத்தகைய தற்கொலைகள் பெருமளவிற்கு பொருளாதாரக் காரணங்களாலேயே இடம் பெற்றுள்ளன. வறுமை, வேலை இன்மை, போதிய வருவாய் கிடையாமை, கடன், குடும்பச் சச்சரவு, கலாசாரச் சீரழிவு போன்றவைகளே தற்கொலைகளுக்கு காரணமாகியுள்ளன. பின் தங்கிய கிராமப்புற விவசாயிகள் மத்தியில் இத் தற்கொலை விகிதாசாரம் அதிகமானதாகும் எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தாராள பொருளாதாரம் தனியார்மயத்தால் நகரங்கள் வளர்கின்றன என்ற பொய்த் தோற்றம் காட்டப்படுகின்றன. ஆனால் கிராமங்கள் மென்மேலும் ஏழ்மைக்கு உள்ளாவதுடன் நகரங்களில் சேரிகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எனவே சமூக அமைப்பும் அதன் கீழான ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் பொருளாதார நெருக்கடிகளும் சமூக கலாசார சீரழிவுகளும் முடிவுக்கு கொண்டுவரப்படாமல் தற்கொலைகளைத் தடுத்து நிறுத்த முடியாது. இதனால் பாதிப்புறுவது உழைக்கும் சாதாரண மக்களேயாவர்.

# அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டம் தொடர்கிறது

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வை வலியுறுத்தி இடதுசாரி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கொழும்பு குணசிங்க புரத்தில் மே தினக் கூட்டத்தையும் ஊர்வலத்தையும் நடத்தின. அதற்குப்பிறகும் கூட அவர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் தயாரில்லை. ஓரளவு நியாயமான குறைந்தபட்ச சம்பள உயர்வை சிபாரிசு செய்த கதை சில அரச அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வாபஸ் பெற்றுக்கொண்டார்.அதற்கு பிறகு ஒன்றன்பின் ஒன்றாக சில சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டன. அவை சாதாரண எதிர்ப்பைக் கூட பூர்த்தி செய்யவில்லை. வாழ்க்கைச் செலவு உயர்விற்கு ஏற்ப சம்பள உயர்வை வற்புறுத்தி வரும் அரச ஊழியர்களின் தொழிற்சங்கம் அவ்வறான சுற்று நிருபங்களை நிராகரித்துள்ளன.

நியாயமான சம்பள உயர்வை வழங்கும் வரை தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. கல்வி சுகாதாரத் துறையினர் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இன்றைய விலைவாசி உயர்வால் சாதாரண தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அன்றாட வாழ்க்கைச் செலவை சமாளிக்கக் கூடியவாறு அவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பது முற்றிலும் நியாயமானதாகும்.

தொடர்ச்சியாக நடத்தப்படும் தொழிற்சங்கப் போராட்டங்களில் சம்பள உயர்வை வலியுறுத்தி வந்ததுடன் பிரத்தியேகமாக மேதினத்தில் வலி யுறுத்தியுள்ளமை அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைக ளாகும். இவற்றை கணக்கெடுக்காதுவிட்டால் தொடர்ச்சியான தொழிற்சங்க, வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக சம்பள உயர்விற்கான தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி அறிவித்துள்ளது. ஒரு புறத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அதற்குரிய பேச்சுவார்த்தையையும் இழுத்தடித்துச் செல்லும் அரசாங்கம் மறுபக்கத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு விடயத்திலும் இழுத்தடிப்பையும் அக்கறையின்மையையும் கடைப்பிடித்து வருகின்றது. இது மகிந்த சிந்தனை என்ற பெயரில் பழைய பாதையில் தான் விடயங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

# கண்டதும் கேட்டதும்

-சாந்தன்-

## ✦ விலை போகா மலையக மாணிக்கங்கள்

"கொள்கைக்காக வாக்களித்தவர்களுக்கும். ஒத்துழைப்பு நல்கிய இ.தொ.கா.விற்கும் விலைபோகாத சமூக உணர்வாளர்களுக்கும் மலையக மக்கள் முன்னணி பெருமையுடன் தலைவணங்குகிறது. மலையகம் எமது தாயகம். நாம் ஒரு தேசியம்" இவ்வாறு ஒரு பத்திகை விளம்பரத்தை ம.ம. முன்னணி சந்திரசேகரத்தின் படத்துடன் வெளியிட்டுள்ளது. ஏற்கனவே பல தடவைகள் மட்டுமன்றி இப்பொழுதும் மலையகம் தாயகம், தேசியம் என்பனவற்றை பேரினவாத அரசாங்கங்களுக்கு விற்று அரசியல் பிழைப்பு நடாத்திவரும் இவர்கள் விலைபோகாத மலையக மாணிக்கங்கள் போன்று அறிக்கை விடுவதில் வல்லவர்கள்தான். இவர்களை நம்பி ஏமாறும் மலையக மக்கள்தான் பாவம். இது எவ்வளவு காலத்தி ற்குத் தொடரும் என்பதே கேள்வி.

## ✦ கொக்கா கோலாவும் ஒரு அம்மாவும்

கொழும்பில் ஒரு தங்கு விடுதியில் ஒரு யாழ்ப்பாணத்து அம்மா ஒரு வருடத்திற்கு மேல் தங்கி இருந்தார். அவரது பிள்ளைகள் நான்கு பேர் வெளிநாடுகளில். கடைசி மகனை அனுப்பி வைக்கவே அவ்வாறு தங்கி இருந்தார். ஒரு வருடமுடிவில் அவருக்கு முதுகுகுத்து வலிநோ என நோய் தொடங்கியது. விஷேட வைத்தியரிடம் காட்டி பல பரிசோதனைகளும் இடம பெற்றன. அவற்றை நன்கு ஆராய்ந்து விஷேட வைத்தியர் அந்த அம்மாவிடம் கேட்ட கேள்வி "நீங்கள் மதுவகைகள் ஏதாவது எடுக்கும் பழக்கமுடையவரா?" என்பதாகும். ஆசார பூசாரம் மிக்க அந்த அம்மா திகைப்படைந்து அப்படி எந்தப் பழக்கமும் இல்லை என்றார். வேறு ஏதாவது குடித்து வருகின்றீர்களா எனக் கேட்பதற்கு கொக்கா கோலாவை நாள் தவறாது குடித்து வந்திருக்கிறேன் என்றார். "அம்மா அந்தக் கொக்கா கோலா குளிர்பானம் அல்ல. மதுசாரமும் ஏனைய நச்சு இராசயனங்களும் கலந்த ஒரு அமெரிக்க நச்சுப்பானம் அல்லவா "என்று கூறிய வைத்தியர் அதனால் உங்கள் இரண்டு சிறுநீரகங்களும் கடும் பாதிப்படைந்துள்ளன. எனக் கூறி மருந்துகள் எழுதிக் கொடுத்ததுடன் இனிமேல் அதனைத் தொடவேண்டாம் என்றும் அறிவுரை கூறினார். காசைக் கொடுத்து பேயைக் கொண்டது போன்றதும் தான் இக் கொக்கா கோலா சமாச்சாரம்

## ✦ என்.ஜீ.ஓ. களும் இளம் பெண்களும்

என்.ஜீ.ஓ.களில் வேலை செய்யும் இளம் பெண்கள் படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. பாலியல் ரீதியான வக்கிரங்கள் தீர்க்கப்படுகின்றன. அண்மையில் அம்பாறை காரைதீவைச் சேர்ந்த ஒரு இளம் பெண் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் ஒரு என்.ஜீ.ஓ. வில் வேலைசெய்து வந்தார். வீடு திரும்பும் போது வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின் விடுவிக்கப்பட்டார். பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமையே அவரது தற்கொலைக்கு காரணம் என்றே நம்பப்படுகின்றது. இப்பிரதேசத்தில் இயங்கி வரும் என்.ஜீ.ஓ களில் பணிபுரியும் உள்நாட்டு- வெளிநாட்டவர்கள் இவ் இளம் பெண்கள் விடயத்தில் தமது பணச் செல்வாக்கை செலுத்தி தம் இச்சைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் கருச் சிதைவுகள் அடிக்கடி இடம் பெறுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்களில் கூறப்படுகிறது. மேற்படி இளம் பெண்ணின் தற்கொலையிலும் என்.ஜீ.ஓ காரரின் கைவரிசை இருப்பதாகவே பேசிக் கொள்ளப்படுகிறது.

## ✦ வடக்கில் எரிபொருள் கொள்ளை

கடந்த ஏப்பிரல் 25ம் திகதி கொழும்பில் ராணுவத்தலைமையகம் முன்பாக இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து அன்று மதியம் தொடக்கம் மறுநாள் வரையும் ஏ- 9 பாதை போக்குவரத்திற்கு மூடப்பட்டது. ஒன்றரை நாள் மட்டுமே இத்தடை ஏற்பட்டது. ஆனால் வடபுலத்தில் எரிபொருட்கள் யாவும் பதுக்கப்பட்டன. எரிபொருள் நிலையங்களில் சிறிது நேர விநியோகத்தின் பின் "இல்லை" என்ற அட்டைகள் தொங்கவிடப்பட்டன. ஆனால் சந்திகள் வீதிகள் ஒழுங்கைகளில் சகல எரிபொருட்களும் ரூபா நூற்றி ஐம்பது இருநூறு எனக் கூட்டி விற்கப்பட்டன. சில இடங்களில் லீற்றர் இருநூற்றி ஐம்பது ரூபாவ்ரை சென்றது. எரிபொருள் நிலையங்களில் "இல்லாத எரிபொருள்" எப்படி வீதியோர விற்பனைக்கு வந்தது. இதில் அதிசயம் எதுவும் இல்லை. எல்லாம் எரிபொருள் நிலையங்களில் இருந்து பின் கதவு விநியோகம், பதுக்கல், கொள்ளை லாபம் தான். இத்தகைய கள்ளச் சந்தை கறுப்பு வியாபாரிகளுக்கு ஒரு முழுமையான யுத்தம் தேவைப்படுகிறது என்பதே உண்மையாகும்.

# இராணுவத் துணைப்படைக்கு ஆள்சேர்ப்பு மலையக இளைஞர்களை பலியிடும் செயல்

மலையகத்தமிழ் இளைஞர்களை இராணுவத் துணைப்படையில் சேர்த்துக் கொள்வதற்கான சதிகள் இடம் பெறுகின்றன. தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கல் யுத்தமாக தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்டு தீர்வு காணப்படாத நிலையில் தமிழ் மொழியை பேசும் இன்னொரு தேசிய இனமான மலையகத்தமிழ் மக்கள் மத்தியிலிருந்து இராணுவத்திற்கு– அது இராணுவ துணைப்படைக்கு (கூலிப்படையாக) இளைஞர்களை சேர்த்துக்கொள்வது அரசாங்கத்தின் பேரினவாத நிகழ்ச்சி நிரலாகும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிராக மலையகத்தமிழ் மக்களை கோடரிக்காம்புகளாக பயன்படுத்தும் முயற்சியாகும். மலையகத்தமிழ் மக்களையும் இலங்கைத் தமிழ் மக்களையும் மோதவிடும் முயற்சியாகும். மலையகத் தமிழ் இளைஞர்களை யுத்தகளத்தில் பலிகொடுக்கும் அபாய நடவடிக்கை ஆகும்.

மலையகத்தமிழ் இளைஞர்களை இராணுவ துணைப்படைக்கு சேர்த்துக்கொள்ளுவதற்கு பதுளை மாவட்டத்தில் பல இடங்களில் நேர்முகப் பரீட்சை நிலையங்கள் இயங்கின. எதிர்பார்த்தவாறு மலையக இளைஞர்கள் நேர்முகப்பரீட்சைக்கு செல்லவில்லை. சுகாதார பிரதி அமைச்சர் சுரேஷ் வடிவேலின் தூண்டுதலுக்கு இணங்க சில பேர் நேர்முகப்பரீட்சைக்கு சென்றுள்ளனர். அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கு யுத்தக்களத்திற்கே அனுப்பப்படுவார்கள் என்பது தெரிந்தவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நியமனங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு நியமனங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கைது செய்யப்பட்டு நியமனங்களை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவம் என்பது ஆளும் வர்க்கத்தின் படை. அதில் அடக்கப்படும் தேசிய இனத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதால் அத்தேசிய இனத்திற்கு நன்மை ஏற்பட்டு விடாது. மாறாக அடக்கப்படும் தேசிய இனத்திற்கு எதிராக அவ்வினத்திலிருந்து இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் கொடாரிகாம்புகளாக பயன்படுத்தப்படுவார்கள். மலையகத்திலிருந்து ரிசேர்வ் பொலிஸ்சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் மலையக பொலிஸ் நிலையங்களில் மலையகத் தமிழ் மக்களைப்படுத்துகின்ற பாட்டையாவரும் அறிவார்கள்.

எல்லா சேவைகளிலும் இனவிகிதாசாரம் பேணப்படவேண்டும் என்பது தேசிய இனப்பிரச்சினை தலைவிரித்தாடும் சூழ்நிலையில் பொதுவான கோரிக்கை ஆகும். ஆனால் இராணுவம் என்பது ஒரு உற்பத்தித்துறை அல்ல. யுத்த சூழ்நிலையில் அதற்கு ஆள்சேர்ப்பதும் உற்பத்தி செய்வதற்கல்ல.மாறாக மக்களை ஒடுக்குவதற்கும் சுடுவதற்குமேயாகும்.

இராணுவத்திற்கு ஆள்சேர்ப்பதன் மூலம் மலையக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுப்பதாகக் கூறுபவர்கள் வாக்குறுதி அளிக்கப்பட்ட மலையக இளைஞர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள்

தொடர்ச்சி 11ம் பக்கம்

# இப்படியும் சில தோட்ட வைத்திய அதிகாரிகள்

மலையகத்தில் இன்றும் தோட்டங்களில் வைத்தியசாலைகள், மருந்தகங்கள் இயங்குவதே இல்லை. தோட்ட வைத்திய அதிகாரிகளும் போதிய எண்ணிக்கையில் இல்லை. தோட்ட வைத்திய அதிகாரிகள் குறைந்த பட்ச வைத்திய அறிவுடன் பயிற்றுவிக்கப்பட்டவர்களே. அவர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

பதுளை மாவட்ட எம்.பி.சுரேஷ் வடிவேல் சுகாதார பிரதியமைச்சராக நியமனம் பெற்ற பிறகு சில புதியவர்கள் தோட்ட வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அவர்களில் சிலருக்கு குறைந்தபட்ச வைத்திய அறிவு இல்லாமல் இருப்பது மட்டுமன்றி மக்களுடனான உறவை பேணும் பக்குவமும் இல்லை. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்காமலேயே அவர்கள் வைத்தியர்களாக இருக்கப் பார்க்கின்றார்கள்.

கடுமையான நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களை அவர்களது லயன் அறைகளுக்கு சென்று வைத்தியர்கள் பார்ப்பதை தரக்குறைவாக நினைப்பதாகத் தெரிகிறது. அவர்கள் நோயாளர்களை தொட்டுப் பார்ப்பதையும் அருவருப்பாகவே கொள்கிறார்கள்.

நோயாளிகளை அருகில் சென்று நோய் பற்றி கேட்டு அறியாமலும் தொட்டுப் பார்க்காமலும் மலையகத் தோட்டப்புறங்களில் வைத்தியர்களாக இருக்க முடியுமா? தலவாக்கொல்லையிலுள்ள தோட்டமொன்றில் வயிற்றுக்கடுப்பினால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவனை அவன் தங்கியிருந்த வீட்டுக்கு சென்று பார்க்க விரும்பாத ஒருவர் தோட்ட வைத்திய அதிகாரியாக இருக்கிறாராம். அவர் பதுளை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். அச்சிறுவனுக்கு சிகிச்சை அளிக்க தயங்கியது மட்டுமன்றி அச்சிறுவனின் வீட்டாருடன் தேவையில்லாத வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டுக் கொண்டாராம். மலைய கத்தவர் ஒருவர் பிரதி சுகாதார அமைச்சர். ஆனால் தோட்டவைத்திய நிலையோ பழைய நிலையில் தான் இருக்கிறது.

# மலையகத்தில் மூன்றாவது அணியாம் ஊடகங்களின் திட்டமிட்ட புனைவு

அரசியலில் மாற்று அரசியல், மூன்றாவது அணி போன்ற சொற்களுக்கு அர்த்தம் தெரியாமல் ஊடகங்கள் பிரயோகிக்கின்றனவா அல்லது வேண்டுமென்றே பிழையான அர்த்தம் கற்பிக்கின்றனவா என்பது புரியவில்லை. அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையகத்தில் இ.தொ.கா, ம.ம.மு என்பனவற்றுக்கு மக்கள் பெருளவில் வாக்களிக்கவில்லை. சதாசிவத்தின் தலைமையிலான கட்சியின் சின்னமான மீன் சின்னத்திற்கும் அருள்சாமியினுடைய அருள் போட்டியிட்ட ஏணி சின்னத்திற்கும் (மனோ கணேசன் தலைமையிலான கட்சியினுடைய சின்னம்) குறிப்பிட்டளவு வாக்குகள் கிடைத்துள்ளன என்பதால் மலையகத்தில் மக்கள் மாற்று அரசியல் அணியை ஆதரித்துள்ளனர் என்று தமிழ் ஊடகங்களில் செய்திகள் கட்டுரைகள் என்பன வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

இதே ஊடகங்கள்தான் முன்பு இ.தொ.கா விற்கு மாறாக மலையகத்தில் எதுவுமில்லை என்று எழுதின. பின்னர் இ.தொ.கா. விற்கு மாற்றாக ம.ம.மு வந்துவிட்டது என்றும் எழுதின. தற்போது அருள்சாமி குழுவினரை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகின்றன.

மலையகத்தில் இருக்கின்ற பத்திரிகை நிருபர்களில் ஏறக்குறைய எல்லோருமே இ.தொ.கா, ம.ம.மு யிடமிருந்தும் தற்போது அருள்சாமி குழுவினரிடமிருந்தும் தாராளமாக வாங்கி உண்டுகளிப்பவர்கள் தான். அதனால் மலையக மக்களுக்குரிய உண்மையான மாற்று அரசியல் பற்றியோ இளைஞர்களின் எழுச்சி பற்றியோ, மலையகத்தில் செயற்படும் புரட்சிகர அரசியல் சக்திகள் பற்றியோ அவர்களுக்கு எழுத வேண்டிய தேவையில்லை. இத்தகையோருக்கு மலையக மக்கள் பற்றி எவ்வித அக்கறையும் கிடையாது.

அந்த நிருபர்களில் சிலர் தாங்கள் சேகரிக்கும் செய்திகளை உளவுப் படையினருக்கும் கொடுத்து வருகின்றனர் என்பது பகிரங்கமான விடயமே.

பிரதான தமிழ் நாழிதள்களின் தலைமைக் காரியாலயங்கள் தற்போது தொண்டமானையும், சந்திரசேகரனையும் வெறுப்பதற்கு காரணம் அவர்கள் அத்தலைமைக் காரியாலயங்கள் ஏற்றுக் கொண்ட தமிழ் தேசிய அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கவில்லை என்பதாகும். மலையக நிருபர்கள் தொண்டமானையும், சந்திரசேகரனையும் விட தற்போது அருள்சாமிக்கு முதுகு சொறிவதற்கு காரணம் அருள்சாமியின் கவனிப்பு கனமானதாக இருப்பதாலேயாகும்.

வீரகேசரி கார்மேகம் முதல் தற்போது மலையகப்பகுதிகளில் நிருபர்களாக கடமையாற்றுவர்கள் வரை எல்லோரும் மலையக மக்களுக்கு துரோகமிழைத்து வருகின்ற தொழிற்சங்க அரசியல் தலைமைகளின் அறிக்கைகளுக்கு முக்கியம் கொடுத்து பிரசுரித்ததுடன் அவற்றுக்கு அடிமை சேவகம் செய்தவர்கள் தான் என்றால் பிழையாகாது.

நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேச சபைக்கு மெழுகுவர்த்தி சின்னத்தில் போட்டியிட்ட புதிய– ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச செயலாளர் தோழர் பன்னீர் செல்வம் வெற்றி பெற்றார் என்பதை கட்சியின் பெயர் அவரின் பெயர் விபரங்களுடன் செய்திகளை வெளியிட எந்தவொரு மலையக பிரதேச நிருபர்களுக்கும் அக்கறை இருக்கவில்லை. பிரதான நாழிதழ்களின் தலைமைக்காரியாலயங்களுக்கும் அக்கறை இல்லை. ஒரு சொட்டு சாராயமோ, ஒரு சோற்றுப் பருக்கையோ விநியோகிக்காமல் வெற்றிபெற்றவர் பற்றி எழுத அவர்களுக்கு எப்படி அக்கறை வரும். அவர்கள் மேல் கொத்மலைத்திட்டத்தை ஆதரித்தவர்களை அம்பலப்படுத்தவில்லை. அத்திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்களை அம்பலப்படுத்தவில்லை. மாறாக நேர்மையாக போராடிவருபவர்களை நையாண்டிப்பண்ணி செய்தி வெளியிட்டனர். இது தான் பத்திரிகை தர்மம்.

தோட்டக்கோயில்களுக்கு சிலை கொடுத்து, சுடுதண்ணிப்போத்தல் கொடுத்து சாராயம், கோழி இறைச்சி, சோற்று பார்சல் கொடுத்து மக்களின் வாக்குகளை ஏமாற்றிப் பறித்துக் கொண்டவர்கள் மாற்றுத் தலைவர்களாக அப் பத்திரிகையாளர்களுக்கு தெரிகிறார்கள்.

அந்நிருபர்களின் நிரந்தர தொழில் கற்பித்தல் (ஆசிரியர்) அல்லது அவர்களின் மனைவிகள், உறவினர்கள் ஆசிரியர்களாக இருப்பதால் மத்திய மாகாண கல்வி அமைச்சர் அருள்சாமியை குளிர்விக்க செய்திகளை எழுதி வருகின்றனர். முன்பு வந்த கல்வி அமைச்சர்களுக்கு இவர்கள் துதி பாடினார்கள். துதி பாடினால் பாடி விட்டுப்போங்கள். ஆனால் மாற்று அரசியல் மூன்றாவது சக்தி என்றெல்லாம் பொய் எழுதி மலையக மக்களை ஏமாற்றி உண்மைகளை மறைக்க முயல்வதே விசனத்திற்குரியதாகும்.

இ.தொ.காவிற்கும் ம.ம.முன்னணி அரசியலும் எவ்வகையிலும் வேறுபட்டதல்ல. அவ்வாறிருக்கும் போது அவர்களை எப்படி மலையகத்தின் மாற்று அரசியல் அணியென்றோ மூன்றாவது அணியென்றோ அழைக்க முடியும்.

இருக்கின்ற இரண்டு அணிகளின் அரசியல் கொள்கைகளுக்கும் மாறாக ஆகக் குறைந்தளவு மக்களின் நலன்களையாவது அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் கொள்கை வேலைத்திட்டத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே அதனை மூன்றாவது அணியாகக் கொள்ள முடியும். நடைமுறையில் இருக்கின்ற மக்கள் விரோத அரசியலுக்கு நேர்மாறான மக்கள் சார்பு அரசியலே மாற்று அரசியலாகும்.

பேரினவாத ஆட்சிகளுக்கு அடிபணிந்து சலுகை அரசியலை முன்னெடுக்கும் மலையகக்கட்சிகளில் ஒரு ஆளுக்குப் பதிலாக இன்னொரு ஆள் அல்லது ஒரு கூட்டத்திற்கு பதிலாக இன்னொரு கூட்டம் குறுக்கு வழிகளில் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வது மாற்று அரசியலோ மாற்று அரசியல் தலைமையோ மூன்றாவது சக்தியோ ஆகாது.

மலையகத்தின் முன்னேற்றத்திற்கு மலையக செய்தி நிருபர்களும், தேசிய நாளிதழ்களின் தலைமைக்காரியாலயங்களும் எதையுமே உருப்படியாக செய்யாவிட்டாலும் பரவாயில்லை. மக்களை ஏமாற்றி குழப்பத்திற்குள்ளாக்கும் கருத்துக்களை திட்டமிட்டு பரப்பாமல் இருப்பது மேலானது.

அரசியல் ஆதிக்கம் செலுத்தும் பிற்போக்கு வாதிகளுக்கு தொடர்ந்து துணைபோகும் செய்தியாளர்களுக்கு எதிராக மக்கள்விழிப்பாக இருப்பதுடன் அவர்கள் எழுதும் செய்திகள் கட்டுரைகளின் பின்னால் உள்ள சுயநலத்தையும் பிற்போக்குத் தனத்தையும் கண்டு கொள்வது அவசியம்.

# மலையகத்தில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்கள்

மலையகப் பிரதேசங்களில் அண்மைய காலங்களில் அதிகளவிலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை பெண்கள் சிறுவர் மீதான பாலியல் வன்முறைகளும், குழுச்சண்டைகளும், தனிமனிதர்களுக்கிடையிலான வெட்டுக்குத்து எனப் பரந்து செல்கின்றது.

பெண்களும் சிறுவர்களும் வேலைக்குச் செல்லும் இடங்களிலும் வீடுகளிலும், வெளியிடங்களிலும் தமக்கு எதிரான வன்முறைகளை சந்திக்கின்றனர். போதை மிகுதியால் கணவன் மனைவியை தாக்குவதும் தந்தையே மகளை வல்லுறவுக்குட்படுத்துவதும் என குரூரச் சம்பவங்கள் இடம் பெற்ற வண்ணம் உள்ளன. மலையகத்தில் இராணுவத்தால் பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொலைச் செய்யப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவை பெருமளவில் இராணுவ முகாம்கள் உள்ள பிரதேசங்களிலும் நீர்தேக்கத்திட்டங்கள் அமைக்கப்பட்ட இடங்களிலும் நடந்தேறிய அவலச் சம்பவங்கள் ஆகும். இவை சட்டத்தின் முன் மூடி மறைக் கப்பட்டுள்ளன.

மேலும் குடும்பங்களில் ஏற்படும் சிறு சிறு சச்சரவுகள் வளர்ந்து ஒருவரை ஒருவர் வெட்டி கொள்ளும் அளவிற்கு நிலைமைகள் சென்றுவிடுகின்றன. அது மாத்திரமின்றி சாதிப்பிளவுகள் காரணமாக ஏற்படும் குழுச் சண்டைகளும், இளைஞர்களுக்கிடையில் ஏற்படும் குழுச்சண்டைகளும் பெருகி வருகின்றன. கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகளும் சில நேரங்களில் வன்முறைச் சம்பவங்களுக்கு வழி வகுத்து விடுகிறது.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை நிறுத்த அனைத்து மக்களும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இவ்விதமான வன்முறைகள் நமது பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு பிரச்சினைகளின் சீரழிவுகளின் விளைவானவைகளே என்பதை நமது இளம் தலைமுறையினர் விளங்கிக் கொள்வது அவசியமாகும். மேலும் போதைப் பொருட்களின் பாவனை சினிமாச் சீரழிவு போன்றன பெருமளவுக்கு தாக்கம் வகிக்கின்றன.

இவைகள் பற்றி கவலை கொள்ளாது தேவையற்றவைகளை பற்றிப் பேசி தோட்டப்புற மக்களின் கவனத்தைத் திசை திருப்பி மழுங்கடிக்கும் அரசுசார்பற்ற நிறுவனங்கள் (N.G.O) போலல்லாது மக்களை சமூக அரசியல் வழிகளில் விழிப்படையச் செய்ய வேண்டும். எனவே கருத்து ரீதியில் முன்னேறிய இளம் சக்திகள் இவ்விடயத்தில் கரிசனை எடுக்க வேண்டும்.

இந்த மாதிரியான பாலியல் வன்முறைகளும் பலாத்கார நடவடிக்கைகளும் எவ்வாறு எமது சமூகத்தை சிதைத்து பலமில்லாத ஒரு சமூகமாக மாற்றுகிறது என்பது பற்றிய தெளிவை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டிய காலத்தேவையும், சமூகத்தேவையும் எம்மிடையே விரிந்து காணப்படுகிறது. இலங்கையை பொறுத்தளவில் அதிக எண்ணிக்கையான தொழிலாளர்களைக் கொண்டிருக்கும் பிரதான துறையாகப் பெருந்தோட்டத்துறை இருந்து வருகிறது.

எனவே இவ்வாறான தொரு பெரிய மக்கள் தொகையை கொண்டுள்ள தொழிலாளி வர்க்கத்தை ஒன்று படாமல் இருக்கவும் சிதைத்து விடவும் ஏமாற்றவும் பலவிதமான முரண்பாடுகளும், சீரழிவுகளும் ஏற்படுத்தப்படுகின்றன. இவைகளை தடுத்து நிறுத்த இவைகளுக்கெதிராக போராட மலையகத் தலைமைகள் முன்வரமாட்டா. ஏனெனில் இவை நீடித்தாலே இவர்களது ஏமாற்றுக் கூத்துக்கள் நீடிக்க முடியும். ஆகவே மக்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ளவும், அதிலிருந்து மேவி சமூக அரசியல் விடங்களை விளங்கி முன்னெடுத்து நிலைநாட்டவும் முன்வரல் வேண்டும். மாற்றுப் பண்பாடுகளை வளர்த்து அதனூடாக சிறந்த சமூகத்தை கட்டியெழுப்பலாம். வர்க்கப் போராட்டப் பாதையில் இது போன்ற மேடுபள்ளங்களை செப்பனிட்டு பயணிப்பது அவசியமாகும். மலையகத்திற்கான புதிய பண்பாட்டை கட்டியெழுப்பி மக்களை அணி திரட்டுவது இன்றைய தேவையும் அவசியமுமாகும்.

–சுந்தரி–

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று13 வைகாசி 2006 பக்கம்12 விலை 15/– சுழற்சி 91
எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

## பிரதம நீதியரசரின் உரை ஆதங்கமா விமர்சனமா?

இலங்கையின் பிரதம நீதியரசர் சரத். என். சில்வா பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலை திணைக்களம் என்பன ஊழல் நிறைந்த திணைக்களங்களாகும் என்று சாடியுள்ளார். நீதிமன்ற பதிவாளர்களின் சங்க மாநாட்டில் கலந்து கொண்டு பேசும்போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். தனக்கு காட்ட முடியாத ஒரு துறையினர் சிறைச்சாலை துறையினர். இன்னொன்று பொலிஸ்துறையினர். அவை அவ்வளவுக்கு ஊழல் நிறைந்த இரண்டு துறைகளாகும் என்றும் கூறியுள்ளார். ஆனால் கடந்த வருட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் நீதித்துறையும் ஊழல் நிறைந்த துறையாகச் சேர்க்கப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நீதித்துறையின் ஊழல்கள் பற்றி கண்டித்து பேசி இருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

பொலிஸாரின் பாதுகாப்பு தனக்குத் தேவை இல்லை. பொலிஸாரிடமிருந்து தான் பாதுகாப்பாக இருக்கவே விரும்புவதாகவும் பிரதம நீதியரசர் தனது உரையில் தெரிவித்துள்ளார். எல்லாத் துறைகளின் தவறுகளையும் தண்டிக்கும் நீதித்துறையின் தலைவர் ஊழல்கள் பற்றி இப்படி வெளிப்படையாக பேசி இருப்பது சாதாரண மக்களுக்கு ஆச்சரியத்தை தராது. ஏனெனில் சாதாரண மக்கள் நாளாந்தம் ஊழல், மோசடிகளைக் காண்பவர்களாகவே இருக்கின்றனர்.

பொலிஸாரின் ஊழல், மோசடிகள் மட்டுமன்றி பொலிஸ் துறையினர் சிலர் நேரடியாகவே குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறைச்சாலைகளில் எல்லாக் கைதிகளும் சமமாக நடத்தப்படுவதில்லை. வசதிபடைத்தவர்களுக்கும் ஆதிக்கமுடையவர்களுக்கும் அங்கு சலுகைகள் இருக்கின்றன. சில சிறைக் கைதிகளுக்கு கொழும்பு வெலிக்கடைச் சிறையில் சொகுசான வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளதாகச் சர்ச்சைகள் கிளப்பப்பட்டுள்ளன.

நீதியமைச்சின் செயலாளர் கம்லத் வெலிக்கடை சிறைக்குச் சென்று பார்வையிட்ட பிறகு சில குற்றவாளிகளுக்கு சொகுசான வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதுடன் அது குறித்து ஆணைக்குழு விசாரணை நடாத்தப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

சிறைக் கைதிகளில் வசதிகுறைந்தவர்கள் மிகவும் மோசமாக நடத்தப்படுகின்றனர். தமிழ்ச் சிறைக்கைதிகள் இனரீதியில் பாரபட்சமாக நடத்தப்படுவதுடன் அவர்கள் பலவிதமான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். தமிழ்க் கைதிகள் ஏனைய கைதிகளால் துன்புறுத்தப்பட்டு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டு அவர்களைப் பார்க்கச் செல்வோரிடம் பணம் பறிக்கப்படுகிறது. சிறைக்கைதிகள் சக கைதிகளால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர். நீர்கொழும்பு சிறையில் எயிட்ஸ் நோயாளிகள் இருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறைகளில் சிறை அதிகாரிகளின் அத்துமீறல்கள் ஏறக்குறைய எல்லா நாடுகளின் சிறைகளிலும் இருக்கின்றன. அத்துடன் சக கைதிகளையும் பாவித்து சித்திரவதைகள் புரியப்படுவதுண்டு.

இலங்கைச் சிறைகளுக்குள் 1983இல் தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். தற்போது கூட சிறைகளுக்குள் தமிழ்க் கைதிகள் பாரபட்சமாக நடத்தப்படுவது பற்றி தொடர்ச்சியாக செய்திகள் வெளிவருகின்றன. மனித உரிமைகள் நடவடிக்கையாளர் ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இந்தியா போன்று இங்கு 'முக்கியமானவர்கள்' என்று சில வசதி படைத்தவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் பிரிவுகள் இல்லை. எல்லோரும் சமமாக நடத்தப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளையும், கட்டிட ஒழுங்கமைப்புகளையும் கொண்டதாகவே இலங்கைச் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் சில கைதிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கொழும்பு வெலிக்கடை சிறையில் சில கைதிகளுக்கு சொகுசுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று தற்போது விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. சிறைச்சாலை ஆணையாளர் றூமி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவர் அதனால் காலத்திற்கு முன்னதாகவே ஓய்வில் செல்லவிருப்பதாகத் தெரிகிறது.

அரச கட்டமைப்பில் பாதுகாப்பு படை, பொலிஸ், சிறைச்சாலைகள், நீதித்துறை என்பனவற்றை கொண்டே பாதுகாக்கப்படுகிறது. அரசின் தன்மையைப் பொறுத்து மேற்படி துறைகள் பெரும் எண்ணிக்கையான சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகளைக் கட்டுப்படுத்துவது வேறுபடும். ஆளும் வர்க்க நலன்களை பேணிப்பாதுகாப்பதில் அரசொன்றுக்கு பெரிதும் உதவுவதாகவே மேற்படி துறைகள் அமைந்துள்ளன. அத்துறைகளில் ஊழல்களும் மோசடிகளும் நிலவும் போது சாதாரண மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கையின் தற்போதைய பிரதம நீதியரசர் பல விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்த போதும் அவர் சிறைச்சாலை, பொலிஸ் துறை என்பனபற்றி மிகவும், வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டியுள்ளார். அதன் மூலம் அத்துறைகளின் தலைமைத் துறையாக இருக்கும் நீதித்துறை ஒன்றும் செய்ய முடியாமல் இருப்பதாக பிரதம நீதியரசர் வெளிப்படுத்தியுள்ளதாகக் கொள்ள முடியுமா?

அவ்வாறெனின் அவற்றை சீரமைப்பது எப்படி? அரச கட்டுமானத்தை சீரமைக்காமல் அத்துறைகளை மட்டும் சீரமைக்க முடியுமா? அதற்கு மனிதாபிமான கருத்துக்களும், பெறுமானங்களும் மட்டும் துணைபுரியுமா?

பிரதமா நீதியரசர் அத்துறைகளை சீரமைக்க வேண்டும் என்றா குறிப்பிடுகிறார்? சீரமைக்கும் வழிவகைகளையும் முன்வைப்பாரா?

முதலாளித்துவ அரசு யந்திரத்திற்கு முடிவு கட்டி அதனிடத்தில் தொழிலாளி வர்க்க அரசு யந்திரம் தோற்றுவிக்கப்படாத வரை ஊழல் மோசடி துர் நடத்தைகள் என்பன சிறைச்சாலைகளில் நீடிக்கவே செய்யும். இடையிடையே எழும் விமர்சனங்களும் சீர்திருத்தங்களும் தலையிடிக்கு தலையணையை மாற்றுவது போன்றதேயாகும்.

ஆசிரியர் குழு

## ஏகாதிபத்திய சூழ்ச்சி வலையில் மூன்றாம் உலகத் தலைமைகள்!

இலங்கை உட்பட மூன்றாம் உலக நாடுகளில் பல்வேறு பிரச்சினைகள் மோசமடைந்த நிலையில் காணப்படுகின்றன. பொருளாதார அரசியல் சமூக நெருக்கடிகள் தீவிரமடைந்து நிற்கின்றன. குறிப்பாக இன மொழி மத பிரதேசப் பிரச்சினைகள் போராட்டங்களாகவும் யுத்தங்களாகவும் வளர்ச்சி பெற்றுக் கொண்டுள்ளன. யுத்த இழப்புகள் இடப்பெயர்வுகள் மனிதப்படுகொலைகள் இன வக்கிர உணர்வுகள் மத வெறித்தனங்கள் என்பன மனித நேயமற்ற கொடூரங்களாக வளர்ந்து செல்கின்றன. இவை யாவற்றையும் மேலெழுந்த வாரியாகவும் குறுகிய கருத்து நிலைகளுக்கு ஊடாகவும் நோக்கினால் தவறான முடிவுகளுக்கும் நியாயமற்ற தீர்வுகளுக்குமே வந்து சேர முடியும். எனவே நமது நாட்டினதும் உலகின் மூன்றாம் உலக நாடுகளினதும் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளை வர்க்க இன அடிப்படையிலும் ஏகாதிபத்தியம் தனது உலக ஆதிக்கத்திற்காக விரித்து வைத்துள்ள வலைப் பின்னலுடனும் இணைத்து நோக்குவதன் மூலமே பிரச்சினைகளின் வேர்களைக் கண்டு கொள்ள முடியும். அவ்வாறு ஆழ்ந்து நோக்கும் போதே நாட்டின் சொத்து சுகங்களை அனுபவித்து உழைக்கும் வர்க்கங்களைச் சேர்ந்த மக்களைச் சுரண்டி அடக்கி ஒடுக்கி ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்த மேட்டுகுடி ஆளும் வர்க்க சக்திகளை உரியவாறு அடையாளம் காண முடியும். அத்தகைய சக்திகளுடன் அன்றிலிருந்து இன்று வரை இணைந்து நின்று தமது நலன்களைப் பேணிப் பாதுகாத்து தக்க வைத்து வருபவர்கள் ஏகாதிபத்திய வாதிகள் என்பதையும் புரிந்து கொள்ள இயலும்.

பதினாறாம் நூற்றாண்டிலிருந்து உலகின் பல நாடுகளைத் தமது கொலனியாக்கிக் கொண்டவர்கள் ஐரோப்பிய கொலனியவாதிகள். விஞ்ஞான தொழில் நுட்பங்களின் கண்டு பிடிப்புகளும் வளர்ச்சிகளும் ஐரோப்பிய முதலாளித்துவத்தை வேகமாக வளர்த்தெடுத்துக் கொண்டன. இவ்வாறு விருத்தி பெற்று வந்த முதலாளித்துவ நாடுகள் மூல வளங்களுக்காகவும் சந்தைகளுக்காகவும் போட்டியிட்டு வந்ததுடன் ஏகாதிபத்தியங்களாகவும் வளர்ச்சி கண்டன. இதனை ஆராய்ந்த மாமேதை லெனின் "முதலாளித்து வத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியம்" என வரையறை செய்து கொண்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் "சூரியன் அஸ்தமிக்காத சாம்பிராச்சியமாக" பிரித்தானியா விளங்கியது. பெரும்பாலான ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளை பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத் திருந்தது. இலங்கை சுமார் 450 ஆண்டுகள் வரை ஐரோப்பிய கொலனிய வாதிகளின் கைகளில் இருந்து வந்தது. அதில் ஏறத்தாள ஒன்றரை நூற்றாண்டுகள் வரை பிரித்தானியரின் காலடியின் கீழ் இருந்தது. இவ்வாறான முதலாளித்துவ நாடுகள் தமது உலகைப் பங்கு போடும் சந்தைப் போட்டியிலேயே முதலாவது இரண்டாவது உலக யுத்தங்களில் ஈடுபட்டன. இவ் உலக யுத்தங்களைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியம் முன்னணிக்கு வந்து கொண்டது. அதே நேரம் பிரித்தானிய ஏகாதிபத்தியப் புலியானது பற்கள் பழுதாகிய கிழப் புலியாகிக் கொண்டதன் மூலம் மக்களின் சுதந்திர விடுதலைப் போராட்டங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது போயிற்று. இச் சூழலில் தனது கொலனிகளை அரசியல் சுதந்திரம் என்ற பெயரில் கைமாற்றியும் கையிழந்தும் வந்தது. அவ்வாறான நிலையில் அமெரிக்கா தனது ஏகாதிபத்திய வளர்ச்சி காரணமாக "சுதந்திரத்திற்கு" பின்னான மூன்றாம் உலக நாடுகள் மீது தனது முழுக் கவனத்தைத் திருப்பி உலக ஆதிக்கத்திற்கான மூலோபாயத்திட்டங்களுடன் செயலாற்றுவதைத் தீவிரமாக்கிக் கொண்டது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னான காலப்பகுதியில் சோவியத் யூனியன் சீனம் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கியூபா வியட்நாம் கொரிய நாடுகளின் சோஷலிச முகாம் அமெரிக்காவிற்கு சிம்ம சொப்பனமாக விளங்கியது. அதே முகாம் நாடுகள்

**வெகுஜனன்**

சுதந்திரத்திற்குப் பின்னான ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அந்நாடுகளின் சுயசார்பு தேசிய பொருளாதாரங்களுக்கு உதவி ஒத்துழைப்பு வழங்கி வந்தன. இவை அனைத்தும் முதலாளித்துவ ஏகாதிபத்திய இருப்புக்கும் அதன் உலக ஆதிக்கத்திற்கும் பெரும் சவாலாகவும் மிரட்டலாகவும் அமைந்து கொண்டது.

ஆதலால் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் பனிப்போர் கால கட்டத்தை நன்கு பயன்படுத்தி புதிய புதிய வியூகங்களை வகுத்து

> **யுத்தமும் இரத்தமும் தான் ஏகாதிபத்தியத்தின் தெளிவான அடையாளச் சின்னங்களாகும். உலகின் இல்லாமைகள் தீமைகள் அநீதிகள் கொடூரங்களின் மூலவேராக இருந்து வரும் ஏகாதிபத்தியமே உலக மக்களின் இன்றைய பொது எதிரியாகும். இதனைத் தோற்கடிப்பதே உலக மக்களின் கடமையாகும்.**

செயலாக்கி வந்தது. அதனால் சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் வீழ்ச்சி கண்டன. தமது வியூகத்தின் ஒரு பிரதான பகுதியாக இஸ்லாமிய தீவிரவாதத்தை தூண்டி நிதி ஆயுத உதவிகளை வழங்கி சோஷலிசத்திற்கு எதிரான நிலைப்பாட்டை ஊக்குவித்தது. சோவியத் யூனியனில் இணைந்திருந்த பதினைந்து நாடுகள் தனித்தனி நாடுகளாகிக் கொண்டன. அவற்றில் இஸ்லாமிய நாடுகள் உள்ளடங்கி இருந்தன. இவ்வாறு உலகம் பூராவும் இஸ்லாமிய தீவிரவாதத்தை தமது உள்நோக்கங்களுக்காக ஆப்கானில் தலிபான்கள், ஈராக்கில், சதாம், சவுதியில் பில்லாடன் போன்றவர்களை ஊட்டி வளர்த்த அமெரிக்கா இன்று அதே இஸ்லாமிய தீவிரவாதத்தை உலகப் பயங்கரவாதம் எனக் கூறி அதற்கு எதிராக ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளில் தனது ஆக்கிரமிப்புப் படைகளை இறக்கி உலகப் பயங்கரவாதத்தை ஒழிப்பேன் என ஓலமிட்டும் நிற்கிறது.

மேலும் ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளின் நிலவுடைமை முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களுடன் கூட்டுச் சேர்ந்து அந் நாடுகளில் இருந்து வந்த இன மொழி மத முரண்பாடுகளை ஒடுக்கு முறையாக வளர்த்தெடுப்பதற்கு பின்புலமாக இருந்து செயற்பட்டு வந்துள்ளமையை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும் 50, 60களில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது உச்சநிலைக்குச் சென்ற ஒரு காலகட்டமாகும். மாக்சிச சோஷலிச அடிப்படையிலான வர்க்கப் போராட்டங்கள் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கங்களால் மிகுந்த உயிர்த்துடிப்புடன் முன்னெடுக்கப்பட்டன. அமெரிக்கா உட்பட உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் வர்க்க இன, நிற, சாதி ஒடுக்கு முறைகளுக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்களும் விடுதலைக்கான ஆயுதப் போராட்டங்களும் அவ்வேளை உச்சமாகி நின்றன. இவற்றை முறியடிப்பதிலேயே அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் தமது மூலோபாயத்திற்கு ஏற்ப பொருளாதார அரசியல் ராணுவ தந்திரோபாயங்களை வியூகங்களாக வகுத்து முன்னெடுக்கலாயினர். அதன் வழியில் இன மொழி மதத் தேசியங்களுக்கு எதிரான மூன்றமுலக ஆளும் வர்க்க தலைமைகள் முன்னெடுத்த ராணுவ ஒடுக்குமுறைகளுக்கு ஆலோசனை வழிகாட்டி அவற்றுக்கு நிதி ஆயுத உதவி வழங்கிக் கொண்டனர். அதேவேளை சி. ஐ. ஏ. உளவு நிறுவனம் இஸ்லாமிய தேசியவாத இயக்கங்கள் உள்ளிட்ட இன மொழித் தேசியங்களின் பேரில் போராட ஆரம்பித்த மூன்றாம் நாடுகளின் இயக்கங்களுக்கு குறிப்பாக இளைஞர் இயக்கங்களுக்கு மறைமுக வழிகளில் நிதி ஆயுதம் ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கி வந்தமை பகிரங்க இரகசியமாகும். குறிப்பிட்ட சில நாடுகளுக்கு தனது கூலிப்படைகளை அனுப்பியும் வைத்தது. தென்னமெரிக்க நாடுகளின் போதைப் பொருள் மன்னர்கள் என்போர் அமெரிக்காவின் செல்லப்பிள்ளைகளாகவே செயற்பட்டு வந்தனர். தேசியவாத இயக்கங்கள் சில நேரடியாகவும் சில ஐந்தாம் ஆறாம் தரப்புக்கள் ஊடாகவும் அமெரிக்க ஏகாதிபத்திய செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தமை காலப் போக்கில் வெளிவரவே செய்தன. இவ்வாறான இயக்கங்களைப் பயன்படுத்திய அமெரிக்கா தனது நலன்களுக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் முனைப்பாகச் செயற்பட்டு வந்துள்ளது. உதாரணம் யூகோஷலவேக்கியாவை உடைத்தது மட்டுமன்றி கோசோவாவிற்குள் அங்குள்ள இயக்கங்களைப் பயன்படுத்தி உட்புகுந்தும் கொண்டது.

மூன்றாம் உலக நாடுகள் கொலனித்துவத்திற்குப் பின்னான காலகட்டத்தில் எடுத்த முற்போக்கான திட்டங்கள் அதற்கான அமைப்புகள் யாவும் கடந்த நூற்றாண்டில் எண்பதுகளுக்குப் பின்பு சீர்குலைக்கப்பட்டன. அதற்கான ஒரு உதாரணமே மூன்றாம் உலக நாடுகளின் பலம் பொருந்திய அமைப்பாக இருந்து வந்த அணிசேரா இயக்கத்தைப் பலவீனப்படுத்தியமையாகும். அதே வேளை தாராளமயம் தனியார்மயம் உலகமயம் என்பவற்றின் ஊடாக் ஒரு ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலை நடைமுறைக்கு

தொடர்ச்சி 12 ம் பக்கம்

# 1956ல் தொடங்கிய ஆட்சிப் பயணம்

# 2006 ல் எங்கே வந்து நிற்கிறது?

1956 என்பது தமிழ்த் தேசியவாத அரசியலில் 'சிங்களம் மட்டுமே' என்ற பேரினவாத அரச கரும மொழிச்சட்ட மூலத்துடன் மட்டுமே சேர்த்து நோக்கப்படுகிறது. 1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் அடையாளப்படுத்திய முக்கியமான அரசியல் மாற்றங்கள் பற்றிய அக்கறையைச் சிங்கள மொழிச் சட்டம் பற்றிய வாதங்கள் மேவியுள்ளன என்பது தமிழ் ஊடகங்களைப் பொறுத்த வரை மறுக்க இயலாத, வருந்தத் தக்க உண்மை. 1956 ஒரு சாராரைப் பொறுத்த வரை இலங்கையின் சீரழிவினது தொடக்கப் புள்ளி. இன்னொரு சாராருக்கு நாட்டினதும் மக்களதும் உண்மையான விடுதலைக்குக் கட்டியங் கூறிய ஆண்டு. அது எல்லாருக்கும் ஒரே மாதிரித் தெரிய நியாயமில்லை. ஒவ்வொருவரது நிலைப்பாடும் அவரவரினது சமூகப் பார்வை மீதும் வர்க்கச் சார்பு மீதும் தங்கியிருப்பது தவிர்க்க இயலாதது.

எஸ். டபிள்யூ ஆர். டி பண்டார நாயக்க ஒரு இடதுசாரியோ இடதுசாரிகட்கு அனுதாபமானவரோ அல்ல. வர்க்க அடிப்படையில் நோக்கினால் அவர் இலங்கையின் ஆளும் நிலப் பிரபுத்துவ முதலாளியப் பரம்பரையில் வந்த ஒருவர் தான். 1951ம் ஆண்டு அவர் யூஎன்.பியிலிருந்து விலகியதற்குக் காரணம் டி.எஸ். சேனநாயக்கவிற்குப் பிறகு தனக்குக் கிடைக்க வேண்டிய கட்சித் தலைமையும் பிரதமர் பதவியும். டி.எஸ். சேனநாயக்கவின் மகன் ட்டலி சேனநாயக்கவிற்குப் போவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டமைதான். எனினும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் எழுச்சிகள் பண்டாரநாயக்கவின் புதிய அரசியலைத் தீர்மானித்தன. 1951ம் ஆண்டு உருவான ஸ்ரீ.ல.சு. கட்சி 1952 தேர்தலில் ஒரு சில இடங்களிலேயே வெற்றி பெற்றது. யூஎன்.பி ஆட்சிக்கு எதிரான அதிருப்தியின் வெளிப்பாடாக 1953 ஹர்த்தால் அமைந்தது. அதை அடக்குவதற்கு யூ என். பி கையாண்ட வழிமுறைகள் யூ என். பிக்கு எதிரான உணர்வைப் பொதுமக்களிடையே வலுப்படுத்தின. இந்தப் பின்னணியிலேயே பண்டாரநாயக்க 1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கான அரசியல் வியூகத்தை வகுத்தார்.

'ஐந்து பெரும் சக்திகளின் அணி' தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர், மாணவர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், பௌத்த பிக்குமார் (பஞ்ச மஹா பலவேகய) என்ற பேரில் பண்டாரநாயக்க சிங்கள தேசிய முதலாளிய நலன்களை முன்னெடுத்தார். அதில் சிங்கள நடுத்தர வர்க்கத்தினரது பங்கு பற்றுதலுக்கு ஏற்ற விதமாக வகுக்கப்பட்ட கொள்கைகள் கொலனி ஆதிக்கக் காலச் சிந்தனையின் ஆதிக்கத்திற்கு எதிராக அமைந்தன என்பது முக்கியமானது. கொலனி ஆட்சியின் கீழ் அரச நிருவாகத்தில் ஆங்கில மொழியின் ஆதிக்கமும் ஆங்கிலம் படித்த நகரத்து உயர் நடுத்தர வர்க்கத்தினருக்கு எதிரான உணர்வும் சிங்கள தேசியவாதத்திற்கு உரமூட்டின. கல்வித் துறையில் கிறிஸ்துவ, கத்தோலிக்கப் பாடசாலைகளின் ஆதிக்கத்திற்கு எதிரான உணர்வும் அரச உத்தியோகங்களில் தமிழரதும், கிறிஸ்துவர்க ளதும் எண்ணிக்கை விகிதாசாரத்தில் அதிகமாக இருந்ததும் சிங்கள பௌத்த நடுத்தர வர்க்கத்தினரிடையே கசப்பிற்குக் காரணமாயிருந்தது.

சிங்களப் பேரினவாதத்தின் பிரதிநியாக இருந்த யூஎன்.பி. முதலில் தனது தரகு முதலாளி வர்க்கத்திற்கும் நிலவுடைமை வர்க்கத்திற்கும். விசுவாசமாக இருந்தது. ஏகாதிபத்தியத்துடன் அதனுடைய உறவு மிக வலிதாக இருந்தது. யூ என். பியின் பேரினவாதம் ஆளும் வர்க்க நலன்களைச் சார்ந்து மலையகத் தமிழரின் வாக்குரிமைப் பறிப்பு, தெற்கின் நிலவுடைமையாளரது நலன்களைப் பேணுகிற விதமாகக் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

பண்டாரநாயக்கவின் அரசியல் சூழலின் நிரிப்பந்தத்தால் தேசிய முதலாளிய நலன்களை முன்னெடுத்தது. ஸ்ரீ.ல.சு.கட்சி தோற்றுவிக்கப்பட்ட போது அதில் தமிழர்களும் முக்கியமான பொறுப்புக்களில் இருந்தனர். பண்டாரநாயக்க 1956ல் சிங்கள நடுத்தர வர்க்கத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காகவே சிங்களமே அரச கரும மொழி என்ற கொள்கையை முன்வைத்தார். ஹர்த்தாலுக்குப் பின்பு பிரதமராக வந்த சேர் ஜோன் கொத்தலாவல சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடைய அரசகரும மொழிகளாகும் என்று அறிவித்ததை மாற்றிச் சிங்களமே அரச கரும மொழி என்ற தீர்மானம் 1956ல் யூஎன்.பி யின் களனி மாநாட்டில் மாற்றப்பட்டது. அதையடுத்தே பண்டாரநாயக்க தான் வென்றால் 24 மணி நேரத்தில் சிங்களம் அரச கரும மொழியாக்கப்படும் என்று அறிவித்தார்.


பண்டாரநாயக்க சிங்களத் தேசியவாதத்தைத் தன் அரசியல் தந்திரோபாயமாகப் பயன்படுத்தினார் என்பதில் ஐயமில்லை. எனினும் 1956ம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி தனித்துப் போட்டியிட்டு வென்றிருக்க இயலாது. அதை விட யூஎன் பியின் ஏகாதிபத்திய சார்பு நிலவுடைமை- முதலாளிய நலன் சார்ந்த கொள்கைகட்கு முற்றிலும் மாறானதென்று மக்கள் தெளிவாக அடையாளங் காணக் கூடிய ஒரு அரசியல் நிலைப்பாடில்லாமல் மக்களது ஆதரவை வென்றிருக்கவும் இயலாது. எனவே தான் தீவிர இடதுசாரி நிலைப்பாட்டிலிருந்து தேசியவாத அரசியலை நோக்கிப் பெயரத் தொடங்கிய பிலிப் குணவர்த்தன முதல் அப்பட்டமான சிங்களப் பேரினவாதிகளான ஆர்.ஜி. சேனநாயக்க கே.எம்.பி. ராஜரத்ன போன்றோருடன் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற ஒரு கூட்டணியை அமைத்ததோடு சமசமாஜக் கட்சியுடனும் கம்யூனிஸ்ற் கட்சியுடனும் தேர்தல் உடன்படிக்கைகளைச் செய்ததன் மூலமே பாராளுமன்றத் தேர்தலில் யூஎன்.பியை முறியடிக்க இயலுமாயிற்று.

பண்டாரநாயக்க தேர்தலில் பெரும்பான்மையை வென்றபோதும் அவர் அரசாங்கத்தை அமைக்காமல் தடுக்கும் வல்லமை பிரித்தானிய அரசியின் பிரதிநிதியும் ஆளுனர்நாயகமுமான ஒலிவர் குணதிலக்கவுக்கு அப்போது இருந்தது. எனவே அமைச்சரவையை அமைக்கும் பேர்து முதலாளிய நலன்களுக்குப் பல விட்டுக்கொடுப்புக்கள் தேவைப்பட்டன. அவற்றில் ஒன்று ஸ்ற்றான்லி டி சொய்ஸாவை நிதி அமைச்சராக்கியது. பிலிப் குணவர்த்தன எதிர்பார்த்த முக்கிய பதவிக்குப் பதிலாக விவசாய அமைச்சு அவருக்கு வழங்கப்பட்டது. ஒரு கூட்டரசாங்கத்தின் பல்வேறு நெருக்குவாரங்களையும் பண்டாரநாயக்க

**~மோகன்~**

அரசாங்கம் சந்தித்தது. பிலிப் குணவர்த்தனவின் நெற்காணிச் சட்டமூலம் ஒரு அரைகுறையான காணிச் சீர்திருத்தமாக மட்டுப்படுத்தப்பட்டது. அதே வேளை முக்கியமான சில தேசிய நடவடிக்கைகளாகத், திருகோணமலைக் கடற்படைத் நளத்தையும், கட்டுநாயக்க விமானத்தளத்தையும் பிரித்தானிய ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கை அரசாங்கம் பொறுபேற்றது. அந்நியக் கம்பனிகளின் கட்டுப்பாட்டிலிருந்து கொழும்புத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டது. சில பஸ் முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்த பஸ் சேவை தேசியமயமாக்கப்பட்டு அரச பஸ் சேவையாகப் பரவலாக்கப்பட்டது. எனினும் அந்நிய முதலாளிகட்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் பற்றி எதுவும் செய்ய இயலாதபடி தேயிலை வணிகத்தின் மீது பிரித்தானியருக்கு இருந்த ஆதிக்கம் தடுத்தது.

1951 அளவில் சர்வதேசச் சந்தையில் அரிசி விலை உயர்வு காரணமாக இலங்கை சீனாவுடன் அரிசி- ரப்பர் வணிக





ஒப்பந்தமொன்றை ஏற்படுத் தியதைத் தவிர சோஷலிஸ நாடுகளுடன் எந்த விதமான நல்லுறவும் 1956 வரை பேணப்படவில்லை. 1956க்குப் பின்பே சோவியத் யூனியனுடனும் சீனாவுடனும் ராஜ தந்திர உறவு நிறுவப்பட்டது. அதை விடவும் உலக அலுவல்கள் பலவற்றில் இலங்கை ஏகாதிபத்திய விரோத நிலைப்பாட்டை எடுத்தது. 1957 சுயெஸ் பிரச்சனையில் இலங்கை எடுத்த நிலைப்பாடு தொடக்கம் 1977 வரை கடை ப்பிடிக்கப்பட்ட அணிசேரா நிலைப்பாட்டை 1965- 70 காலப் பகுதியில் யூஎன்.பி யாற் கூட முற்றாகக் கைவிட இயலவில்லை. 1956 முதல் 1965 வரை நிறுவப்பட்ட புதிய ராஜதந்திர உறவுக ளும் அணிசேரா நாடுகளிடையே இலங்கை தனக்காக வென் றெடுத்த இடமும் அதை உறுதிப்படுத்தின.

இன்றைய உலகமயமாக்கல் திட்டத்தின் கீழ் மேலை நாடுகள் தங்களது நவீன தொழில்நுட்பத்தை மூன்றாமுலக நாடுகளில் பலவேறு நோக்கங்கட்காகத் திணிப்பது மூன்றாமுலக நாடுகளின் தொழில் விருத்திக்காக அல்ல. மாறாக மூன்றாம் உலகின் மலிவான கூலி உழைப்பைப் பாவிக்கவும் மூன்றாமுலக நாடுகளின் பொருளாதாரம் பெரிய முதலாளிய நாடுகளின் பிடிக்கு உட்பட்டு இருக்கும் படி உறுதிப்படுத்தவுமே கொலனி ஆட்சியிலிருந்து இரண்டாம் உலகப்போருக்கும் பிறகு விடுதலை பெற்ற நாடுகளில் சுதந்திரமான தொழில் வளர்ச்சியை வலிய முதலாளிய நாடுகள் ஊக்குவிக்கவில்லை. சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பின்பு சீனாவும் மேலை முதலாளிய நாடுகளின் ஏகாதியத்திற்கு ஆப்பு வைத்தன. இலங்கையின் சுயாதீனமான வெளிநாட்டுக் கொள்கையை முன்னிட்டு மேலை நாடுகள் செலுத்திய பொருளாதார அழுத்தத்திற்கு ஈடுகொடுக்க சோஷலிஸ நாடுகளுடனான நல்லுறவு உதவியது.

1956 தேர்தலோ 1960 ஜூலை தேர்தலோ 1970 தேர்தலோ இலங்கைக்குச் சோஷலிஸ ஆட்சியைக் கொண்டுவரவில்லை. ஆனாலும் யூஎன்.பி ஆட்சியின் கீழ் நடைபெற்றிருக்க இயலாத பல சமூக பொருளாதார சீர்திருத்தங்கள் 1956க்குப் பின்பு நடைபெற்றன. இவற்றில் எல்லாமே பண்டாரநாயக்க முன்கூட்டியே திட்டமிட்டவை என்று சொல்ல முடியாது. எனினும் 1956ம் ஆண்டு கட்டவிழ்த்துவிடப்பட்ட வெகுசன அரசியலின் நெருக்குவாரங்கள் பல முற்போக்கான நடவடி க்கைகட்கு வழி செய்தன. இவை எல்லாமே எதிர்பார்த்த அளவுக்கு நல்ல விளைவுகளைத் தந்தன என்று சொல்ல இயலாது. சில நடவடிக்கைகளின் நோக்கங்கள் முற்போக் கானவை என்று சொல்வது இயலாதது. எனினும் பாராளுமன்ற அரசியலின் கீழ் இடதுசாரிக் கட்சிகளின் ஒத்துழைப்பில் தங்கியிருந்த ஒரு தேசிய முதலாளிய ஆட்சியிடம் எதிர்பார்க்கக் கூடியளவுக்குச் சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன எனலாம். இவற்றைக் கவிழ்ப்பதற்கு 1965-70 கால யூஎன்.பி. ஆட்சிக்கு இயலாததற்கு அதற்குப் பாராளுமன்றப் பெரும்பான்மை வலிமை குறைவாக இருந்தது ஒரு காரணம். அதை விட, ஸ்ரீ.ல.சு. கட்சியின் தலைமையில் 1956 முதல் 1965 வரை மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குப் பொது மக்களிடையே பரவலான செல்வாக்கு இருந்ததும் ஒரு காரணம்.

இரண்டு பாராளுமன்ற இடதுசாரிக்கட்சிகளுடன் கூட்டரசாங்கம் அமைத்த காலத்தில் நடந்ததை விட முக்கியமான ஏகாதிபத்திய விரோத சமூக சீர்திருந்த நடிவக்கைகள் 1965க்கு முன்பு, முக்கியமாக 1960- 65 கால இடைவெளியில் நடந்தன. பாராளுமன்ற இடதுசாரிகளது அரசியல் சந்தர்ப்பவாதத்தின் விளைவாக, தேசிய முதலாளித்துவத்தின் மீது அவை அழுத்தஞ் செலுத்துவதற்கு மாறாகத் தேசிய முதலாளித்துவத்தின் மீது அவை தங்கியிருக்கவும் தேசிய முதலாளியத்தின் பேரினவாதத்திற்குப் பணிந்து போகவும் நேர்ந்தது. வெகுசன அரசியல் என்பது வர்க்கக் கண்ணோட்டத்திலான வழி நடத்தல் இல்லாத போது எங்கே கொண்டு போய்விடும் என்பதற்கு இடதுசாரிகளுடைய பாராளுமன்ற அரசியல் சமரசங்களிலிருந்து நாம் சில பாடங்களைக் கற்கலாம்.

1970- 77 கால கட்டத்தில் இலங்கை தனது ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக நின்றாலும், தேசிய பொருளாதாரத்தை முன்னெடுப்பதில் ஏகாதிபத்தியத்தின் கிடுக்கிப்பிடியிலிருந்து அதனால் விடுபட இயலவில்லை. இக் காலகட்டத்தில் ஏகாதிபத்தியம் உலகளவில் பல முனைகளில் தோல்வி கண்டாலும், நவகொலனியமாகத் தன்னை மீள் வார்ப்பும் செய்து ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்குத் தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டது. அதற்கு முகங்கொடுப்பதாயின் தேசிய முதலாளியம் தொழிலாளிவர்க்கத்துடன் தன்னை நெருக்கமாக்கி கொள்ளவும் தவிர்க்க இயலாதபடி தொழிலாளிவர்க்கத் தலைமைக்கு வழிவிடவும் வேண்டியிருந்திருக்கும். தேசிய முதலாளியத்தின் வர்க்கப் பண்பு அதற்கு வலிந்து உடன்பட்டிருக்க இயலாது. தேசிய முதலாளியத்துடன் சமரசம் செய்து கொண்ட இடதுசாரிகளால் அதற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்க இயலாது.

அதன் விளைவாகவே 1977 தேர்தலில் வெவ்வேறாகப் போட்டியிட்ட ஸ்ரீ.ல.சு. கட்சியும் பாராளுமன்ற இடதுசாரிகளும் கண்ட படுதோல்வி பாராளுமன்ற இடதுசாரிகளை அரசியல் அடையாளமற்றவர்களாக்கியது. ஸ்ரீ.ல.சு. கட்சி தனது பழைய அரசியல் நிலைப்பாட்டில் நின்று யூ என். பிக்குச் சவால் விட இயலாத விதமாக யூஎன்.பி. அரசாங்கம் அரச அடக்குமுறையைப் பயன்படுத்தியதோடு ஜே.வி.பி யுடனான ஒரு புரிந்துணர்வு மூலம் ஸ்ரீ.ல.சு கட்சியும் பாராளுமன்ற இடதுசாரிகளும் மக்கள் மத்தியில் சென்று அரசியல் நடத்த இயலாத விதமாக ஜே.வி.பியின் வன்முறையைப் பயன்படுத்தியது.

ஸ்ரீ.ல.சு.கட்சி 1994ல் அதிகாரத்திற்கு மீண்ட போது அது தேசிய முதலாளியத்தின் சில முற்போக்கான அரசியல் பண்புகளை இழந்து விட்டது. முக்கியமாக அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு மிகவும் தளர்ந்துவிட்டது. 1978 முதல் கடைப்பிடிக்கப்பட்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையை நிராகரிக்கவோ உலக வங்கியினதும். சர்வதேச நாணய நிதியத்தினதும் பிற ஏகாதிபத்திய நிதி, வணிக நிறுவனங்களதும் ஆணைகட்குப் பணிய மறுக்கவோ அது ஆயத்தமாக இல்லை. யூஎன்.பி கடைப்பிடித்த விதமான தனியார் மயமாக்கல் உள்நாட்டு வணிகத்தை அந்நியக் கம்பனிகட்கு விட்டுக் கொடுத்தல் அந்நியருக்கு இந்த நாட்டின் மண் மீது ஆதிக்கத்துக்கு இடமளித்தல் போன்ற கொள்கைகள் எந்த மாறுபாடுமில்லாமல். 1994 முதல் 2001 வரையும் இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஸ்ரீ.ல.சு. கட்சியில் ஏற்பட்டுள்ள அடிப்படையான மாற்றம் அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டுடன் தொடர்புடையது. இதை நாம் உலகெங்கும் தேசிய முதலாளியம் 1970களின் நடுப்பகுதி முதல் பொருளாதார அரசியல் நெருக்கடிகளை எதிர்நோக்க இயலாமல் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்ததுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். உலக சோஷலிஸ இயக்கமும் முக்கியமாக சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் திரிபுவாத அரசியலின் விளைவாகப் பலவீனப்பட்ட நிலையில் தேசிய முதலாளியமும் படிப்படியாக ஏகாதிபத்தியத்துக்குப் பணிந்து போக வேண்டிய நிலைக்குள்ளானது. எனினும் இலங்கையில் தேசிய முதலாளியத்தினதும் அதன் பாராளுமன்ற இடதுசாரிக் கூட்டாளிகளதும் சரிவுக்குத் தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக அவற்றின் தவறான அணுகுமுறையும் முக்கியமாகப் பங்களித்தது.

யூஎன்.பி யின் பேரினவாதக் கடும்போக்குக்கு எதிராக நிற்பதற்கு மாறாகப் பேரினவாதத்தையே தமது ஆயுதமாகவும் பயன்படுத்தியதன் மூலம் அவர்கள் சிறுபான்மைத் தேசிய இனங்களிடையே தமது நம்பகத் தன்மையை இழந்ததோடு

தொடர்ச்சி 7ம் பக்கம்

# பேச்சுவார்த்தையின் முடக்கமும் பேரினவாதத்தின் உள்நோக்கமும்

கடந்த மாதம் 19ம் 20ம் 21ம் திகதிகளில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ஜெனிவாவில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இடம் பெறும் என எதிர்பார்த்த மக்களுக்கு பலத்த ஏமாற்றமே கிடைத்தது. இரு தரப்பினரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றம் சுமத்திக் கொண்டதுடன் பேச்சுவார்த்தை இடம் பெறாத ஒரு சூழலையே ஏற்படுத்திக் கொண்டனர் என்பதே பொதுவான கருத்தாகும். தாங்கள் யுத்த நிறுத்த நிலைப்பாட்டிலிருந்து விலகவில்லை என்றும் பேச்சுவார்த்தையை நிராகரிக்கவில்லை என்றும் இருதரப்பிலிருந்தும் கூறப்பட்ட போதிலும் இரண்டாம் கட்டத்திற்காக ஜெனிவா செல்வதில் விருப்பமின்மையை இருபுறத்திலும் காண முடிந்தது. இந் நிலை ஒருவரை ஒருவர் சந்தேகிப்பதாலும், பரஸ்பர நம்பிக்கையீனத்தாலும், பிரச்சினையின் மையத்திற்குச் செல்ல விரும்பாமையாலும் ஏற்பட்டதொன்றாகும். அத்துடன் இருதரப்பினரும் கொண்டிருக்கின்ற தத்தம் அடிப்படை நிலைப்பாடுகளில் விட்டுக் கொடுப்புச் செய்ய முன் வராமையும் முக்கிய காரணமாகும். எவ்வாறாயினும் அரசாங்கம் இவ்விடயத்தில் அதிக பொறுப்புடன் நடந்திருக்க வேண்டும் என்பது மறுப்பதற்குரிய ஒன்றல்ல.

இன்றைய ஜனாதிபதி கடந்த வருடம் பதவி ஏற்றுக் கொண்ட போதும் அதற்குப் பின் ஆற்றி வந்த உரைகளிலும் "கௌரவமான சமாதானம்" பற்றி எடுத்துக் கூறி வந்தார். அதனை வைத்து பேச்சு வார்த்தை ஆக்க பூர்வமானதாக முன்னெடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பை சிலர் கொண்டிருந்தனர். ஆனால் ஜனாதிபதி பேச்சுவார்த்தை பற்றியும் அதில் முதல் கட்டமாகப் பேச வேண்டியவையும் இரண்டாம் கட்டத்தில் பேச இருப்பவை பற்றியும் தெளிவானதும் உறுதியானதுமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. இதனை முதலாம் கட்டமாக இடம் பெற்ற ஜெனிவாப் பேச்சுவார்த்தையின் போது அவதானிக்க முடிந்தது. முதல் கோணல் முற்றும் கோணல் என்பதற்கிணங்கவே விடயங்கள் பாதகமான அம்சங்களாக வளர்ச்சி பெற்றுக் கொண்டன. முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை சாதகமான திசையில் முன்செல்லாமைக்கு புலிகள் இயக்கம் ஏற்கனவே அரச படைகளுக்கு எதிராக் நடாத்தி வந்த தாக்குதல்களே காரணம் என அரசாங்கத்தரப்பில் அதிருப்தியும் விசனமும் தெரிவிக்கப்பட்டது. ராணுவத்தரப்பு தமக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் படுகாயங்கள் பற்றிய புள்ளி விபரப் பட்டியலுடனேயே ஜெனிவாப் பேச்சுவார்த்தை மேசைக்கு சென்றது. அவ்வாறே ராணுவத்தால் கொல்லப்பட்டவர்களின் விபரப் பட்டியலுடன் புலிகள் தரப்பினர் சென்றனர். மொத்தத்தில் இரு தரப்பினரும் யுத்த நிறுத்த மீறல் பற்றிய வாதிப் பிரதிவாதங்களிலேயே ஈடுபடவேண்டியதாயிற்று. அதன் காரணமாக தத்தம் நிலைப்பாட்டிற்கு வலுச் சேர்க்கும் ஒரு சந்தர்ப்பமாக முதலாம் கட்டப் பேச்சு வார்த்தையைப் பயன்படுத்த முன்நின்றமையைத் தான் அதில் காண முடிந்தது.

ஆதலால் முதலாம் கட்டப் பேச்சு வார்த்தையின் கூட்டறிக்கை என்பது இரு தரப்பும் உள விருப்பத்துடன் தாமாகவே பேசி இணங்கி எழுதப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை. மாறாக நோர்வே அனுசரணையாளர்களின் அழுத்தத்தின் காரணமாகவே கூட்டறிக்கையில் இணக்கம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறான இணக்கம் எந்தளவிற்கு நடைமுறைக்கு வரும் என்ற சந்தேகம் ஆரம்பத்திலிருந்தே எழுப்பப்பட்டு வந்தது. துணைப்படைகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும் விடயத்தை புலிகள் இயக்கம் வற்புறுத்திக் கொண்டது. இதில் ராணுவத்தின் நிலைப்பாட்டை அரசாங்கத்தால் மாற்ற முடியவில்லை. அவ்விடயத்தில் அரசாங்கம் மௌனம் சாதித்து வந்தது. இந்நிலையில் கிழக்கிலிருந்து போராளிகளின் பாதுகாப்பான பயணம் பற்றிய விடயத்திலும் தமது உலங்குவானூர்தியை வழங்குவதில் ராணுவம் மறுப்புத் தெரிவித்து வந்தது. கடல் பயணம் கூட இறுதி நேரத்தில் குழம்பிப் போனது. அதேவேளை அரசாங்கப் படைகள் மீதான தாக்குதல்கள் வடக்கு கிழக்கில் தீவிரமடைந்தன. பதிலுக்கு இராணுவமும் ஆங்காங்கே தாக்குதல்களை மேற்கொண்டது. இரு புறத்திலும் பட்டியல்படுத்தப்பட்டவர்கள் "இனம் தெரியாதோரால்" படுகொலைகளுக்கு ஆளாக்கப்படும் நிலை உச்சத்திற்குச் சென்றது.

இதன் மத்தியிலேயே புத்து வருடத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக திருகோணமலையில் குண்டு வெடிப்பும் அதனைத் தொடர்ந்து சிங்களக் குண்டர்கள்- காடையர்கள் தமிழர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். தமிழ் முஸ்லீம் வர்த்தக நிலையங்கள் தாக்கி எரிக்கப்பட்டன. பதினைந்துக்கு மேற்பட்டோர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். மேலும் புறநகர்ப் பகுதிகளில் தமிழர்கள் சிங்களவர்கள் மாறிமாறி தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். திருகோணமலையில் திட்டமிட்ட இனப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ஜே.வி.பி – ஹெல உறுமய பேரினவாத வெறியர்களின் பங்கு எவ்வகையிலும் குறைவானதொன்றல்ல. தமிழர்கள் ஆங்காங்கே கொல்லப்பட்டு வந்த சூழலில் கோமரலங்கடவையில் ஆறு அப்பாவி சிங்கள விவசாயிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். இது பழிக்குப் பழி எனவும் கூறப்பட்டது. இவ்வாறே மட்டக்களப்பிலும் தொடரும் பழிக்கு பழி கொலைகள் தமிழர்கள் மத்தியிலும் முஸ்லீம்கள் மீதும் நடாத்தப்பட்டு வந்துள்ளன.

அத்துடன் வடக்கில் அடையாளம் காட்டாத கொலைகள் நடைபெற்று வந்தன. அதன் உச்சமாக புத்தூரில் ஐந்து இளைஞர்கள் ஒரே நேரத்தில் படுகொலை செய்யப்பட்டனர். தொடர்ந்து ஆங்காங்கே படுகொலைகள் இடம் பெற்ற வண்ணமே இருக்கின்றன. இவற்றின் உச்சமானதொன்றாகவே பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்க வேண்டிய ஏப்பிரல் 25ம் திகதி கொழும்பு ராணுவத் தலைமை நிலையத்தில் ராணுவத் தளபதியை இலக்காக வைத்து தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம் பெற்றது. அதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதுடன் ராணுவத் தளபதி சரத்பொன்சேகா படுகாயமும் அடைய நேரிட்டது. இதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டும் பிரதேசத்தை நோக்கிய ராணுவத் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. இருபது பேர்வரை கொல்லப்பட்டதுடன் பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றில் இருதரப்பினரும் ஈடுபட்டிருக்கின்ற அதே வேளை தாங்கள் இப்போதும் யுத்த நிறுத்தத்தை மீறவில்லை என்றே கூறி வருகின்றனர். உண்மையில் யுத்த நிறத்தம் என்பது அர்த்தமற்றதாகி நிற்கிறது. அதன் கீழான பேச்சுவார்த்தை பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களினால் முடக்கப்பட்டிருக்கிறது. அனுசரணையாளரான நோர்வேயின் விஷேட தூதுவர் எதுவும் செய்ய முடியாத கையறு நிலையில் நாடு திரும்ப வேண்டியதாயிற்று.

## அர்த்தமற்றது அக்கினிப்போர் அதிகபட்ச சுயாட்சியே வேண்டும்!

அடுத்து என்ன நிகழப் போகின்றது என்பதே வடக்கு கிழக்கு மக்களினதும் தெற்கின் சமாதானம் விரும்பும் மக்களதும் அச்சம் கலந்த எதிர்பார்ப்பாக உள்ளது. மீண்டும் ஒரு யுத்தம் வெடிப்பதை பேரினவாதிகளும் யுத்த வெறியர்களும் மட்டுமே விரும்புகிறார்கள். ஆனால் அமைதியையும், சமாதானத்தையும் விரும்பும் எந்த மக்களும் யுத்தத்தை விரும்பவில்லை என்பது காணக்கூடியதாக உள்ளது.

இந் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எத்தகைய அணுகுமுறையைக் கையாளப் போகின்றார். என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தை எடுத்து நோக்கின் ஜே.ஆர்.பிரேமதாச, டி.பி. விஜயதுங்கா, சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்ஹா, மகிந்த ராஜபக்ஷ ஆகிய அனைத்து ஆட்சித் தலைவர்களும் பேரினவாத ஒடுக்குமுறை என்ற உள்நோக்க நிலைப்பாட்டிலிருந்தே தேசிய இனப்பிரச்சினையை அணுகி வந்துள்ளனர். இவர்களது கடந்த கால நிலைப்பாடடின் ஊடான கடுமை மிகுந்ததும் கசப்பானதுமான அனுபவங்கள் பட்டறிவுகள் எதைவயும் சமகாலப் பரிசீலனைக்கு தற்போதைய கொள்கை வகுப்பாளர்களால் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி கௌரவமான சமாதானம் பற்றி அடிக்கடி கூறிவந்த போதிலும் அதனை நோக்கிய நகர்வில் குறிப்பிடக் கூடிய பிரதிபலிப்புகள் எதையும் காண முடியவில்லை.

பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு சமாதானம் என்பன பற்றி ஜனாதிபதி இதய சுத்தியோடு ஈடுபட வேண்டுமானால் அவரைச் சூழ்ந்து நின்று நச்சுத்தனமான கருத்துக்களை வற்புறுத்தும் பேரினவாத சக்திகளை தூர விலக்கி வைக்க வேண்டும். அவ்வாறே சர்வதேச சமூகத்தையும் இந்தியாவையும் திருப்திப்படுத்திக் கொண்டு புலிகள் இயக்கத்தை தனிமைப்படுத்தி ராணுவ ரீதியில் தோற்கடித்து விடலாம் என்ற வீண் நம்பிக்கையில் கனவு காணும் ராணுவ ஆலோசகர்களின் நிறைவேற்ற முடியாத வியூகங்களில் நம்பிக்கை வைப்பதை ஜனாதிபதி புத்தி பூர்வமாக நிராகரிக்க வேண்டும். இவ்வாறு தான் சந்திரிகா அம்மையாரை அன்றைய வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரத்வத்தையும் தவறான நம்பிக்கைகள் கொடுத்து வழிநடாத்தினர் என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே அது போன்று ஒரு அக்கினிப்போர்ப் பயணத்தில் பயணிக்கக் கூடாது என்பதே சமாதானம் விரும்பும் அனைத்து மக்களினதும்.விருப்பமாகும்.

அதற்குப் பதிலாக பேரினவாத நிலைப் பாட்டிற்கு அப்பால் நியாயமான அரசியல் தீர்வை ஒற்றையாட்சி அதிகாரவரம்பு என்ற உழுத்துப் போன நிலைப்பாட்டைக் கடந்து அதிகபட்ச சுயாட்சி அடிப்படையில் அரசியல் தீர்வை முன்வைக்க ஜனாதிபதியும் அரசாங்கமும் முன்வரல் வேண்டும். இதற்கான திசையில் பயணிப்பது பற்றிச் சிந்திப்பதே இலங்கைக்கான எதிர் காலத்திற்குரிய சிந்தனையாக இருக்க முடியும். இதனை மகிந்த சிந்தனை உரியவாறு உள்வாங்காது விட்டால் நாடு மேலும் யுத்தத்திற் குள்ளும் நாசங்களுக்கிடையிலும் அமிழ்ந்த கொள்ள வேண்டியது தான்.

எனவே யுத்தமாக்கப்பட்டுள்ள தேசிய இனப்பிரச்சினையில் மிகவும் நிதானமாகவும் தூரநோக்குடனும் முழுநாட்டினதும் அனைத்து மக்களினதும் எதிர்காலதிற்கு உத்தரவாதம் வழங்கக் கூடிய விதமாக ஜனாதிபதி உறுதியான துணிவான முடிவுகளை மேற்கொள்ளவேண்டும். அத்தகைய முடிவுகள் தன்னைச் சூழ அணிவகுத்து நிற்கும் பேரினவாத நிலைப்பாட்டாளர்களின் யுத்த நோக்கிற்கும் பேரினவாத அகங்காரத்திற்கும் அப்பாற்படடதாக அமைதல் வேண்டும்.

அதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கம் தனது அணுகுமுறையிலும் போராட்ட தந்திரோபாய நடைமுறைகளிலும் விறைப்பான தனிமைப்பட்டுப் போகும் போக்குகளை கைவிட்டு நிதானமான தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்குரிய வெகுஜன அடிப்படைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தின் வலிமைக்கும் நீடிப்பிற்கும் இறுதி வெற்றிக்கும் நிலவுடைமை ஏகாதிபத்திய எதிர்ப்பு அவசியம் என்பது கண்டு கொள்ளப்பட வேண்டும். அத்துடன் ஜனநாயக மனித உரிமைகளை மதித்து செயற்படுவதன் மூலம் மக்களின் ஐக்கியம் பலம் சர்வதேச போராட்ட சக்திகளின் ஆதரவு என்பனவற்றைப் பெற முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அச்சம் அவநம்பிக்கை குழிபறிப்பு பழிவாங்கல் என்பன மக்களின் ஐக்கியத்தை குலைத்து போராட்டத்தைப் பலவீனப்படுத்தவே செய்யும் என்பதே வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடமாகும்.




**2006 ஏப்பிரல் 29 அன்று சம்பூர் மீது நடாத்தப்பட்ட விமானத்தாக்குதலில் அகதியாக்கப்பட்ட தமிழ்ச் சிறுவர்கள் இருவர் திசையறியாது நடந்து செல்லும் காட்சி.**

### 1956ல் தொடங்கிய

6ம் பக்க தொடர்ச்சி ...

யூ என். பி 1977 முதல் கடைப்பிடித்த இன ஒடுக்கலையும் 1983ல் தொடக்கி வைத்த போரையும் கைவிட இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதிலிருந்து அவர்கள் தாமாகவே மீளுவது மிகக்கடினம். மீளுவதற்கான முயற்சிகளில் இறங்குவதற்கு மாறாகத் தம்மைத் தீவிர பேரினவாதிகளுடன் இணைத்துக் கொள்கிற போக்கிலேயே அவர்கள் முனைப்பாக இருக்கின்றனர்.

யூஎன்.பிக்கும் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் இடையில் 1956ல் தெளிவான ஒரு தெரிவு இருந்தது. அது 1977 வரை இருந்தது. 1956 முதல் இருந்து வந்த சமூகச் சீர்திருத்தக் கொள்கைகள் சனநாயக தொழிற்சங்க உரிமைகள் சமூக ஒடுக்குமுறைகட்கு எதிரான நடவடிக்கைகள் 1970க்குப் பின்பு தளர்ந்த போதும் ஸ்ரீ.ல.சு.க, 1994ல் ஆட்சிக்கு வரும் வரை, சனநாயக உரிமைகளின் மீட்சி, தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு, போர் நிறுத்தம் என்பன தொடர்பான அற்ப நம்பிக்கைகட்குச் சிறிதளவு இடமிருந்தது. எனினும் பலமான எதிர்பார்ப்புக்கட்கு நியாயமிருக்கவில்லை.

1994 க்குப் பின்பு ஸ்ரீ.ல.சு கட்சிக்கும் யூஎன்.பிக்குமிடையிலான அடிப்படையான வேறுபாடு அடையாளமில்லாதளவுக்குத் தேய்ந்து விட்டது. பேச்சளவில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கருத்துக்கள் இடையிடையே சொல்லப்பட்டாலும் நடைமுறையில் இரண்டு கட்சிகட்குமிடையே பெரிய அளவில் வேறுபாடு தெரியவில்லை. அதைவிட, ஸ்ரீ.ல.சு.கட்சியின் இடதுசாரிக் கூட்டாளிகளால் எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த இயலவில்லை.

இலங்கையின் அரசியல் பொருளாதார விடுதலைக்கு ஸ்ரீ.ல.சு.கட்சி ஆற்றக் கூடிய பங்கு எனக் கடந்த கால் நூற்றாண்டில் எதையுமே சொல்ல இயலாதளவுக்கு அக்கட்சி சீரழிந்து விட்டது. அச் சீரழிவு அது அடையாளப்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் சீரழிவு என்பதை நாம் மறக்கலாகாது. எனவே ஸ்ரீ.ல.சு. கட்சி பற்றிய மயக்கங்கட்கு மேலும் இடமில்லை என்பதோடு பாராளுமன்ற அரசியலுக்கு வெளியே ஒரு மாற்றுவழி நமது உடனடியான தேவை என்பதையும் இப்போது தெளிவாக வற்புறுத்த வேண்டிய காலம் கனிந்துள்ளது.

# முஸ்லீம் படைப்பிரிவும் முஸ்லீம்களின் பாதுகாப்பும்

இலங்கை அரசாங்கம் முஸ்லீம் படைப்பிரிவொன்றை உருவாக்குவதாக அறிவித்துள்ளது. ஒரு நாட்டின் ராணுவம் நாட்டின் (உண்மையாக அரசின்) பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே உள்ளது. வரலாற்றுச் சூழ்நிலைகள் பிரித்தானிய, பிரெஞ்சுக் கொலனிய ஆட்சிகளில் தமது கொலனிய நிருவாகத்தைப் பாதுகாக்கவும் உலகப்போர் போன்ற பெரும் போர்களின் போது தமது சார்பில் போரிடவும் கொலனிகளில் படைதிரட்டிப் பெரும் படைப்பிரிவுகளை உருவாக்கியுள்ளன. அவை உருவாக்கப்படுவதற்குரிய நோக்கங்கள் வேறுபடுவதால் அவற்றின் அமைப்புக்களும் வேறுபடலாம். இந்தியாவின் இராணுவப் படைப்பிரிவுகள் இந்தியாவிலிருந்த பிரித்தானிய கொலனிய இராணுவ முன்மாதிரியையொட்டியே அமைக்கப்பட்டன. தேசிய இனப்பிரச்சனையும் இன முரண்பாடுகளும் வலுப்படும் போது அரச படைகளை ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த கிளர்ச்சியாளர் கட்கெதிராகப் பயன்படுத்தும் போது இராணுவத்தில் அதே சமூகத்தைச் சேர்ந்தோர் இருப்பது ஒரு வகையில் பிரச்சனைகளை உருவாக்கும். குறிப்பாக அரச அடக்குமுறை அச் சமூகத்தின் சாதாரண மக்கள் மீதான இராணுவ வன்முறையாக வெளிப்படும் போது படையினரின் நடுவே உள்ள அச் சமூகத்தினர் எவ்வாறு நடந்து கொள்வர் என்பது பற்றி அரசாங்கம் நிச்சயமாக இருக்க இயலாது. அதே வேளை, ஒரு சமூகத்தினர் மீது அச்சமூகத்தினரல்லாத ராணுவத்தினரது தாக்குதல்கள் ஏற்படுத்தக் கூடிய விளைவுகள் எவ்வாறிருக்கும் என்று ஒரு அரசாங்கம் அறியாமலிருக்க இயலாது. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழரும் முஸ்லீம்களும் இலங்கை ராணுவத்தை ஒரு ஆக்கிரமிப்



புப்படை போன்றே கருதிவந்துள்ளதற்கான காரணங்களை எல்லோரும் அறிவோம். இலங்கை ராணுவத்தில் தமிழரதும் முஸ்லீம்களதும் விகிதாசாரம் புறக்கணிக்கத்தக்களவு சிறியதாகவே இருந்து வந்துள்ளது. மலாய்ச் சமூகத்தினரிடையே ராணுவ, பொலிஸ் சேவைப் பாரம்பரியமொன்று இருந்தது. எனினும் இப்போது படையினரிடையே அவர்களது விகிதாசாரம் குறைந்து விட்டது. படையினரிடையே உள்ள முஸ்லீம்களில் பெரும் பகுதியினர் நாட்டின் தென்பகுதியில் உள்ளோரே. 1956க்குப் பிறகு இராணுவத்திற் தமிழர்கள் சேர்க்கப்படுவது மிக அருமையாகவே எனலாம். எனவே இலங்கை ராணுவம் ஒரு சிங்களத் தேசிய ராணுவமாக அடையாளப்பட்டதுடன் அவ்வாறே செயற்பட்டும் வந்துள்ளது.

முஸ்லீம்களின் பாதுகாப்புக்காக ஒரு முஸ்லீம் படைப்பிரிவு என்றால், அது விடுதலைப் புலிகளிடமிருந்து முஸ்லீம்களைக் காக்க மட்டுந்தானா என்ற கேள்வி எழுகிறது. அது பிற தமிழ்த் துணைப்படைகளிடமிருந்தும் முஸ்லீம்களைக் காக்கப் பயன்படுமா என்ற கேள்வியும் கூடவே எழுகிறது. இன்று முஸ்லீம்கள் கடுமையான வன்முறைத் தாக்குதல்கட்குட்படுவது தென்னிலங்கையிலேயே. பெப்ரவரியில் பேருவளை தர்கா நகரில் நடந்த தாக்குதல் போன்று வடக்கு-கிழக்கில் நிகழவில்லை. அப்படியா

எஸ் . எம். இஸ்மாயில்

யின் சிங்களக்காடையர்களிடமிருந்து முஸ்லீம்களைப் பாதுகாக்கவும் இதே முஸ்லீம் படைப்பிரிவு உதவுமா? இன்று தமிழர்கள் ஆயுதப்படையினரால் மட்டுமில்லாமல் சிங்களக் காடையர்களாலும் தாக்கப்படுகின்றனர். சென்ற தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னும் திருகோணமலையில் பின்னும் நடந்த கொடுமைகட்குப் பின்னர் தமிழ் மக்களை எந்தப் படைப்பிரிவு காக்கும் என்ற கேள்வி எழுகிறது.

புதிய படைப்பிரிவு வெறுமனே முஸ்லீம்களை அடையாளப்படுத்துகிற ஒன்றென்றால், மற்றச் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு தனித் தனிப் பிரிவுகள் ஏன் உருவாக்கப்படவில்லை?


மேற்கூறிய விதமாக ஆராயும் போது, முஸ்லீம் படைப்பிரிவு என்பது தமிழ்-முஸ்லீம் பகையை வளர்த்துத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தித் தமிழ் மக்களை மேலும் அடக்கி ஒடுக்குகிற பெரிய திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே என்ற முடிவுக்குத்தான் வர இயலும்.

முஸ்லீம்களைத் தமிழர்கட்கெதிராகச் திருப்பிவிடுகிற முயற்சி புதியதல்ல. லலித் அத்துலத் முதலி 1980 களின் நடுப்பகுதியில் அந்த முயற்சியை ஊக்குவித்தார் என்று கூறப்பட்டது. முஸ்லீம் ஊர்க் காவற்படைகள் தமிழ்ப் போராளிகளுடன் மோதியதற்கு அரசாங்கத்தின் தூண்டுதல் ஒரு பெரும் பங்களித்தது. அதனால் ஏற்பட்ட முரண்பாடுகள் தவறாகக் கையாளப்பட்டதன் விளைவாகத் தமிழ்- முஸ்லீம் உறவு மிகவும் பாதிக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் முஸ்லீம்கள் பற்றிய தமது அணுகுமுறையைத் திருத்துகிற சாடை தெரியும் போதே அதை முறியடிப்பதற்கு அராசாங்கம் முந்திக்கொண்டுள்ளதன் வெளிப்பாடுகளே முன்னைய முஸ்லீம் பொலிஸ் பிரிவு யோசனையும் இன்றைய முஸ்லீம் படைப்பிரிவுமாகும்.

விடுதலைப் புலிகள் சுத்த ராணுவக் கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டு வெகுசன அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமே அராசாங்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல் தமிழ் மக்களையும் அவர்களது விடுதலைப் போராட்டத்தையும் காக்க உதவ இயலும்.

# உள்ளூராட்சித் தேர்தல் சொல்லும் செய்தி என்ன?





மேலோட்டமாக நோக்கும் போது பொதுசன முன்னணி பெரும் வெற்றி பெற்றுள்ளது போலவும் யூஎன்.பி படுதோல்வி பெற்றுள்ளது போலவும் ஜே. வி. பி அடையாளம் இழந்து விட்டது போலவுமே மார்ச் இறுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தோன்றுகின்றன. இம் முடிவுகள் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளாக இருந்தால் 1977 வரை இருந்த தொகுதி அடிப்படையில், அரசாங்கக் கட்சி பெற்ற வெற்றி 1977ல் யூஎன்.பி கண்ட வெற்றியை ஒத்தது. யூஎன்.பியின் தோல்வி அதே ஆண்டு ஸ்ரீ.ல.சு.கட்சியின் தோல்வியிலும் சிறிது பரவாயில்லை. ஜே.வி.பியின் தோல்வி அன்று பாராளுமன்ற இடதுசாரிகள் கண்ட படுதோல்வியிலிருந்து ஒரு தொகுதி வித்தியாசமுடையது. 1978க்குப் பிந்திய மாவட்ட அடிப்படையில் நோக்கினால், எந்தக்கட்சியும் பாராளுமன்றத்தில் மட்டுமட்டாகவே பூரண பெரும்பான்மையைப் பெறக் கூடிய நிலையே உள்ளது.

யூஎன்.பியின் தோல்விக்கு சனாதிபதித் தேர்தலில் (அற்பளவு வாக்கு வித்தியாசத்தில் என்றாலும்) அது தோற்றதன் விளைவாக ஏற்பட்ட கட்சித் தாவல்களை விட கூட்டணியில் இருந்த பங்காளிகள் புதிய நிழல்களை நாடியது முக்கியமான பங்களித்தது. இந்தக் கூட்டணி மாற்றங்களில் இந்திய பாக்கிஸ்தான் குறுக்கீடு இருந்ததாகப் பேசிக் கொள்ளப்பட்டாலும். ஆளுங்கட்சியுடன் ஒட்டிக் கிடந்து தங்களதும் தங்களுக்கு 'உதவுங்கரங்களினதும்' நலன்களைப் பேணிக் கொள்வது மலையக மக்களையும் முஸ்லீம்களையும் வைத்துச் சூதாடுகிற கட்சிகட்கும் குழுக்களுக்கும் முக்கியமானது.

கிழக்கு முஸ்லீம் தலைமைகளின் நெருக்கடி மேலும் மோசமாகியுள்ளதை இத் தேர்தல் முடிவுகள் வெளி வெளியாகக் காட்டாததற்கு யூஎன்.பி அணியில் இத் தலைவர்களில் யாருமே இல்லாதது மட்டுமே காரணம். பல்வேறு முஸ்லீம் அணிகள் தொடர்ந்து பொதுசன முன்னணியுடன் கூட்டணியில் நிலைக்க முடியுமா என்பது உடனடியான எதிர்காலத்தில் அரசாங்கம் எவ்வளவு வலுவானதாக இருக்கும் என்பதில் மட்டுமே தங்கியுள்ளது.

மலையகத் தலைமைகள் இரண்டும் இணைந்ததன் மூலம் தம்மை வலுப்படுத்திக்கொள்ளும் என்ற கணக்குப் பிழையாகிப் போனதற்கு மலையகத்தில் இந்தத் தலைமைகள் பற்றிய நம்பிக்கை தகரத் தொடங்கியுள்ளதன் அடையாளமே. 1990 அளவில் மலையக மக்கள் முன்னணி உருவான போது, இ.தொ.காவுக்கு மாற்றான ஒரு புதிய அரசியல் சக்தி என்ற நம்பிக்கை இருந்தது. அது தவறென்பது கடந்த பத்தாண்டுகட்குள் தெளிவானது. இரண்டுக்கும் இடையே ஒரு வேறுபாடும் காண முடியாதளவுக்கு அவை மலையக மக்களுக்குத் துரோகம் செய்கிற சக்திகளாகி விட்டன என்றாலும் உருப்படியான ஒரு மாற்றுச் சக்தி ஒன்று வளர்ந்து வலிமை பெறாமல் மலையக அரசியல் மக்களின் நன்மைக்கானதாக அமைய முடியாது. அது பாராளுமன்ற அரசியல் சார்ந்த ஒரு மாற்று அரசியல் அமைப்பாக இருக்க முடியாது.

பேரினவாத நெருக்குவாரங்களும் வடக்கு- கிழக்கைப் பிரிக்கும் முயற்சிகளும் கிழக்கில் தமிழர் தேசியக் கூட்டணியை வெற்றி பெறச் செய்துள்ளன. இது பேரினவாதிகளது சதி முயற்சிகட்குக் கிடைத்த பலமான அடி என்றாலும், வடக்கு-கிழக்கில் சனநாயக அரசியல் சூழல் ஏற்படுவதற்கோ அமைதி நிலவுவதற்கோ இது உதவப் போவதில்லை என்பதைத் திருகோணமலையில் சென்ற மாத முதற்பகுதி தொட்டு அடுத்தடுத்து நிகழுகிற சம்பவங்கள் உணர்த்துகின்றன.

ஜே.வி.பியின் கூட்டணித் தந்திரோபாயம் 2004ல் அளித்த பலனை வைத்து அதனுடைய உண்மையான வலிமையை மதிப்பிடுவது எவ்வளவு தவறானதோ அதே அளவுக்

தேசபக்தன்

குத் தவறானது 2006 உள்ளூராட்சித் தேர்தலில் அதன் வலிமையை மதிப்பிடுவதுமாகும். பாராளுமன்ற இடதுசாரிகளின் சீரழிவு ஏற்படுத்திய அரசியல் இடைவெளியை ஜே. வி. பி தனதாக்கியதுடன் அந்த இடைவெளியில் இடதுசாரி அரசியலின் இடத்தில் பேரினவாதத்தை நிலை நிறுத்தியுள்ளது. 1970களில் தொழிலாளிவர்க்கத்தை நிராகரித்த ஜே.வி.பி கணிசமானளவு பெரிய தொழிற்சங்கங்களில் ஆதிக்கம் செலுத்துகிறது. பல்கலைக்கழக மாணவர் சங்கங்களில் சனநாயகத்தை மறுத்துத் தனது ஆதிக்கத்தைத் தொடருகிறது. இவற்றையெல்லாம் ஒரு உள்ளூராட்சித் தேர்தல் தோல்வி இல்லாமற் செய்துவிடாது.

ஹெல உறுமயவுக்கு ஒரு வெகுசனத்தளம் இருந்ததில்லை. அதன் ஆதரவுத் தளம் ஓரளவு வசதியுள்ள நடுத்தர வர்க்கத்தினரைக் கொண்டது. பெரும்பாலும் யூ என். பியுடனான அதிருப்தி காரணமாகவே 2003 தேர்தலில் ஹெல உறுமய எட்டு ஆசனங்களைப் பெற்றது. புத்த பிக்குமாரை நிறுத்தியதன் மூலம் மக்களுக்குப் 'புனிதமான அரசியலை' வழங்கப் போவதாகத் தோற்றங்காட்டிய ஹெல உறுமய பிக்குமாரின் நடத்தை காரணமாக ஹெல உறுமயவின் உண்மையான ஆதரவுத் தளத்தின் அளவுக்கு அதன் வாக்கு வலிமை இம்முறை அமைந்துள்ளது.

தேர்தல் முடிவுகளை விட முக்கியமானவை தேர்தல் முடிவுகளை அடுத்து ரணில் விக்கிரமசிங்கவும் மகிந்த ராஜபக்ஷவும் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் நடத்துகிற இரகசியப் பேச்சுவார்த்தைகளே. ராஜபக்ஷ சீனாவுடனும் பாக்கிஸ்தானுடனும் அரசியல் நெருக்கத்தை ஏற்படுத்துவதை அமெரிக்காவோ இந்தியாவோ ஏற்கமாட்டா. ஆனால் சீனாவோ பாக்கிஸ்தானோ இதுவரை இலங்கையின் உள் அலுவல்களில் இந்தியாவோ அமெரிக்காவோ போக குறுக்கிட்டதில்லை. இலங்கை அமெரிக்காவினதோ இந்தியாவினதோ நேரடியான ஆதிக்கத்தின் கீழ் வருவதை அவை விரும்ப மாட்டா. ஆயினும் இலங்கையின் அயற் கொள்கையையோ அயல் உறவுகளையோ கட்டுப்படுத்துகிற ஆற்றலோ தேவையோ அவற்றுக்கு இதுவரை இருந்ததில்லை.

இத்தேர்தல் வெற்றி அமைதிக்கான முயற்சிகளில் மஹிந்த ராஜபக்ஷவின் கரங்களை வலுப்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு வெகுவிரை விலேயே ஏமாற்றமாகிவிட்டது. பாராளுமன்றத்தில் ஜே.வி.பியின் ஆதரவை நம்பியிருக்கும் வரை ஜே.வி.பியைப் பகைத்து ராஜபக்ஷவால் எதுவும் செய்ய இயலாது.

பொதுத் தேர்தல் மூலம் பொதுசன முன்னணி ஒரு பூரண பெரும்பான்மையைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை ராஜபக்ஷவுக்கு இருக்கிறது என நம்பவில்லை. பாராளுமன்றப் பெரும்பான்மையை இழந்தாலும் பாராளுமன்ற வாக்கெடுப்புக்களில் அரசாங்கம் தோல்வியைத் தழுவுகிற சூழ்நிலை ஏற்படாத வரை ஒரு தேர்தலை நடத்துவதை அவர் தவிர்க்கலாம். அதே வேளை, நாட்டின் பொருளாதாரமும் அமைதியும் மேலும் சீர்குலைந்து மக்களின் அதிருப்தி அரசாங்கத்தின் தோல்விக்கு வழி கோல முன்பு அவர் ஒரு பொதுத் தேர்தலை நடத்துவதற்கு விரும்பவும் இடமுண்டு.

யூ என். பியினுள் ஏற்பட்டுள்ள குத்து வெட்டுக்கள் முற்றி யூ என். பி மேலும் பலவீனப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஒரு பொதுத் தேர்தல் ராஜபக்ஷவுக்குப் பயன்படலாம். எனினும் தேசிய இனப்பிரச்சனை பற்றி அவர் ஒரு உறுதியான, நியாயமான நிலைப்பாட்டை மேற்கொள்ளாத வரை, நாட்டின் நிலைமை மேலும் மோசமாகிக் கொண்டேபோகும்.

# மே தினத்தை மறுக்கும் அமெரிக்க ஆளும் வர்க்கம்

அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் எட்டு மணி நேர வேலை கோரிய போராட்டத்தில் உருவாகியதே மே தினமாகும். 1886ல் இடம் பெற்ற இரத்தம் சிந்திய வரலாற்றுப் புகழ் மிக்க இப் போராட்ட நாள் உலகின் பெரும்பாலான நாடுகளில் சர்வதேச நாளாகவும் விடுமுறைத்தினமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் சுதந்திரத்தின் சொர்க்கம் எனக் கூறப்படும் அமெரிக்காவில் மேதினம் மறுக்கப்படுகிறது. மறைக்கப்படுகிறது. ஆனால் அதனையும் மீறி அமெரிக்க தொழிளாளர்களும் கறுப்பின மக்களும் புலம் பெயர்ந்தவர்களும் இடது சாரிகள் தலைமையில் நினைவு கூர்ந்து வருகிறார்கள்.

# பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல மனிதன் தான் பூமிக்குச் சொந்தம்!

## செவ்விந்திய தலைவன் 1851ல் எழுதிய கடிதம்

**கி. பி. 1851- இல் ∴பிராங்க்ளின் பியர்ஸ் என்ற அமெரிக்க அதிபர், சுக்வாமி' என்ற செவ்விந்திய இன மக்களுக்குச் சொந்தமான 20. லட்சம் ஏக்கர் நிலத்தை விலைக்குக் கேட்டார். அதற்குப் பதிலளித்து அந்தக் குழுவின் தலைவர் சியாட்டில், அமெரிக்க அதிபருக்கு எழுதிய தாகக் கூறப்படும் பிரபலமான கடிதம் இது. ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை முதலாளித்துவத்தை உலுக்கிக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில் முதலாளித்துவத்தைச் சகிக்கவொண்ணாத பண்டைப் பொதுவுடைமையின் குரலாய் இது ஒலிக்கிறது. அறிவியல் பூர்வமான பொதுவுடைமை முதலாளித்துவத்திற்கு சாவுமணி அடிக்கத் தொடங்கிய அதேவேளையில் 'மனிதகுலத்தின் மழலை முதலாளித்துவத்தின் முகத்தில் காறி உமிழ்கிறது இக்கடிதம். உலக முதலாளித்துவத்தின் முகத்தில் அந்த எச்சில் இன்னும் வழிந்து கொண்டிருக்கிறது.**

நிலத்துக்கு வெதுவெதுப்பூட்டும் வானத்தை நீ எப்படி விலைக்கு வாங்க முடியும்? எப்படி விற்க முடியும்? நல்ல வேடிக்கை. காற்றின் தூய்மையும், தண்ணீரின் ஒளியும், எங்களுடைய தனிச்சொத்துகளல்ல. பிறகு அவற்றை எப்படி நீ வாங்க முடியும்?

பூமியின் ஒவ்வொரு துகளும் எங்களின் மக்களுக்குப் புனிதமானது. பளபளக்கும் ஊசி இலைகளும், மணல் பரந்த கடற்கரைகளும், இருண்ட காடுகளுக்குள்ளே பரவிய பனியும், காடு திருத்திய நிலங்களும், ரீங்கரிக்கும் பூச்சி இனங்களும் எங்கள் மக்களின் நினைவுகள் வழியாகப் புனிதமாக நிலைத்திருக்கின்றன. மரங்களுக்குள்ளே செல்லும் நடுத்தண்டு சிவப்பு இந்தியனின் நினைவுகளை பல தலைமுறைகளாகத் தாங்கி வருகிறது.

நாம் பூமியின் அங்கம், பூமியும் நம்மில் ஓர் அங்கம்.

எனவேதான், வாஷிங்டனிலிருந்து அதன் தலைவர் எங்கள் "நிலத்தை வாங்கப் போவதாக"ச் சொல்லி அனுப்பியபோது எங்களை அவர் அதிகம் விலை கொடுத்து வாங்கிவிட நினைப்பதாகவே தோன்றியது, நிலங்களை வாங்கிய பிறகும் நமக்கென்று ஓரிடத்தை ஒதுக்கிக் கொடுப்பதாகவும், அங்கே நாம் எந்த ஒரு பிரச்சினையும் இல்லாமல் வாழ்ந்து கொள்ளலாம் என்றும் சொல்லி அனுப்பினார் அவர்.

நமக்கு அவர் தந்தை போல ஆகிவிடுவார், நாம் அவருக்குக் குழந்தைகளாகி விடுவோம், அதனாலேயே நம் நிலங்களை அவர் வாங்க அனுமதித்துக் கொள்வோமாம்.

ஆனால் அது அப்படி எளிதாக முடிகிற விசயமல்ல, காரணம், எங்களுக்கு எங்கள் நிலங்கள் புனிதமானவை.

அருவிகளிலும் ஆறுகளிலும் ஓடுகிறது தூய்மையான தண்ணீர். வெறும் நீரல்ல, அவை எங்களது ரத்தம். உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்கிறோம் என்றால் அது முதலில் புனிதமானதென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், அதே போல உங்கள் குழந்தைகளுக்கும் இந்த நிலம் புனிதமானதென்பதை நீங்கள் கற்றுக் கொடுங்கள், படிகம் போன்ற ஏரிகளின் தெளிந்த நீரில் தெரியும் பிம்பங்கள் எங்களது மக்களின் வாழ்வில் நடந்த பலவிதமான சம்பவங்களையும் நினைவுகளையும் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

ஓடுகின்ற நீரில் நீங்கள் கேட்கும் முணுமுணுப்பு எங்கள் பாட்டனின் குரல்.

வெள்ளைக்காரன் இருக்கிறானே, அவனுக்கு எங்களின் பழக்கவழக்கங்கள் தெரியாது, எங்கள் நிலத்தின் எல்லாப் பகுதிகளுமே அவனைப் பொறுத்த அளவில் ஒன்றுதான். இரவிலே திருடன் போல உள்ளே நுழைந்து தான் ஆசைப்பட்ட பொருளையெல்லாம் சூறையாடிக் கொண்டு போவதுதான் அவன் பழக்கம்.

கல்லறையில் தந்தையைப் புதைப்பான், மறுகணம் மறந்து போவான், அவனுக்குக் கவலையில்லை. பிள்ளைகளிடமிருந்தே கூட நிலத்தைப் பறித்துக் கொள்வான். அவர்களின் எதிர்காலம் பற்றி அவனுக்கு அக்கறையில்லை.

தந்தையின் ஆன்மா இருந்த கல்லறை சந்ததியின் உரிமை இரண்டையுமே அவன் வெகு சுலபமாக மறந்து போகிறான். தாயாகிய பூமியை சகோதரனாகிய வானத்தை ஆடுமாடுகளைப் போல விற்கக்கூடிய வாங்ககூடிய கொள்ளையடிக்கக் கூடிய பொருள்களாக மட்டுமே அவன் பார்க்கிறான்.

பச்சைப் பூமியை எடுத்து விழுங்கி எல்லாவற்றையுமே வறண்ட பாலைவனமாக்கிவிடுகிற அகோரப்பசி அவனுக்கு.

எப்படிப் பார்த்தாலும் எங்கள் பாதைகள் வேறு, உனது பாதைகள் வேறுதான். எங்களுக்கு உங்கள் நகரங்களைப் பார்க்கும் போதே எரிகிறது. வேதனை வாட்டி எடுக்கிறது. காட்டுமிராண்டிகளுக்கு நகரங்களை விளங்கிக் கொள்ள முடியாதென்கிறாய்.

வெள்ளையனின் நகரங்களில் அமைதியான ஒரே ஒரு இடத்தைக் கூட உன்னால் காட்ட முடியாது. வசந்த காலத்தில் இலைகள் விரியும் ஓசைகளை அங்கே கேட்க முடியாது, ஒரு பூச்சியின் சிறகுகள் அசையும் ஓசையைக் கூடக் கேட்க முடியாது. ஒருவேளை நான் காட்டுமிராண்டி என்பதால் எனக்குப் புரியாது என்பாய்.

உனது நகரங்களின் இரைச்சல் காதைக் கிழிக்கிறது. இரவில் ஒற்றைப்பறவையின் ஏக்கம் தொனிக்கும் குரலோ, குளத்தின் அருகே தவளைகளின் சுவையான விவாதங்களோ கேளாத வாழ்க்கை என்ன வாழ்க்கை? நான் ஒரு செவ்விந்தியன். எனக்கு விளங்கவில்லை.

குளத்தின் மேல் தடவிச் செல்லும் காற்றின் ஒலியை விரும்புகிறான் ஒரு செவ்விந்தியன். பகலில் பெய்யும் மழை சுத்தப்படுத்திய காற்றின், ஊசி இலையில் பரவி வந்த காற்றின் வாசனையே அவன் விரும்பும் வாசனை. கிஷற்று அவனது பொக்கிம். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் என்று எல்லா சீவராசிகளுமே ஒரே மூச்சுக் காற்றைத்தான் சுவாசிக்கின்றன.

ஒரு வெள்ளையன் தான் சுவாசிக்கும் காற்றை என்றைக்காவது நின்று கவனித்திருப்பானா?

பல நாட்களாகவே மரணப்படுக்கையில் விழுந்து விட்டவனைப் போல அல்லவோ நாறும் காற்றில் அவன் மூச்சிறுகிக் கிடக்கிறான்.

உங்களுக்கு நிலத்தை விற்கிறோம் என்றால் காற்று எங்களின் பொக்கிஷம் என்று அறிந்து கொள்ளுங்கள். எல்லா உயிருக்கும் காற்றே ஆதாரம். அவற்றில் எல்லாம் காற்றின் ஆன்மா பாய்ந்து ஓடுகிறது. எங்கள் பாட்டனுக்கு எது முதன்முதலில் உயிரான மூச்சைக் கொடுத்ததோ, அதே காற்றுத்தான் அவருக்கு மரணத்தின் போது பெருமூச்சையும் கொடுத்தது.

எங்கள் நிலத்தை விற்கிறோம் என்றால். தனியே அதை நீ புனிதமாகக்



கருதவேண்டும். பாதுகாக்க வேண்டும். அங்கே போகிற வெள்ளையன் கூட பூக்களின் இனிய மணம் நிறைந்த காற்றைச் சுவாசிக்கலாம்.

நானொரு காட்டுமிராண்டி, எனக்கு வேறு விதமாகப் புரிந்து கொள்ளவும் தெரியவில்லை.

புல் வெளியில் ஆயிரம் எருதுகளின் சடலங்கள் அழுகிக் கிடப்பதைப் பார்த்திருக்கிறேன்– அவை அருகே ரயிலிலிருந்து வெள்ளையர்களால் பொழுதுபோக்காகச் சுட்டுக் கொல்லப்பட்டவை. புகை விட்டுச் செல்லும் உன் ரயில் எங்கள் எருதுகளை விட எந்த விதத்தில் உயர்ந்தது? எனக்கு விளங்கவில்லை – நானொரு காட்டு மிராண்டி.

விலங்குகள் இல்லை என்றால் மனிதன் ஏது? விலங்குகள் எல்லாம் ஒழிக்கப்பட்டு விட்டால் ஆன்மாவை விட்டு விட்ட கூடுபோல மனிதன் செத்துப் போவான்.

விலங்குகளுக்கு என்னவெல்லாம் நேர்ந்ததோ, மனிதனுக்கு அவை சக்கிரத்திலேயே நடக்கும் எல்லாமே ஒன்றோடொன்று சம்மந்தப்பட்டவை.

உன் குழந்தைகளுக்கு நீ கற்றுத்தா– அவர்களின் காலடியில் உள்ள மண் பாட்டன்மாரை எரித்த சாம்பல் என்று. அதனால்தான் அவர்கள் நிலத்தைப் போற்ற வேண்டும் என்கிறேன். எங்கள் சுற்றத்தாரின் வாழ்க்கையால் நிரம்பிய பொக்கிஷமே இந்தப் பூமி என்பதை உன் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்.

பூமி நமது தாய் என்று நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தோம், அதை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள்.

பூமிக்கு எதெல்லாம் நேரிடுமோ அதுவே அவன் பிள்ளைகளுக்கும் ஆகும்.

பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல. மனிதன்தான் பூமிக்குச் சொந்தம்– இது எங்களுக்குத் தெரியும்.

பொருள்கள் எல்லாம் உள்ளே இணைந்தவை– ஒரு குடும்பத்தை ரத்தச் சம்பந்தம் பிணைப்பது போல. எல்லாப் பொருள்களும் உள்ளுக்குள்ளே இணைந்தவை.

பூமிக்கு எதெல்லாம் நேரிடுமோ அதுவே அவன் பிள்ளைகளுக்கும் ஆகும்.

மனிதன் வாழ்க்கை என்ற வலையைப் பின்னவில்லை. அவன் அதில் ஓர் இழை மட்டுமே. அந்த வலைக்கு அவன் எத்தனைகேடுகள் செய்தாலும் அவற்றையெல்லாம் தனக்கே செய்து கொண்டவனாகிறான். கடவுளே வந்து அந்த வெள்ளையனோடு தோளோடு தோள் சேர்ந்து நடக்கலாம். நண்பர்களைப் போலக் கலந்து பேசலாம். ஆனால் அவனுக்கும் இறுதித் தீர்ப்பிலிருந்து விதிவிலக்கு இல்லை.

என்ன இருந்தாலும் நாம் அனைவரும் சகோதரர்கள்தானே இதோ பார்.

வெள்ளையர்களாகப் பிறந்தவர்களும் உலகைவிட்டு நீங்கத்தான் வேண்டும். மற்ற எல்லாப் பழங்குடியினரை விடச் சீக்கிரமாகவே மறைந்தும் போகலாம். நீ படுத்துறங்கும் நிலத்தை நீயே அசுத்தப்படுத்தினால் ஓரிரவில் உன் குப்பைகளுக்குள்ளேயே மூச்சு முட்டி நீ செத்துப் போகலாம்.

அந்த இறுதி முடிவு ஒரு விளங்காத புதிர்போல. எருதுகள் படுகொலையையும். காட்டுக் குதிரைகளைப் பழக்கி விடுவதையும், காடுகளுக்குள்ளே எங்கு பார்த்தாலும் மனித நடமாட்டம் அதிகரிப்பதையும். பழைய பூர்விகமான மலைகளை மறைத்து தொலை பேசிக் கம்பிகள் பெருகி வருவதையும் நாம் விளங்கிக் கொள்ளாமலேயே இருக்கிறோம். வரப் போகிற அந்த இறுதி முடிவு ஒரு விளங்காத புதிர்போல.

புதர்க்காடுகள் எங்கே?
எல்லாம் போயிற்று
மலைக்கழுகுகள் எங்கே?
அவையும் மறைந்தன.
விரைவாக ஓடும்
மட்டக் குதிரைகளையும் வேட்டையாடி
அழித்துக் கொண்டிருக்கிறார்கள்–
என்ன நடக்கிறது?
இப்படி வாழவேண்டும் என்ற
அவர்களின் வாழ்க்கை
முடிந்து விட்டது.
எப்படியோ மீதமிச்ச வாழ்க்கை
மட்டும் நடந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக வைத்துக் கொள்வோம்– எங்கள் நிலத்தை நாங்கள் நேசித்தது போலவே நீங்களும் நேசியுங்கள், நாங்கள் எப்படிக் காப்பற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றுங்கள், எங்களிடமிருந்து நிலம் பெறுகின்ற போது எப்படி இருந்தது என்பதை மட்டும் நினைவில் வைத்திருந்திருங்கள், எல்லா உறுதியுடனும், எல்லா வலிமையோடும் முழுமையான விருப்பத்தோடும் உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிச் காப்பாற்றுங்கள். இந்நிலத்தை நேசியுங்கள்... கடவுள் நம் எல்லோரையும் நேசிப்பது போல.

மொழியாக்கம்
புதூர் இராசவேல்
நன்றி. புதிய கலாச்சாரம்

# இலங்கையின் இனப்பிரச்சினையில் மீண்டும் இந்தியாவின் தலையீடு

பதினைந்து வருடங்களுக்கு முன் ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து இந் தியா, இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளதாக ஒரு தோற்றம் காட்டப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்தியா உள்ளார்ந்த நிலையில் பொறுமையுடனும் இறுக்கமான ஒரு நிகழ்ச்சி நிரலுடனும் செயற்பட்டு வருவதையே நாம் காணக்கூடியதாயுள்ளது.

இலங்கை விஜயத்தின் போது இந்தியாவின் வெளி விவகாரச் செயலர் ஷியாம் சரண் திருகோணமலையில் வைத்து "இந்தியாவின் இதயத்தில் வடக்கு கிழக்கு மிக நெருக்கமாயுள்ளது" எனக் கூறியிருந்தார். அத்துடன் "கிழக்குடனான பாரம்பரிய தொடர்பு நீடித்து வந்ததாகவும்" கூறினார். இக் கூற்றின் உள்ளார்ந்த அம்சங்களை நாம் உற்று நோக்க வேண்டியே உள்ளது.

1980களில் இந்தியா தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு ஆயுதம் கொடுத்துப் பயிற்சியும் வழங்கியது. பின்பு 1992ல் புலிகள் ரஜீவ் காந்தியைக் கொன்றதாகக் கூறி அந்த இயக்கத்திற்கு தடைவிதித்தது. புலிகள் இயக்கத்தினருடன் தொடர்பு அற்ற நிலையில் ஏனைய இயக்கங்களுடன் நெருங்கிய நிலையில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு, சமஷ்டி முறையில் தீர்வு என்றெல்லாம் அவ்வப்போது கூறிவருகிறது.

வடக்கு கிழக்கு மக்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதன் மூலம் இந்தியா அதன் எதிர்கால நடவடிக்கைகளுக்கு அத்திவாரம் போடுகிறது. அதன் முதற்கட்ட வேலையாக தமிழர்களும் முஸ்லீம்களும் வாழும் கிழக்கைக் குறிவைத்து அபிவிருத்தி வேலைகள் எனக் கூறிச் செயற்படுகிறது. அதே வேளை மறைமுகமான வழிகளில் காய்களையும் நகர்த்தி வருகின்றது. மார்ச் மாதத்தின் ஆரம்பத்தில் இந்தியாவின் வைஸ்ராய் போல் செயற்படும். இந்திய ஸ்தானிகர் நிருபமா ராவ் அம்மையார் அம்பாறைக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தேவைகளைக் கேட்டறிந்தார். அடிக்கடி வெள்ளத்தால் மூழ்கும் பகுதிகளில் எவ்வாறு நெற் செய்கை மேற்கொள்ளலாம் என்பதும் ஆராயப்பட்டது. ஒரு கலாச்சார நூதன சாலைக்கும் விஜயம் செய்தார். அங்கு சென்றசமயம் தமிழ் முஸ்லீம் தலைவர்களையும் சந்தித்தார். அத்துடன் நிற்கவில்லை. அரச அதிகாரிகளையும் சந்தித்து அந்த மாவட்டத்தில் நிலவும் நிலைமையையும் கேட்டறிந்தார். பிரச்சின்னயில் முக்கியமானது இதுதான். ஒரு வெளிநாட்டுத் தூதுவர் தன்னிச்சையாக அரசாங்க அதிகாரிகளைச் சந்திப்பதென்பதை எல்லை மீறிய செயலாகவே கருத முடியும். இந்தியத் தூதுவரின் இத்தகைய வேண்டத்தகாத நட வடிக்கைகள் பற்றி எந்தத் தேசப்பற்றுள்ள வீரர்களும் வாய் திறக்கவில்லை.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# ஈட்டா அறிவித்துள்ள

## நிரந்தர யுத்த நிறுத்தம் முடிவின் தொடக்கமா.....?

ஸ்பெயினில் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக பாஸ்க் இன மக்களின் சுதந்திரத்துக்காவும், தனி நாட்டுக்காகவும் போராடி வந்த ஈட்டா(ETA) இயக்கம் கடந்த மார்ச் 22 ஆம் திகதி நிரந்தர யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளது. மேலும் தாங்கள் இனி ஜனநாயக வழியில் போராடப் போவதாகவும் கூறியுள்ளனர். ஈட்டாவின் இந்த முடிவுக்கான காரணங்களையும் அது சார் நிலைகளையும் ஆராய்வதற்கு முன்னர் அதன் ஒட்டுமொத்த வடிவத்தையும் ஒரு தடவை மீட்டிப் பார்ப்பது அவசியம்.

ஐரோப்பாவின் மிகப் பழைமையான இனக்குழுக்களில் ஒன்றான பாஸ்க் இன மக்கள் ஸ்பெயின் வட பகுதியிலும் அதனுடன் உள்ள பிஸ்கே




(Biscay) குடாப் பகுதியில் மேற்கு பைரனிஸ் (Pyrennes) மலைப் பகுதிகளிலும் அத்துடன் இணைந்த தென் பிரான்சிலும் வாழ்ந்து வருகின்றனர். பாஸ்க் பகுதியின் மொத்தப் பரப்பளவு 20. 664 சதுரக் கிலோ மீற்றர் ஆகும். இது 7 மாநிலங்களை உள்ளடக்கியது. இப்பகுதியில் பாஸ்க இனத்தவர்கள் வரலாற்றுப் பதிவுகள் தொடங்கிய காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றனர். தற்போது மூன்று மில்லியன் மக்கள் இங்கு வாழ்கின்றனர். இவர்களது மொழி 'எஸ்காரா' (Euskara) ஐரோப்பக் கண்டத்தின் மிகப் பழைமையான மொழியாக கருதப்படும் இம் மொழியில் பாஸ்க் பிரதேசம் எஸ்காடி (Eus kadi) எனப்படுகிறது. இவர்களது பொருளாதாரம் கப்பல் கட்டுவதிலும் இரும்புத் தொழிலிலுமே தங்கியுள்ளது. பாஸ்க் மக்களின் பண்பாடும் பழக்க வழக்கங்களும் வேகமாக வளர்ந்த நவீன ஸ்பானிய கலாசாரத்துடனும் தொழில் மயமாக்கலுடனும் முரண்பட்டபடியே காலங்காலமாக இருந்து வந்துள்ளது. மிகுந்த சுதந்திர விரும்பிகளான இவர்கள் பல நூற்றாண்டுகளாக சுதந்திர மாகவே வாழ்ந்து வந்தனர். 1939 இல் ஸ்பெயினில் பதவிக்கு வந்த சர்வாதிகாரி ஜெனரல் பிராங்கோ பாஸ்க் பகுதியை ஒடுக்கினார். அவர்களது தாய்மொழியான எஸ்காரா தடை செய்யப்பட்டது. அவர்கள் தங்களது பண்பாட்டை பின்பற்றுவது முற்றாக நிராகரிக்கப்பட்டது. பாஸ்க் அறிவு ஜீவிகளும் சாதாரண மக்களும் கொலை செய்யப்பட்டனர். பலர் சித்திரவதைக்குள்ளாகினர். ஆனால் பாஸ்க் மக்கள் தொடர்ந்தும் தமது வலுவான எதிர்ப்பை பிராங்கோவின் ஆட்சிக்கு எதிராக காட்டியபடியே இருந்தனர். இந்நிலையிலே 'குவேனிக்கா சம்பவம்' நிகழ்ந்தது. பாஸ்க் இன மக்களுக்காகப் போராடுவதற்காக பல அமைப்புக்கள் உருவாகின. அனைத்தும் சர்வதிகார அரசிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக தோற்றம் பெற்றன. அவற்றில் மிகப் பிரபல்யமானது 'பாஸ்க் தேசியக் கட்சி' (PNV) இதன் மாணவர் குழுவான BCI இலிருந்து பிரிந்த டியுஸ்டோ (Deusto) பல்கலைக்கழக மாணவர்கள் பாஸ்க் தேசியக் கட்சி அமைதிப் போக்கை கடைப்பிடிப்பதாகக் கூறினர். இவர்கள் EUIN என்ற அமைப்பை 1953 இல் உருவாக்கினர். இவ் அமைப்பே பின்னர் 1959 யூலை 31 ஆம் திகதி தங்களை ஈட்டா என்ற போராட்டக் குழுவாக மாற்றிக் கொண்டது. ஈட்டா (ETA- Euskadi ta Askatasuna) என்பது "பாஸ்க் தாயகமும் விடுதலையும்" என்று பொருள்படும். அவர்களது சின்னம் கோடரியால் சுற்றப்பட்ட பாம்பு. (இதில் பாம்பு இரகசிய தன்மையைக் குறிப்பதோடு கோடரி உறுதியைக் குறிக்கிறது). இவர்களது மகுட வாக்கியம் "இரண்டையும் கடைப்பிடி" (Bietan Jarai) என்பதாகும்.

இவர்களது போராட்டம் 1961 இல் (யூலை 18) பிராங்கோவின் ஆதரவாளர்களை ஏற்றிச் சென்ற புகையிரதத்தை தடம் புரளச் செய்ததுடன் தொடங்குகிறது. இதிலிருந்து சிறு சிறு தாக்குதல்களில் ஈடுபடத் தொடங்கியது ஈட்டா. 1968 இல் (யூன் 7) இல் சோதனைச் சாவடியில் இருந்த காவலாளியைச் சுட்டுக் கொன்றதே இவர்களது முதலாவது தனிநபர் மீதான தாக்குதலாகும். இதன் பின்னர் பிராங்கோவின் அரசுக் கெதிரான போராட்டத்தை அதிகப்படுத்தியது ஈட்டா. இவர்களது வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனை 1973 டிசெம்பர் 20 ஆம் திகதி நடந்தேறியது. பிராங்கோவின் வாரிசாகக் கருதப்பட்டவரும் அடுத்த ஆட்சியாளர் என எதிர்பார்க்கப்பட்டவருமாகிய பிரதம மந்திரி அட்மிரல் லூயிஸ் கரீரோ பிளாங்கோவை (Luid carrero Blanco)

**-ஏகலைவா-**

குண்டு வைத்து கொலை செய்தது ஈட்டா. இது முழு உலகின் பார்வையையும் ஈட்டாவின் பக்கம் திருப்பியது. ஈட்டா உலகெங்கும் அறிமுகமாகியது. பாஸ்க் மக்களும் பாஸ்க் மக்களின் போராட்டமும் கூடத்தான். பிளாங்கோவின் கொலை மறைமுகமாக சர்வ திகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. 1975 இல் பிராங்கோவின் மரணத்தின் பின்னர் ஸ்பெயின் முதலாளித்துவ ஜனநாயக நடைமுறைகளுக்குத் திரும்ப இது வழிவகுத்தும் கொடுத்தது.

பிராங்கோவின் மறைவின் பின்னர் உருவான ஸ்பெயினின் புதிய அரசாங்கம் பல உரிமைகளை பாஸ்க் பகுதிக்கு வழங்கியது. தனியான பாராளுமன்றம், பொலிஸ், கல்வி, தங்களுக்குரிய வரியைத் தாமே சேகரித்தல் போன்ற பலவாறான உரிமைகள் வழங்கப்பட்டன. இது பாஸ்க் இனத்தவரிடையே ஒரு பாரிய பிளவை கருத்து ரீதியாக ஏற்படுத்தியது. ஒரு பிரிவினர் இருக்கின்ற உரிமைகளுடன் ஜனநாயக வழியில் உரிமைகளைப் பெற வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தனர். மறுசாரார் ஆயுதப் போராட்டமே சுதந்திரத்தையும் உரிமைகளையும் தனி நாட்டையும் பெற்றுத் தரும் என உறுதியாக நம்பினர். இப்பிளவு ஈட்டாவின் போராட்டத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திய போதிலும் தொடர்ந்து போராடுவதில் அவர்கள் உறுதியாக இருந்தனர். கருத்து நிலையாக இரு வேறு பிரிவுகள் காணப்பட்டாலும் பாஸ்க் மக்கள் ஒரு போதும் தங்களை ஸ்பெயினின் பகுதியினராகக் கருதவில்லை என்பதற்கு 1978 இல் அரசியலமைப்பு தொடர்பில் இடம் பெற்ற மக்கள் தீர்ப்பு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

ஸ்பெயினின் புதிய அரசியலமைப்பு "ஸ்பெயின் பிரிக்கவியலாத ஒரே தேசம். பிரிவினைவாதிகளை ஒழித்துக்கட்ட சகல அதிகாரங்களும் இராணுவத்திற்கு வழங்கப்படுகிறது" என்று சொன்னது. ஆனால் பாஸ்க் மக்கள் அவ் அரசியலமைப்புக்கு எதிராக வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து தனது தாக்குதல்களை ஈட்டா அதிகரித்தது. அது குறிப்பாக அரசியல் தலைவர்களையும் பாஸ்க் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்ப்பவர்களையும் குறிவைத்தது. 1980 இல் மட்டும் 92 பேரைக் கொன்றது ஈட்டா.

1986/1987 காலப்பகுதியில் "பயங்கரவாதத்திற்கு எதிரான விடுத லைக் குழுக்கள்" (GAL) என்ற பெயரில் அரசின் உதவியுடன் ஈட்டா விற்கு எதிரான நடவடிக்கைகளில் ஒரு குழு ஈடுபடத் தொடங்கியது. அது ஈட்டா உறுப்பினர்களை மட்டுமன்றி சாதாரண பாஸ்க் இன மக்களையும் கொன்று குவித்தது. இவற்றைத் தொடர்ந்து பாஸ்க் மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்நிறுத்தி 1988 ஜனவரி 29 திகதி ஈட்டா போர் நிறுத்த உடன்படிக்கையை முன்வைத்தது. இதைத் தொடர்ந்து அல்ஜீரியாவில் அரசுடன் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைய மீண்டும் தனது பழைய பாதைக்கு திரும்பியது ஈட்டா.

1998 செப்டெம்பர் 17 ஆம் திகதி நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ஈட்டா அறிவித்தது. அதில் "இறைமையுடன் கூடிய பாஸ்க் பகுதியை உருவாக்குவதற்கு நல்ல சந்தர்ப்பம் அமைந்துள்ளது. தற்போதைய புதிய அரசியல் நிலைமைகளில் ஆயுதங்களை தவிர்த்து பேச்சுக்கள் மூலம் தீர்வை எட்டலாம் என நாம் எண்ணுகிறோம்" என்று கூறப்பட்டிருந்தது. 14 மாதங்கள் நீடித்த இந்தப் போர் நிறுத்தம் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததும் முடிவுக்கு வந்தது.

இதன் பின்னர் மார்ச் 2003 இல் ஈட்டாவின் அரசியல் பிரிவான பட்சூனா கட்சியை (Batazuna) உயர்நீதிமன்றம் தடைசெய்தது. இதன் பின்னர் மார்ச் 11 ஆம் திகதி (2004) இடம்பெற்ற மட்ரிட் குண்டு வெடிப்புகளுக்கு பொறுப்பு ஈட்டாவின் மீது சுட்டப்பட்டாலும் பின்னர் அது இஸ்லாமிய பயங்கரவாதிகள் என உறுதி செய்யப்பட்டது. மே 2005 இல் பாராளுமன்றத்தின் அதரவுடன் பிரதமர் லூயிஸ் ரொட்ரீனீயூஸ் ஸப்பட்ரோ (Luis Rodmmnuez Zapatero) வன்முறையை நிறுத்தி அமைதி வழிக்கு பேச்சு மூலம் திரும்பும்படி ஈட்டாவை கேட்டுக் கொண்டார்.

........ அடுத்த இதழில்.....

# உலக அரங்கின் நாட்குறிப்பு

## உலகப் பார்வை

### படியளப்பது யார்?

அமெரிக்காவில் கதரீனா தாக்கி ஏழு மாதங்கள் ஆகிவிட்ட பிறகும் 1.5 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து தொடர்ந்தும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். மீள்கட்டுமானம் என்ற பேச்சே இல்லை. புஷ் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை மீள்கட்டுமானத்திற்காக ஒதுக்கியுள்ளதாக கூறி வருகிறார். ஆனால் மக்கள் இன்னமும் கூடாரங்களில்..... உலகெங்கும் படியளக்கும் அமெரிக்கக் கடவுளின் மக்களுக்கு படியளப்பது யாரோ?

### ஜனநாயகத்தைப் போற்றுவோம்

ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்கப் படைவீரர்களை "ஜனநாயகத்துக்காக உயிர்கொடுத்தவர்கள்" எனப் போற்றியுள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஜனநாயகத்தின் மேல் தான் கொண்டுள்ள அளவுகடந்த அக்கறையே இதற்குக் காரணம் என்கிறார். பணநாயகத்தை நிலைநாட்ட ஜனநாயகத்தைப் போற்றும் அமெரிக்காவின் அடுத்த இலக்கு ஈரானாக சூடானாக அல்லது வெனிசுவேலாவாக எதுவாகவும் இருக்கலாம். இந்தவகை ஜனநாயகத்தை போற்ற நமது நாட்டிலும் ஒரு கூட்டம்.

### இன்னொரு நிக்கரகுவா

பலஸ்தீனத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹமாஸ் அரசாங்கத்திற்கு உதவிகள் அனைத்தையும் நிறுத்தியிருக்கிறது மேற்குலகம். இதன் மூலம் பாரிய நெருக்கடியை ஹமாசுக்கு ஏற்படுத்தி அரசாங்கத்தை கலைப்பதற்கான தொடக்க நடவடிக்கைகளே இவை. 1970களில் இதே போன்றதொரு நிலையை நிக்கரகுவாவில் ஏற்படுத்தி ஆட்சியிலிருந்த சன்டனிஸ்டா அரசைக் கலைத்தது அமெரிக்கா. அதே ஒழுங்குமுறை இப்போது பின்பற்றப்படுகிறது. பலஸ்தீனம் இன்னொரு நிக்கரகுவாவா?

### சியோனிசம் என்பது இதுதானா?

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் விளைவால் பலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கு எல்லையே இல்லை. அண்மையில் வெளியிடப்பட்ட சுகாதார அறிக்கையொன்று தரும் தகவல்கள் இவை.

36 சுகாதார அலுவலர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர், 447 பேர் காயமடைந்துள்ளனர். 129 நோயாளிகள் இஸ்ரேலிய சோதனைச் சாவடிகளில் மரணமடைந்துள்ளனர். 375 சுகாதார நிலையங்கள் மீதும் 383 அம்புலன்ஸ்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. 38 அம்புலன்ஸ்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. சியோனிஸம் என்பது இதுதானா....

### பிரயோசனமில்லாத தீர்ப்பு

இஸ்ரேலிய பாராளுமன்றமான கினெசெட்டுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களின் முடிவுகள் எக்கட்சிக்கும் பெரும்பான்மையை வழங்குவதாக இல்லை. இது இஸ்ரேலுக்கு முதல் முறையன்று, வழமை போலவே தொங்கு பாராளுமன்றமே. எவருக்கும் பெரும்பான்மையை வழங்கி பிரச்சினையை தீர்க்கக் கூடாதென்பதில் இஸ்ரேலிய மக்கள் கவனமாயிருக்கிறார்கள் போலும்.....

### சீனாவின் நட்பும் அமெரிக்காவின் பகையும்

பிரேசில் அரசுடன் பல பொருளாதார ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது சீனா, அதில் முக்கியமானது எண்ணெய் ஒப்பந்தம். பிரேசில் சோளகத்திலிருந்து ஒருவகை எரிபொருள் எண்ணெயை (எதனோல்) உற்பத்தி செய்து வருகிறது. கொண்டனெல்லா ரைஸ் இது குறித்து பி.பி.சி க்கு அளித்த பேட்டியில் "எங்களது பகுதியில் அமெரிக்க நலன்களுக்கு எதிரான செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது" என்றார். எண்ணெய்க்காக அமெரிக்கா மூலை மூலையாக யுத்தம் செய்யும் போது. யுத்தமின்றி இரத்தமின்றி இன்னொருவன் எண்ணெய் பெறுவதை அனுமதிக்க முடியுமா என்ன?

### அண்டப் புளுகு

"சதாம் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறார்" என்பதுதான் அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக்கையில் சொன்ன காரணம். பேரழிவு ஆயுதங்கள் எதுவும் சதாமிடம் இல்லை என்பது வெட்டவெளிச்சமாயுள்ள நிலையில் போரை நியாயப்படுத்த பல விடயங்கள் சொல்லப்படுகின்றன. அமெரிக்க விமானப்படை உயரதிகாரியொருவர் "2001 இல் சதாம் பேரழிவு ஆயுதங்களை சிரியாவுக்கு அனுப்பி விட்டார்" என்றார். இது குறித்து இன்னொரு உயரதிகாரியை கேட்ட போது அவர் "யுத்தத்திற்கு முன்னதாகத்தான் சதாம் பேரழிவு ஆயுதங்களை சிரியாவுக்கும் லெபனானுக்கும் அனுப்பி வைத்தார்" என்றார். 2002 இல் ஐ. நா. பரிசோதகர்கள் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று சொன்னதை நினைவில் கொள்ள வேண்டும்.


இதற்கிடையில் "சதாம் பேரழிவு ஆயுதங்களை வைத்திருந்ததற்கான ஆதாரங்களை போரின் போது நாம் திரட்டியுள்ளோம், 600க்கு மேற்பட்ட ஆவணங்கள் எம்மிடம் உண்டு. தேவை வரும் போது நாம் அவற்றை வெளியிடுவோம்" என்றார். இவர்கள் எல்லோரும் தம் தலைவன் வழி நடப்பவர்கள் அன்றோ......

### மருண்டவன் கண்ணுக்கு

வெனிசுவெலாவில் அண்மையில் கொண்டுவரப்பட்ட ஊடகச் சட்டம் எல்லை மீறிய பாலியல் காட்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதை தடை செய்தது. இவ்விடயத்தை மிக முக்கியமான செய்தியாக கருதிய அமெரிக்காவின் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை பின்வருமாறு எழுதியது "வெனிசுவெலா அரசு, ஊடகச் சட்டம் மூலம் தணிக்கையை நடை முறைப்படுத்துகிறது. இது ஊடகச் சுதந்திரத்தை தடை செய்கிறது." இதை பெரியதொரு பிரச்சனையாக எடுத்து ஏனைய அமெரிக்க ஊடகங்களும் "சாவேஸ் ஊடகச் சுதந்திரத்தை பறித்துள்ளார்" எனக் கதறி அழுது வருகின்றன.

# கைலாசபதியின் உலகக் கண்ணோட்டத்தை மறுக்கும் வகையிலான ஆய்வு முயற்சிகள்

நவீனத்துவத்தின் நெருக்கடிகளும் சிறந்த மானுட உலகை நிர்மாணிப்பதற்கான வாய்ப்புக்களும், கலாநிதி சுனில் விஜேசிறிவர்த்தன. தமிழில், எஸ். சிவகுருநாதன், கைலாசபதி ஆய்வு வட்டம், 29, 42வது ஒழுங்கை, கொழும்பு 06, 2006 மாசி, ப.34, விலை ரூ. 50. 00.




பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை ஒன்றன் தமிழாக்கமான இந்த நூல் கைலாசபதி ஏற்று விருத்தி செய்த உலகநோக்குக்கு எதிர்மறை யானது என்பதுடன் மிகவும் குழம்பிப்போன சிந்தனையொன்றின் குழப்பமான தமிழாக்கமுமாகும். இந்த நூலில் இன்றைய சமூக நெருக்கடிகளினின்று மானுடம் விடுதலை பெறுவதற்குப் பொருள் முதல்வாதம் ஒரு தடையாக உள்ளது எனவும் ஆன்மிக முறையிலான சிந்தனையைத் தவறவிட்டமையே மாக்ஸியம் உட்பட விடுதலைச் சிந்தனைகளின் குறைபாடு எனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

இதைவிட விரிவாக 1983 அளவில் இருத்தலியல்வாதம் பற்றித் தமிழகத்தில் எழுதப்பட்டிருந்தது. அதற்கு முன்பு மாக்ஸியத்தைத் தாண்டிப் போகிற கதைகள் தளையசிங்கத்தால் பேசப்பட்டன. இந்த நூல் மிகவும் பலவீனமான உள்ளடக்கத்தைக் கொண்டது. முதலாளியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்காமல் இன்றைய உலகின் சுற்றுச் சூழல் நெருக்கடி உட்பட்ட பிரச்சினைகட்கு நுகர்வுக் கலாசாரத்தையும் அதன் காரணமாகப் பொருள்முதல்வாத நவீனத்துவச் சிந்தனை மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நூலின் வரலாற்றுப் பார்வை இல்லாமை போக, மாக்ஸியப் பார்வையும் அடிப்படையான ஒரு பகைமையினின்று எழுவதையும் காண முடிகிறது. சுற்றுச் சூழல் சம்பந்தமான மாக்ஸிய அக்கறை பற்றிய விரிவான நூல்கள் பல வந்துள்ளன. மாக்ஸியம் உலகளாவிய முறையில் மனித இனத்தின் பிரச்சனைகளை நோக்கியதால் உரிய முறையில் பண்பாட்டு வேறுபாடுகளைக் கவனிக்கத் தவறிவிட்டது என்றவாறான மாமூலான குற்றச்சாட்டுக்களும் மாக்ஸியம் என்பது வரலாற்று வழியில் விருத்தி பெற்று வருகிற ஒரு சமூக விஞ்ஞான முறை என்பதையும் மாக்ஸிய அக்கறைகள் எவ்வாறு விரிவும் வளர்ச்சியும் பெற்றுள்ளன என்று அறியாமல் மட்டும் முன் வைக்கப்படுவனவல்ல. வேண்டுமென்றே அலட்சியப்படுத்தியும் முன் வைக்கப்படுகிறன.

ஆன்மிகம் என்ற பேரில் மனித இனம் நான்காயிரம் ஆண்டுக்காலமாக ஏய்க்கப்பட்டுள்ளது. ஆன்மீகச் சிந்தனைகளில் மனித நலன் சார்ந்த பண்புகளை நான் மறுக்கவில்லை. எனினும் அறிவுசாராத ஒரு ஆன்மிகத்தின் மூலம் மனித இனத்தை உய்விக்க முடியும் என நான் நம்பவில்லை. எல்லாருக்கும் பொதுவான ஒரு ஆன்மீகம் இருந்த எனவும் அது எப்போதேனும் இயலக் கூடியதாக இருந்தாத என்பதையும் விஜேசிரிவர்த்தனவால் எதுவுங் கூற இயலவில்லை.

நூலின் அடிப்படை நோக்கம் பொருள் முதல்வாதத்தையும் விஞ்ஞானத்தையும் நிராகரிப்பது தான். ஆனால் நவீனத்துவத்தின் நெருக்கடிகள் பொருமுதல்வாதச் சிந்தனையின் விளைவானவையல்ல. அவை விஞ்ஞானத்தின் விளைவுகளுமல்ல. முதலாளியத்தின் வளர்ச்சிப் போக்கில் முதலாளிய வர்க்க நலன் சார்ந்து உருவானவையும் உருவாக்கப்பட்ட நெருக்கடிகளே இன்று மனித இருப்பை மிரட்டுகின்றன. விஜேசிரிவர்த்தனவுக்கு முதலாளியத்தை முறியடிக்க வேண்டிய தேவையே தெரியவில்லை. இதற்கும் மேலாக இந்த நூலைப் பற்றி எழுதுமளவுக்கு அதில் பெறுமதி ஏதும் இல்லை.

எனினும் கைலாசபதி எதெதெற்காகவெல்லாம் பேசியும் எழுதியும் வந்தாரோ அதையெல்லாம் மூர்க்கத்தனமான முறையில் கைலாசபதி ஆய்வு மையம் என்ற பேரில் நிராகரிக்கிற பணிகள் மேற் கொள்ளப்படுவது பற்றி அந்த அமைப்பில் உள்ள நேர்மையானவர்கள் கவனஞ்செலுத்த வேண்டும்.

இந்தச் சிறு நூலில் உள்ள பயன்படக்கூடிய சில தரவுகளையும் விளங்கிக் கொள்ள இயலாதளவுக்கு நினைவுப் பேருரையின் தமிழாக்கம் விறைப்பாகவும் உயிரோட்டமற்றும் தெளிவீனமாகவும் உள்ளது.

**-சிவா-**

---

இலங்கையின்

9ம் பக்க தொடர்ச்சி............

இவர்களது மௌனத்தின் பின்னணிதான் என்ன?

மார்ச் 20ம் திகதி அம்மையார் மலையகத்தின் கொட்டகலையில் நின்றார். இந்திய நிபுணர்களின் உதவியுடன் தாவரதொழில்நுட்ப மையம் ஒன்றின் திறப்பு விழாவில் கலந்து கொண்டார். சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரிக்கு அவசரமாகத் தேவையான மருந்து வகைகளை கொழும்பில் அவரின் காரியாலயத்தில் வைத்துக் கொடுத்தார்.

இவற்றிற்கு மேலாக திருகோணமலையில் ஒரு ஆஸ்பத்திரியையும், மத்திய மலையகப் பகுதியில் வேறு ஒரு ஆஸ்பத்திரியையும் கட்டுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. அத்துடன் 2004 சுனாமியால் வடகிழக்கில் அழிந்து போன சிறிய பாடசாலைகளையும் கட்டுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. வடக்குகிழக்கு மீனவருக்கு மீன்பிடிப்படகுகளும் வலைகளும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் "மனிதாபிமான" வேலைகளில் ஈடுபடுவதில் தமக்கு எதுவித பிரச்சினையும் இல்லையென இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

2004ம் ஆண்டின் சுனாமியோடு இலங்கையின் விவகாரங்களில் இந்தியா நேரடியாகத் தலையிட வாய்ப்பைக் கொடுத்தது. இந்திய இராணுவ அதிகாரிகளும் கப்பல்கபோதி அதிகாரங்களும் உதவி என்ற பெயரில் ஓடோடி வருகின்றனர். இலங்கை அரசுக்கு இராணுவ உதவி முன்பு போல் தொடர்ந்து வழங்கப் படுகிறது.

தற்போது கிழக்கில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப் பட்ட எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுமாம். ஏற்கனவே பெற்றோலியத் துறையில் இந்தியா ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இத்துடன் நின்றுவிடவில்லை. திருகோணமலையில் ஒரு அனல் மின் நிலையமொன்றை இந்தியா நிறுவும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இந் நிலையத்தை நிறுவும் இந்தியக் கம்பனிக்கு 15 தொடக்கம் 25 வருட வரிச்சலுகை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. முதலீட்டுச் சபையின் அனுமதியுடன் நிறுவப்படும் கம்பனிகளுக்கு அக்கம்பனிகள் இயங்கத்தொடங்கி ஐந்து வருடங்களுக்கே பொதுவாக வரிச் சலுகை வழங்கப்படுகிறது. ஆனால் இந்தியக் கம்பனிக்கு மிகப்பெரும் சலுகை வழங்குவதற்கு மிரட்டலா அல்லது அடிபணிதலா என்பது கேள்வியாகிறது.

முன்பு வடக்கின் ஊடாக தனது பிராந்திய மேலாதிக்க விஸ்தரிப்பை முன்னெடுத்த இந்தியா அதில் தோல்வி கண்டது. அப்படிப்பினையின் பின் கிழக்கின் ஊடாக இப்போது பொருளாதார அரசியல் ராணுவக் காய்களை நகர்த்தி வருகின்றது. திருகோணமலை இக்காய் நகர்த்தலின் மையப் பகுதியாகக் காணப்படுகிறது. இவற்றின் ஊடாகப் பார்க்கும் போது கிழக்கில் இடம் பெறும் மோசமான சம்பவங்களுக்கும் இந்திய மேலாதிக்க நலன்களுக்கும் உள்ள உள்ளார்ந்த தொடர்புகளை உணர்ந்து கொள்வது சிரமமான ஒன்றல்ல.

ஆனால் ஒரு விடயம் இந்த இடத்திலே மிகவும் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. ஜே.வி.பி-ஹெல உறுமய மற்றும் பேரினவாத சக்திகள் இந்திய மேலாதிக்கம் பற்றிக் கவலை கொள்ளவில்லை. அதே போன்று தமிழ்த்தரப்பினர் அமெரிக்க ஆதிக்கத்திற்கான ஊடு ருவல் பற்றி அக்கறை காட்டத்தயாராக இல்லை. தத்தமது இருப்பு ஆதிக்கம் பற்றி மட்டுமே அக்கறை யாக உள்ளனர். நமக்கு அமெரிக்க ஆதிக்கமோ இந்திய பிராந்திய மேலாதிக்கமோ தேவைஇல்லை என்ற நிலைக்கு மக்கள் முன்வராத வரை சுதந்திரம், இறைமை, சுயா திபத்தியம், விடுதலை, சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசுவதென்பது வெறும் பம்மாத்துக்களாகவே இருக்க முடியும்.

**-சிறீ-**

---

4ம் பக்க தொடர்ச்சி

இராணுவ துணைப்படை

நிர்வாகத்துறை நியமனங்கள் போன்றவற்றை பெற்றுக்கொடுக்கலாம். பெருந்தோட்டத்துறை வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கலாம். சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இதனைச் செய்யாது மலையக இளைஞர்களைக் கொலைக்களத்திற்கு அனுப்பவே நிற்கின்றனர்.

மனிதவளம் மிகவும் முக்கியமானது. அதுவும் இளம் தலைமுறையினர் செழிப்பான வளமாவர். அவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தி அழிப்பது முதலாளித்துவத்தின் கையாலாகாத்தனமாகும். அந்த சூழ்ச்சியில் மலையகத் தமிழ் இளைஞர்கள் மாட்டிக்கொள்ளக் கூடாது. இராணுவ ஆட்சேர்ப்பை நிராகரிக்க வேண்டும். அவர்கள் ஆளும் வர்க்க சூழ்ச்சியைக் கண்டு கொள்ளவேண்டும்.

---

## அறிமுகம்




ஆபிரிக்கா என்றால் இருண்ட கண்டம்! அங்குள்ள மக்கள் மிருகங்களிடையே நடமாடும் காட்டுமிராண்டிகள்! அவர்கள் நாகரிகமோ, காலசாரமோ, வரலாறோ இல்லாதவர்கள்! அமெரிக்கா சுதந்திரத்தின் சொர்க்கம்! வீரசாகசமிக்கோரின் பிறப்பிடம்!

இவைதான் வெற்றிகொண்டவர்கள் எழுதி வைத்த சரித்திரப் புரட்டுகள்! உலகை அறியாமை இருளிலே மூழ்கடித்த பொய்யான எழுத்துக்கள்!

மனித இன வரலாற்றில் கல்லாலான கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்திய திறமை இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே ஆபிரிக்கர்களுக்குத் தெரியும் என்பதும் ஆசியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நெருப்பை, ஐரோப்பியர்கள் அறிவதற்கு ஒன்றரை லட்சம் வருடங்கள் பிடித்தன என்பதையும் நாம் அறியும் போது வியப்பு மேலிடுகிறதல்லவா!

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆபிரிக்காவின் சிற்றூர்களில் சிறந்த ஊராட்சி அமைப்பு நிலவியது என்ற உண்மையும், ஒவ்வொரு சிறுவனும் கட்டாயக் கல்வியும், உடற் பயிற்சியும் பெற்று வந்தான் என்ற தகவலும், வெள்ளையர்களின் வருகைக்குப் பிறகே ஆப்பிரிக்காவின் கலாசார வரலாற்றில் இருண்ட யுகம் ஆரம்பமாயிற்று என்பதையும் நாம் தெரிந்து கொள்ளும்போது அதிர்ச்சியடையாமல் இருக்க முடியாது.

சாதாரணமாக வெற்றியாளர்களே வரலாற்றை எழுதுகின்றனர் எழுதினார்கள். இந்தக் கசப்பான உண்மையின் தொடர்ச்சியை உடைத்தெறிவதற்காகவே ஏழு தலைமுறைகள் என்ற நூலை அலெக்ஸ் ஹேலி என்பவர் எழுதினார். இந்நூல் அப்பணியைச் செவ்வனே செய்யுமென்பது அவரது நம்பிக்கை ஆசையுங்கூட!

ஆப்பிரிக்காவிலிருந்து கறுப்பு அடிமைகளை விலைக்கு வாங்கி அமெரிக்காவுக்குக் கொண்டு வருவது கி.பி. 1619 இல் துவங்கியது. முதலில் இருபது பேரோடு மட்டுமே ஆரம்பமான இந்தக் கொடுமை கி.பி. 1810 ஆம் ஆண்டில் பத்து லட்சம் எண்ணிக்கையைத் தாண்டிவிட்டது. அவர்களில் பெரும் பாலானோர் பலாத்காரமாக இழுத்து வரப்பட்டவர்களே! கறுப்பு அடிமைகள் இல்லாமல் வெள்ளையர்களுக்குக் காலம் போகாத நிலை ஏற்பட்டுவிட்டது. கறுப்புத் தாய்மார்களின் தாய்ப்பால் பருகி வெள்ளைக் குழந்தைகள் வளர்ந்தனர். கறுப்பர்களின் இரத்தத்தாலும், வெயர்வையாலும், உழைப்பாலும் வெள்ளையர்களின் வயல்கள் செழித்துக் குலுங்கின. வெள்ளையர் கறுப்பரைக்கொண்டு லாப வேட்டையாடினர். கறுப்புப் பெண்களையும் ஆண்களையும் பயன்படுத்திக்கொண்டு தமது காம இச்சையை நிறைவேற்றிக் கொண்டனர். ஆனால் தமது உல்லாச வாழ்க்கைக்காக ஓடாய் உழைத்துத் தேய்ந்துபோன கறுப்பு இன மக்களை வெள்ளையர் மனிதப் பிறவிகளாகக்கூடக் கருதியதில்லை. அதற்கு மாறாகத் தம்மையே நாகரிகமானவர்கள், பண்பாடுடையோர் என்று பச்சைப் பொய்சொல்லிக் கொண்டனர்.

இந்தப் பயங்கரமான அடிமை அமைப்பை ஒழித்துக்கட்டப் பல போராட்டங்கள் வெடித்தன. ஆயிரக்கணக்கான கருப்பு அடிமைகளை விடுதலையை நோக்கி அழைத்துச் சென்ற புரட்சி உணர்வு கொண்ட காப்பரியல், டென்மார்க் வெஸி, நாட்டர்னர் ஆகியவர்களை வெள்ளையர் கைது செய்து தூக்கிலிட்டார்கள். 1852ல் பீச்சர் ஸ்டோவேயின் நாவலான அங்கிள் டாம்ஸ் கேபின் அமெரிக்காவை ஒரு கலக்கு கலக்கியது. அதே ஆண்டு ஃபிரடெரிக் டக்ளஸ் என்ற நீக்ரோ இனத் தலைவரின் சொற்பொழிவுகள் கறுப்பின மக்களை எழுச்சி பெறச் செய்தன. அவர்களை முன்னோக்கி நடத்தின.

கறுப்பினத் தலைவர் ஃபிரடெரிக் டக்ளஸ் 1857 ஆம் ஆண்டு ஆகஸ்டில் கூறிய இச்சொற்களை அமெரிக்கக் கறுப்பர்கள் இன்றும் நினைவு கூர்கிறார்கள்.

"சுதந்திரம் விரும்புகிறோமென்று ஒரு பக்கம் கூறிக்கொண்டே மறுபக்கம் போராட்டத்தை வெறுப்பவர்கள் வயலை உழாமலேயே அறுவடை செய்ய விரும்புபவர்கள். இடியும் மின்னலும் இல்லாமலேயே மழை பொழிய வேண்டுமென்பவர்கள். கடல் ஆர்ப்பரிக்காமல் இருக்க வேண்டு மென்பவர்கள்"

"கேட்காமல், போராடாமல் ஆட்சியாளர்கள் எதையும் தரமாட்டார்கள். இதுவரையில் அப்படி நடைபெற்றதில்லை. இனிநடக்கப் போவதுமில்லை. சுரண்டலுக்குட்படுபவர்களின் பொறுமையைக் கொண்டு சுரண்டுபவர்கள் பாதுகாப்பு அரணை அமைத்துக் கொள்கிறார்கள்"

"வெள்ளையர்கள் கொடுப்பவர்களாகவும், கறுப்பர்கள் பெற்றுக் கொள்பவர்களாகவும் இருக்கும் நிலைமை ஒழிந்து, இருவரும் சம பங்காளிகளாக இருக்கும் அமைப்புக்காக அமெரிக்கக் கறுப்பினம் போராடிக் கொண்டிருக்கிறது"

இப்போராட்ட எதிரொலிகள் அலெக்ஸ் ஹேலியின் "ஏழு தலைமுறைகள்" எனும் இந்நாவலின் அடிமைச் சேரிகளில் பலமுறை கேட்கின்றன.

1852 ஆம் ஆண்டில் வெளி வந்த 'அங்கிள் டாம்ஸ் கேபின்' நாவலுக்குப் பிறகு கடந்த நூற்றியிருபது வருட நீண்ட காலத்தில் உலகத்தையே குலுக்கிய இது போன்ற புத்தகம் வேறெதுவுமே வந்ததில்லை. இது இரண்டு கண்டங்களின், இரு இனத்தவரின், இரண்டு நூற்றாண்டுகளின் எதார்த்தமான, வேதனை நிறைந்த வரலாற்றுக் கதை!

அமெரிக்காவில் படிக்கத் தெரிந்த ஒவ்வொரு கறுப்பு மனிதனும் இந்த நூலைப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டான். படிப்பறிவில்லாத ஒவ்வொரு கறுப்பனும் அதை வாங்கி, பைபிளைப்போல் தன் வீட்டில் பத்திரப்படுத்திக் கொண்டான். தனது முன்னோர்கள் புரிந்த கொடுமைகளுக்குத் தலைகுனிந்த ஒவ்வொரு வெள்ளையனின் கண்களும் இந்நூலின் பக்கங்களில் சிக்கிக் கொண்டன.

ஆங்கில மூலத்தில் சுமார் எழுநூறு பக்கங்கள் கொண்ட இந்நூலைத் தமிழ் வாசகர்களின் வசதிக்காகச் சுருக்கித் தந்துள்ளோம் என்றாலும் மூலத்தின் சாரம் குன்றாமல் கொண்டுவர முயன்றுள்ளோம். பதிப்பகத்தா

பி. கு:- அலெக்ஸ் ஹேலி என்ற ஆபிரிக்க- அமெரிக்கர் அமெரிக்காவின் கறுப்பின மக்களின் வரவையும் அவ் வரலாற்றையும் ROOTS என்ற பெயரில் நாவலாக வெளியிட்டார். அற்புதமான நூலின் சுருக்கப்பட்ட தமிழ் மொழியாக்கம் "ஏழு தலைமுறைகள்" என்ற பெயரில் ஏற்கனவே வெளிவந்தது. தமிழ் நாடு "சவுத் விஷன்" மூன்றாவது பதிப்பாக வெளிட்டுள்ள அந் நாவலின் அறிமுகக் குறிப்பிலிருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிடுகின்றோம். (ஆ. ர்)

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று13 வைகாசி 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 91

# மலையக இளைஞர்களின் படங்கள் சி.ஐ.டி யினரால் சேகரிப்பு! ஏன்?

மலையக இளைஞர்கள் தேடுதல்கள் விசாரணைகள், தடுத்து வைப்புகள் போன்ற இம்சைகளுக்குள்ளாகி வருகின்றனர். கடந்த சில வாரங்களாக மலையகத்தில் தமிழர்களின் வீடுகளுக்கு செல்லும் சிலர் தங்களை சி.ஐ.டி. யினர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு அவ்வீடுகளில் வசிக்கும் இளைஞர்களின் விபரங்களை சேகரிப்பதும் கட்டாயப்படுத்தி அவர்களின் புகைப்படங்களையும் வாங்கிச் செல்வதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புகைப்படங்களை உடனடியாக கொடுக்காதவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் புகைப்படங்களை எடுத்துத் தரும்படி ‘அந்த சி.ஐ.டி யினர்’ வற்புறுத்தி வருவாதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இலங்கையில் வாழும் பிரஜைகள் அனைவரினதும் விபரங்களை திரட்டி வைக்கும் பாதுகாப்பு முறை நடைமுறையில் இல்லை. ஆனால் கைதுசெய்யப்படும் தமிழர்களின் விபரங்கள், கைவிரல் அடையாளங்கள், படங்கள் என்பவற்றை எடுத்துக் கொள்ளும் சட்ட விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் பொலிஸாரும், பாதுகாப்பு படையினரும் ஈடுபட்டுவருகின்றனர்.

மலையக மக்கள் ஏனையோர் போன்று சாதாரண ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதற்கு பல வித தடைகள் விதிக்கப்படுகின்றன. கூட்டம் கூடுவது ஆர்ப்பட்டங்கள் செய்வது. கருத்துக்களை வெளியிடுவது, போஸ்டர்கள் ஒட்டுவது, துண்டுப்பிசுரங்களை விநியோகிப்பது போன்ற சாதாரண நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் அச்சுறுத்தப்படுவதுண்டு. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பிரத்தியேகா வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்கள் போன்றோரும் கண்காணிக்கப்படுகின்றனர்.

அந்தவகையிலேயே மலையக இளைஞர்களின் படங்கள் சேகரிக்கப்படுகின்றன. இதனால் இளைஞர்களின் வாழ்க்கை பாதுகாப்பற்றதாகவே இருக்கிறது. சி.ஐ.டி என்ற கூறிக்கொண்டு மலையக இளைஞர்களின் படங்களை சேகரித்து வரும் சிலரின் நடவடிக்கையால் மக்கள் அமைதியற்று இருக்கின்றனர். மலையகத் தலைவர்கள் எனப்படுவோர் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர். ஏனெனில் தங்களது எசமானர்களான பேரினவாத அரசாங்கத் தலைவர்களைச் சிரமப்படுத்த அவர்கள் தயாராக இல்லை. சாதாரண மலையக மக்களின் பிரச்சினைகள் இத்தலைவர்களுக்கு அர்ப்பமானவைகளேயாகும். வாக்குகள் வாங்குவதில் வல்லவர்களான இவர்களுக்கு மலையக மக்களை ஏமாற்றும் வித்தைகளும் நன்கு தெரிந்தவைகளேயாகும்.




இராகலையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் குயில் தோப்பு மகேந்திரன் உரையாற்றுவதையும் தலைமைதாங்கிய ச.பன்னீர்செல்வம், மற்றும் இ.தம்பையா அமர்ந்து இருப்பதையும் காணலாம்.

## படுகொலைகள்..........

1ம் பக்க தொடர்ச்சி...

.அக்கறையுள்ள அனைத்து மக்களும் வெளியிடுகின்றார்கள்.

நாட்டில் பேரினவாத ஒடுக்குமுறையானது அரசியல் தீர்வுக்குப் பதிலாக கொடிய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டது. அதனை எதிர்த்தே தேசிய இன விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கால் நூற்றாண்டு காலத்திற்குப் பின்பும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத சூழலில் நான்கு வருடங்களுக்கு முன்பு புரிந்துணர்வு- யுத்த நிறுத்த உடன்பாடு காணப்பட்டது. ஆனால் அரசாங்க- புலிகள் இயக்கப் பேச்சுவார்த்தை தீர்வு நோக்கிய பாதையில் முன்னெடுக்கப்படவில்லை. அரசாங்கம் தனது பேரினவாத ஒடுக்குமுறை நிலைப்பாட்டிலிருந்து விடுபடவோ கீழிறங்கவோ தயாராக இல்லை. காலத்தை இழுத்தடித்து ஏமாற்றிச் செல்லும் சூழலில் ஆங்காங்கே யுத்த நிறுத்த மீறல்கள் இடம் பெற்று வந்துள்ளன. அவற்றின் நீடிப்பாகவே இன்றைய படுகொலைகள் வடக்கு கிழக்கிலும் கொழும்பிலும் இடம் பெறுகின்றன.

இன்று ஏற்பட்டுள்ள படுகொலைச் சம்பவங்களானது அரசாங்கத்தினதும் சகல ஆயுதத் தரப்புகளினதும் பாசிச முனைப்பை வெளிப்படுத்துகின்றன. 1988- 89 காலப்பகுதியில் இடம் பெற்ற படுகொலைகளின் ஊடான ஒரு பயங்கர நிலை தோன்றியுள்ளதாகவே உணர முடிகின்றது. அத்துடன் அப்படுகொலைகள் புரியப்படுவதை ஊக்குவிக்கக் கூடிய அந்நிய சக்திகளின் நிலைப்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. தீவிரமான சமாதானக் குரல்களுக்குப் பின்னால் யுத்த முனைப்புகள் இருந்து வருவதை இலகுவில் புறம் தள்ளி விடவும் முடியாது.

இவற்றின் ஊடே ஒரு விடயத்தை அவதானிக்கவும் முடிகிறது. இங்கு நிழல் யுத்தமும் நாளாந்தப் படுகொலைகளும் இடம் பெறுவதன் ஊடாக இங்கு அந்நியப்படைகள் வந்திறங்குவதற்கான தளம் அமைக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் எழவே செய்கிறது. அமெரிக்கா தலைமையிலான மேற்குலக யபபானிய சக்திகள் ஒரு புறமாகவும் இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகள் மறுபுறமாகவும் ராணுவத் தலையீடு பற்றிச் சிந்திக்கச் செய்கின்றன. அண்மையில் யப்பானிய விஷேட பிரதிநிதி அக்காஷி வெளியிட்டுள்ள கருத்தில் இலங்கைக்கு ஐ.நா. படைகள் வரவழைக்கக் கூடிய அவசியம் எழவில்லை என்று குறிப்பிட்டமை தற்செயலான கூற்றல்ல. அக்கூற்று உணர்த்துவது யாதெனில் ஐ.நா. படை பற்றியும் அவர்களது மட்டத்தில் விவாதிக்கப் படுகின்றது என்பதேயாகும்.

அதேநேரம் இந்தியப் படைகள் இங்குவரமாட்டாது என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை. முன்னைய அனுபவம் காரணமாக மீண்டும் வரமாட்டாது என்பது சிறுபிள்ளைத்தனக் கண்ணோட்டமாகும். அவ்வாறே அமெரிக்கப்படை இறக்கமும் கற்பனையானது என்றோ கம்யூனிஸ்டுக்களின் வழமையான கண்ணோட்டோம் என்றோ புறந்தள்ளிவிட முடியாது. அவர்களுக்கு அவர்களது மேலாதிக்க நலன்களே அடிப்படையானதும் அவசியமானதுமாகும்.

அதற்காக தாழ்நிலையில் இருக்கும் முரண்பாடுகளைப் பகை நிலைக்குத் தள்ளிக் கொள்ள சகல முயற்சிகளையும் எடுப்பார்கள். முரண்பாடுகள் ஒடுக்குமுறையாகவும் போராட்டங்களாகவும் வளரும் போது அதிலும் நன்மை அடைவார்கள். மேலும் தமது நலன்கள் தேவைகள் பொறுத்து சமாதானமும் பேசுவார்கள். தமக்களவான தீர்வையும் திணிப்பார்கள். அவை சரிப்பட்டு வராது விட்டால் ஏதாவது பெயரிலான படைகளை இறக்கியும் கொள்வார்கள்.

இலங்கையைப் பொறுத்த வரை தேசிய இனப்பிரச்சினை அமெரிக்க- இந்திய மேலாதிக்கப் போட்டியின் களமாகவே இன்று மாற்றப்பட்டுள்ளது. இந்த இரத்தம் பாயும் கொலைகளத்தில் எவ்வாறு இவர்கள் தமது ஆட்டங்களை ஆடுவது என்பதே அவர்களுக்குள் இருந்து வரும் பிரச்சினையாகும். இதில் வடக்கு கிழக்கு யுத்தகளமாகி சுடுகாடு ஆகிப் போனாலும் அவர்களுக்கு கவலை கிடையாது. ஏனெனில் கொல்லப்படுவது பொதுமக்களாகவும் வெல்லப்படுவது அவர்களின் நலன்களாகவுமே உள்ளன.

இந்த ஆபத்தையும் மக்களினதும் நாட்டினதும் எதிர்காலம் பற்றிச் சிந்தித்து செயல் படவேண்டியது அரசாங்கத்தினதும் புலிகள் இயக்கத்தினதும் கடமையாகும். இருதரப்பினரும் ஏனைய அரசியல் சக்திகளும் இதனை எந்தளவுக்கு உரிய கவனத்திற்கு எடுப்பார்கள் என்பதே நியாய சிந்தனையும் துூரநோக்கும் கொண்ட மக்கள் நலன் விரும்பும் நேர்மையான சக்திகளின் எதிர்ப்பார்ப்பாகும்.

எனவே வடக்கு கிழக்கிலும் அதற்கு வெளியிலும் இடம் பெற்றுவரும் படுகொலைகளை உடன் நிறுத்தக் கூடிய பொறுப்பு மிக்க நடவடிக்கைகளை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் ஏனைய ஆயுத தரப்பினரும் எடுக்க வேண்டும். அதன் மூலம் தடைப்பட்டுப் போன ஜெனிவாப் பேச்சுவார்த்தையை தாமதியாது முன்னெடுக்க வேண்டும் என்பதையே புதிய பூமி வற்புறுத்துகின்றது.

*யுத்தத்தை எதிர்த்து சம்பூர....*

1ம் பக்க தொடர்ச்சி

இயக்கம் மீண்டும் கட்டிவளர்க்கபடாவிடின் யுத்த நிறுத்தம் என்பதோ அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தை என்பதோ அர்த்தமுள்ளதாக இருக்கப்போவதில்லை. தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்வதை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வை காண்பதற்கான யுத்த எதிர்ப்பு வெகுஜன இயக்கம் பலமானதாக கட்டப்பட வேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்கா ஜப்பான், இந்தியா போன்ற சக்திகளின் தாளத்திற்கு ஆடுகின்ற நிலைமையே தொடரும். யுத்தம் நடைபெறுகின்றபோதும் பல சக்திகள் அவற்றின் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்தன. சமாதான காலம் என்று கூறப்படும் இக்காலகட்டத்திலும் பல விதமான சக்திகள் அவற்றின் நிகழ்ச்சி நிரலைக் கொண்டே செயற்படுகின்றன. தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்கின்ற அரசியல் தீர்வே அவசியமானதாகும். அதற்காக அழுத்தம் கொடுக்கும் பரந்துபட்ட வெகுஜன இயக்கம் இப்போது அவசியமாகும்.

மக்களின் எதிர்ப்பையும் மீறி மேல் கொத்மலைத்திட்டம் முன்னெடுக்கப் படுகிறது. மலையகத் தலைமைகளின் காட்டிக் கொடுப்பாலும், மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தில் ஊடுருவி இருந்த புல்லுருவிகளாலும் மக்களின் எதிர்ப்பியக்கம் பின்னடைவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. புதிய- ஜனநாயக கட்சி ஏனைய அமைப்புகளுடன் இணைந்து மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தை முன்னெடுக்கும் அத்திட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கான பன்முகப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ. தேவராஜா உரையாற்றும் போது, மே தினம் என்பது உலகப் பாட்டாளி வர்க்கத்தினதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் போராட்டத்தினமாகும். இதனைக் கொண்டாடும் அருகதை இன மொழி பிரதேச அடையாளங்களைக் கடந்து உழைக்கும் மக்களுக்குரிய கட்சியாக செயல்பட்டு வரும் புதிய- ஜனநாயகக் கட்சிக்கே உரியதாகும். ஏனைய கட்சிகள் தத்தமது முதலாளித்துவ அரசியல் ஆதிக்கத்தின் இருப்புகான விழாவாகவே மேதினத்தை நடாத்தி ஏமாற்றி வருகின்றன. இன்று மகிந்த சிந்தனையை ஏற்று அரசாங்கத்தில் அங்கம் பெறக் காத்து நிற்கும் அண்ணன் தம்பிகளான சந்திரசேகரனும் ஆறுமுகமும் அல்லது ஏற்கனவே சாமரை வீசி வரும் தலைமைகளும் மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொள்ள வைத்து அதன் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்கான கோரிக்கையை முன்வைத்து வென்றெடுக்க தயாராக உள்ளனரா என்பதை மலையக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். உயிரினங்களைப் பாதுகாப்பது தான் மனித நாகரீகம். ஆனால் புத்த தர்மத்தைப் போற்றும் மகிந்த சிந்தனையின் கீழ் தலைகள் வெட்டப்பட்ட முண்டங்களையும் முண்டங்கள் அற்ற தலைமைகளையுமே ஆங்காங்கே காண முடிகின்றது. இவை அனைத்திற்கும் உரிய உறுதியான தீர்வு சுய நிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதேயாகும் அதற்கான பேச்சுவார்த்தையை தாமதம் இன்றி முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

5ம் பக்க தொடர்ச்சி

**ஏகாதிபத்திய சூழ்ச்சி .....**

ஏற்குமாறு மூன்றாம் உலக நாடுகளின் ஆளும் வர்க்கத் தலைமைகளிடையே நிர்ப்பந்த சூழலின் ஊடே திணிக்கப்பட்டது. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் உலக வர்த்தக அமைப்பு என்பன அந் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் ஆலோசனைகள் வழிகாட்டல்கள் என்பனவற்றைத் தீர்மானமாக்கி திணித்து வந்துள்ளன. அத்துடன் நவீன தகவல்தொழில் நுட்பம் கணினிமயமாக்கல் என்ற மாயமான் போக்குகளும் கவர்ச்சிகரமானவையாகக் காட்சிப் படுத்தப்பட்டும் வருகின்ற சூழல் அதிகரித்துச் செல்கிறது. இவற்றை தமக்குரிய வகையிலான சொந்தத் திட்டங்கள் மூலம் முன்னெடுக்க அல்லது தீயவற்றை நிராகரிக்கக் கூடிய துணிவோ ஆற்றலோ அநேகமான மூன்றாம் உலக நாடுகளின் தலைமைகளுக்கு இருக்கவில்லை. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார அரசியல் ராணுவ ஆதிக்க மிரட்டலுக்கு அடிபணிந்து அடிமை சேவகம் செய்யும் தலைமைகளாகவே அவை இருந்தும் வருகின்றன. இதனால் இவ் ஆளும் வர்க்க சக்திகள் நாட்டின் சொத்து சுகம் பெற்று ஆடம்பரவாழ்வு நடாத்தும் ஒரு சிறுபான்மையினர் சார்பாகவே செயல்படுகிறார்கள்.

இவை அனைத்தையும் ஏகாதிபத்தியம் கடந்த கால் நூற்றாண்டிற்கு மேற்பட்டகாலத்தில் நமது நாடு உட்பட மூன்றாம் உலக நாடுகளில் விரித்த உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரல் என்ற பெரு வலையில் சிக்கவைத்தே செயலாற்றி வருகின்றது. இந்த வலையில் இந்நாடுகளின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வரும் ஆளும் வர்க்க தலைமைகளும் பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் தலைமைகளும் மட்டுமன்றி போராட்டங்களில் ஈடுபட்டுள்ள தலைமைகளும் ‘பயன்படுத்தல்’ ‘தந்திரோபாயம்’ ‘எதிரிக்கு எதிரி நண்பன்’ என்பனவற்றின் மூலம் சிக்கியுள்ள போக்கையே காணமுடிகின்றது.

முதலாளித்துவத்தின் உச்சகட்டமான ஏகாதிபத்தியம் சுரண்டல் பெருலாபம் மூலதனக் குவிப்பு என்பனவற்றுக்காக உலகில் எதையும் எப்போதும் செய்யத் தயங்காது என்பதே அடிப்படையாகும். யுத்தமும் இரத்தமும் தான் ஏகாதிபத்தியத்தின் தெளிவான அடையாளச் சின்னங்களாகும். உலகின் இல்லாமைகள் தீமைகள் அநீதிகள் கொடூரங்களின் மூலவேராக இருந்து வரும் ஏகாதிபத்தியமே உலக மக்களின் இன்றைய பொது எதிரியாகும். இதனைத் தோற்கடிப்பதே உலக மக்களின் கடமையாகும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.